உ

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நமஃ

# தேசாந்தர சமஸ்காரத்துடன் கூடிய சித்தாந்த திருக்கணிதம்.

இது

பலதீபிகை, புட்பபந்தம், சூரிய ஸித்தாந்த சோதிட கணிதம்,
நீலகண்ட தாஜிக சமிக்ஞா தந்திர சகமஸ்புட விவேகம்,
ஸ்ரீபதி ஜாதக கர்ம பத்ததி, மயநூலென்னுஞ்
சிற்பரத்நாகரம், விஸ்வகர்மீய ஆயாதிப் பொருத்த விளக்கம்,
மச்ச சாஸ்திரம், வைத்திய ரத்ந வசன பூஷணம்
இவைகளின் பதிப்பாசிரியர்கள்

**பறங்கிப்பேட்டை**

**சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்களாலும்**

நையாறு லுத்தரன் மிஷன் பெண்கள் கலாசாலைத் தமிழ்ப்
பண்டிதரும் மதுரைத்தமிழ்ச் சங்கத்து வித்துவானுமாகிய

**ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளை அவர்களாலும்**

பரிசோதிக்கப்பெற்று

கூடலூர் தாலூக்கா மிட்டா சென்னப்ப நாய்க்கன் பாளை
நைனார்பேட்டை உயர் திருவாளர்

**ச. அ. முருகேச முதலியார் அவர்க**

உதவியால்

**பறங்கிப்பேட்டை கணித சோதிட**

**சு. ஏ. முத்துக்குமாரஸ்வாமி ஆச்**

பிரசுரஞ் செய்யப்பெற்

**ஆங்கீரஸ ஹு விருச்சிக**

*Copy Right.*] 1932

Printed at the

**Manoranjini Press,**

2, Ramanuja Iyer Street,

**Sowcarpet, :: :: Madras.**

1932

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

இது

சீகாழி கல்விக் கழக வித்துவானும் தருமபுர ஆதீன

வித்வ சிரோன்மணியுமான

## ஸ்ரீமத் ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளையவர்கள்

இயற்றியது.

உலகவை யுவக்க வும்பரார் மகிழ வோங்கற நூற்றுறை மலிக
திலகவா ணுதலெம் பருப்பத மடந்தை திருவருள் பாலிப்ப புடவி
யிலகுறு செய்ய வம்புயா தனியி னின்னலம் மெழில்பெற மறையி
னலகிலை யுணர்த்தும் பனுவலான் கருணை யனைத்தகத் தினுஞ்சிறந்திடவே 1

கண்ணுதற் பரமன் கருணையா லுயிர்க்குக் கடைக்கணித் தருள்தர கவினிப்
பண்ணுலா மனந்த மறைப்பொரு ளொழுக்கம் டாரிடைச் சோதிடப் பனுவற்
கண்ணதா நிகழு மக்கலைக் கணிதங் கணக்கில திருக்கணி தந்தா
னெண்ணுலாய்மேன்மை யியைதருமென்ன வெடுத்தன ரிசைத்தனர் யாரோல்

பிரமசித் தாந்தம் வசிட்டசித் தாந்தம் பிரபல ஆரியபட் டீயம்
தரமிகு கிரக லாகவஞ் சீர்த்தி சார்பல தீபிகை சோதிர்
சாமுறு கணிதஞ் சாட்சியா வுளசித் தாந்தமெய்ச் சிரோன்மணி யிவற்றின்
உரகனி கண்ட உத்தம முனிவர் உரையிலைவக் கோதிய மரீசி 3

புண்ணிய குருமல் லாரியா சிரியப் புங்கவ ரெனப்பல புனிதர்
கண்ணிய ரிவர்தங் கருத்தினுக் கிசைந்த கதனமார் திருக்கணி தத்தை
எண்ணிய பலநூ லாய்ந்துதா ரணத்தோ டிலகுற வெழுதியச் சிட்ட
அண்ணலம் பெரியோன் யாரெனவினவி னமைதியி னியயபுவன் கேண்மோ

மறுவறுஞ் சிறப்பின் மாதராற் படிய வண்டட வோதிமத் தோடு
நறுமலர் சலச முறழ்தருந் துடவை நாகர்த முலகினை மருட்டும்
நிறைபல வளமும் நற்குடிச் சிறப்பும் நீண்முடி மன்னவ ரிருப்பும்
பிறைமுடி யகமுஞ் சேர்வுறும் பறங்கிப் பேட்டைமா நகரிடை வாழ்வோன் 5

சிற்பநூற் கலையுஞ் சோதிடத் திறமுஞ் சேரிய லாயுணு னலமும்
பொற்புற வுணர்ந்தோன் புண்ணிய முதனப் புந்தியில் வைத்தனு தினமுங்
கற்புறப் பணிவோன் காட்சிசே ரழகன் கருதுமே காம்பரா சாரிக்
கொற்றசேய் முத்துக் குமாரசாமிப்பேர் குலவிய நாவல ரேறே 6

சிவமயம்.

# சித்தாந்த திருக்கணிதம்

# முன்னுரை.

உலகம் போற்றும் உமாமகேஸ்வரியார்க்கு முற்காலத்தில் முக்கண் முதல்வன் அருளிச் செய்த நூலே, நீர் சூழ்ந்த இந்நில வுலகின்கண் நிலைத்திருக்கும் மக்களுக்கெல்லாம் சிறந்துள்ளதும் நான் மறை யென்று யாவரும் போற்றத் தகுந்ததும் ஆகிய வேத மாகும். அவ்வேதம் ஆறு அங்கங்களையும் தனக்குச் சிறந்த உறுப் பாகக் கொண்டு விளங்குகின்றது. இவ்வாறு அங்கங்களுள் **ஜோதி டம்** என்பது ஒன்றாகும். அதற்கு அநேக கணிதங்கள் உள. அவற்றுள் **திருக்கணிதம்** என்பதொன்றே சிறந்ததாகும்.

**திருக்கணிதம்** விழுமியதாகிய அளவையால் ஒரு விஷயத்தை அறிந்து கொள்வது. அதை இப்பொழுது ஜோதிடத்ருடப் பிர மாணம் என்று யாவரும் வழங்குவர். ஜோதிடம் பார்த்தல் மங்கல காரியங்களுக்கும் இன்னும் மானிடர்களாற் செய்யப்படும் அநேக வைதீகச் சடங்குகளுக்கும் அவசியமானது.

ஜோதிட நூல்கள் பல இருக்கின்றன. அவற்றுள் வடமொழி யினுற் செய்யப்பட்டன பல; தென் மொழியினுற் செய்யப்பட் டன பல; இதர மொழிகளிலும் ஆக்கப் பட்டுள்ளன பல. இந் நூல்களுள் இதுகாறும் வெளிக்கு வராத பல அரிய பெரிய விஷ யங்களைக் கற்றோரும் மற்றோரும் எளிதில் அறிந்து கொண்டு அவற் றின்படி நடந்துகொள்ளவேண்டும் என்கிற நன்மனதுடன் பறங் கிப்பேட்டை ம-rா-rா-ஸ்ரீ சு. ஏகாம்பர ஆச்சாரியார் அவர்கள் குமா ரர் **முத்துக்குமாரஸ்வாமி ஆச்சாரியார்** என்பவர் எல்லாக் கணிதங் களுக்கும் சிறந்ததாகிய **திருக்கணிதம்** என்பதை அச்சிடுவிக்கின்ற னர். இவர் இதற்கு முன் பலதீபிகை முதலிய பலநூல்களை அச் சிட்டிருக்கின்றார். இன்னும் அநேக நூல்களையும் அச்சிடுவா ரென்று நோக்குகின்றேன். திருக்கணிதத்தின் பெருமையைப் பின் வரும் ஆதாரங்களாற் கண்டு கொள்க.

**பிரம சித்தாந்தம்** :—"த்யானக்ரஹோபவேஸாத்பீஜம்ஜ்ஞாத் வாஸ~ தைவக்ஞை:" தத்ஸமஸ்க்ருத க்ரஹேப்ய:கர்த்தவ்யௌ நிர்ணயாதேஸௌ என்று கூறுகிறது. இதன்தமிழ்: அவ்வக் காலங்களுக்கேற்ற திருக்ஸ்புடத்தை நன்கு ஆராய்ந்து அறிந்து கொண்டு அதற்கு உரிய விசேஷ சமஸ்காரங்களை ஆலோசித்தல் வேண்டும் என்பதேயாம்.

**வசிஷ்ட ஸித்தாந்தம்**:—"இத்தம்மாண்டவ்யஸம்க்ஷேபாத் யுக்தம்சாஸ்த்ரமயோத்தமம் விஸ்ரஸ்தீரவிசந்த்ராத்யைர்பவிஷ் யதியுகேயுகே" என்கின்றது. இதன் பொருள்: காலபேதத்தால் சூரியாதி கிரகங்களுக்குக்கொஞ்சம் கதிபேதங்கள் உண்டாகுமாக லின் அந்தந்தக் காலத்தில் வேண்டிய சமஸ்காரங்கள் அங்கீகரிக் கப்பட வேண்டு மென்பதே.

**ஆரியபடீய தந்திரம்**:—"கூதிரவியோகாத்திநக்ருத்ரவீந்து யோகாத்ப்ரஸாதிதஸ்சேந்து சசிதாராக்ரஹயோகாத்ததைவதாரா க்ரஹாஸ்ஸர்வே" என்று உரைக்கின்றது. இதன் அர்த்தம்: பூர்வ சித்தாந்தங்கள் உபதேசிக்கின்ற கிரகபகணுதி கணிதங்களில் வித்தியாச முண்டாகுமென்றும் அதைத் திருக்துல்யஞ் செய்து கொள்ளவேண்டும் என்றும் அறியக்கிடக்கின்றதேயாம்.

பாஸ்கராசாரியார் இயற்றிய **ஸித்தாந்த சிரோமணி**:—"யாத்ரா விவாஹோத்ஸவஜாதகாதௌளகேடை: ரேவபலஸ்புடத்வம்ஸ்யாத் ப்ரோச்யதேதேநபஸ்சராணும்ஸ்புடகிரியாத்ருக்கணிதைத்ருத்யா" என்று கூறுவதும் கவனிக்கத் தக்கதாம். அன்றியும் இதனையே பாகல்கோட்டை ஸ்ரீமத் வெங்கடேச தைவக்ஞர் தாமியற்றியுள்ள திருக்கணித தந்திர கிரந்தமாகிய ஜோதிர் கணிதத்துப் பிரதம பரிச்சேதத்திலும் மேற்கோளாகக் கொண்டுள்ளார்கள். இவைகளுமே யன்றிக் **கிரகலாகவ** உரையாசிரியராகிய ஸ்ரீ மல்லாரி பட்டர் "மேயாந்திருக்துல்யதாம்" எனக்கூறும் வியாக்கியானமும்,

**ஸித்தாந்த சிரோன்மணி**:—உரையாசிரியரான ஸ்ரீ மரீசிமுனிவர் "யஸ்மின்பக்ஷேயத்ரகாலேயேநத்ருகணிதைக்யகம்" என்று கூறும் வசனமும், "திருக்ஸமே பர்வணி" என்று கூறும் **கர்க்க ஸம்மிதை** சுலோகமும், மந்த்ரேஸ்வர முனிவர் தாமியற்றியுள்ள **பலதீபிகை** முதலத்தியாயத்து "கதைர்த்ருக்துல்யத்வம்கணித கரணை: கேசரகதிம்விதித்வாதத்பாவம்பலமபிசபலமந்தை[8] கதையது" என்று சொல்லும் வசனமும் ஏற்றனவா மாறுங் காண்க. ஆகவே இக்காரணங்களால் ஜாதக கணிதர்களுக்கு அத்தியா வசியகமானது **திருக்கணிதமே** என்பதையுந் தெரிந்திடுக.

இந்நூலில் இலங்கா மத்தியான்ன த்யுகணம், சூரியாதி நவக்கிரகங்களுக்குப் பிரதம-துதீய-திருதீய-சமஸ்கார கணனங்கள், தேசாந்தர சமஸ்கார கணனம், திருக் சமஸ்கார கணனம், கதிஸ்புட கணனம், சுதேசத்திற்கு சூரியாதி நவக்கிரகங்களின் சுத்த ஸ்புடங்கள், அகசு-திதி-நட்சத்திர-யோக கணனங்கள், சுதேச ராசிமான கணனம், உடுதசா காலச் சக்கரதசா கணனங்கள் தசவர்க்கச் சக்கரங்கள் முதலியன ஓர் ஜாதக மூலமாக உதாரண வாயிலாய்க் கணித்துக் காட்டப் பெற்றிருக்கின்றன.

இந்நூலை அரிதில் தேடித் தக்க ஆதாரங்கள் காட்டிச் செவ்வனே பிரசுரிப்பவராகிய ஆச்சாரியார் அவர்களுக்கு இத்தமிழுலகம் மிக்க கடப்பாடுடையதாய் இருக்கின்றது.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு"

இங்ஙனம்,

சீகாழி,
20-10-1932.

தருமபுர ஆதீன வித்துவ சிரோன்மணி,
**ப. அ. முத்துத்தாண்டவராயன்.**

உ

குஹஜயம்.

ஓம் குமார குருப்யோ நம:

தேசாந்தர சமஸ்காரத்துடன் கூடிய

# சித்தாந்த திருக்கணிதம்.

## பதிப்புரை.

---

உலகம் போற்றும் வேதாங்கங்களில் நேத்திராங்கமாய் மிளிரும் ஜோதிட சாஸ்திரமானது கணிதம்-ஜாதகம்-முகூர்த்தம் என்னும் மூன்று ஸ்கந்தங்களை யுடையது. கணனம் இரண்டு விதமாம். ஒன்று பஞ்சாங்க கணனம் அல்லது சாரகணனம். மற்றொன்று ஜாதக கணனம் அல்லது ஸ்புட கணனம். இவ்விரண்டில் இது ஸ்புட கணனமாம். இது குறிப்பிட்ட நேரத்திற்குச் சுதேசத்தில் சூரியாதி கிரகங்கள் இத்தனை இராசி பாகை கலை விகலைகளில் இருக்கின்றன வென்பதை ஸ்பஷ்டமாய்த் தெரிவிக்க வல்லது. இவ்வித கணிதம் பல்வகைச் சித்தாந்தத்தது. அவற்றுள் இச் சித்தாந்த திருக்கணிதமும் ஒன்று. திருக்கணிதமே விசேஷமுடையதெனப் பிரமசித்தாந்தம் - வசிஷ்டசித்தாந்தம் - ஆரியபடீயம் - சித்தாந்த சிரோன்மணி - வெங்கடேச தைவக்ஞர் இயற்றிய ஜோதிர்கணிதம் கிரகலாகவம்-மந்த்ரேச் முனிவர் இயற்றிய பலதீபிகை கர்க்கஸம்மிதை முதலியன கூறுகின்றன.

இந்நூல் எம்மிடம் நீண்ட நாளாகக் கைவச மிருந்தும் அதனை ஒத்திட்டுப் பார்ப்பதற்கு ஏற்றதோர் பிரதி கிடைக்காமலிருந்தது. இக்குறையைத் தீர்த்து உதவி புரிந்தவர் மோஹனூர் ஸ்ரீ கிருஷ்ண விலாச ஜோதிட சாலையின் ஆசிரியர் பிரமஸ்ரீ M. D. வெங்கட்டராம ஐயர் அவர்களே யாவர். இவர்கள் செய்துள்ள நன்றியை என்றும் மறப்பேமல்லேம். இப் பரோபகார சீலர் நீடு வாழ்க. இவர்கள் அன்புடன் அனுப்பிய பிரதியை ஒப்புநோக்கி ஒழுங்கு செய்து இதனை உலகோபகாரமாய் வெளியிட்டுள்ளேன்.

இதனைத் தமிழில் எழுதி யருளிய பெரியாரின் நாமதேயம் முதலியன தெரியவில்லை.

இந்நூலில் கிரகங்களுக்குக் கணனம் செய்ய வேண்டியதற்கான பொதுவிதிகள் - இலங்கா மத்தியான்ன த்புகணம்-சூரியாதி கிரகங்களின் பிரதம துதீய திருதீய சமஸ்கார கணனங்கள்-இலங்கா மத்தியான்ன சூரியாதி கிரகங்களின் கணனம்-தேசாந்தர கணனம்-திருக் சமஸ்காரகணனம் - சுதேச மத்தியான்ன சூரியாதி கிரகங்களின் கணனம்-சுதேச மத்தியான்ன சூரிய சந்திரஸ்புடகணனம்-சூரிய சந்திர கதிஸ்புடங்கள்-குஜாதி பஞ்சகிரகங்களுக்குப் பிரதம துதீய திருதீய சமஸ்கார சுதேச மத்தியான்ன சுத்தஸ்புட கணனம்-குஜாதி கிரகங்களுக்குப் பிரதம துதீய திருதீய சமஸ்கார கதிஸ்புட கணனம்-சுதேசத்திற்கு துல்லியமாய சூரியாதி நவக்கிரக ஸ்புட கணனம்-இலக்கினஸ்புட கணனம்-பாதசாரகணனம்-சுதேச அகசுகணனம்-அயனும்ச கணனம்-சரகண்ட சமஸ்கார கணனம்-அட்சாம்ச கணனம் (Latitude)-சுதேச ராசிமான கணனம்-சுதேச சூரியஉதய கணனம்-திதி நட்சத்திர யோக கணனம்-உடுதசா காலச்சக்கர தசா கணனம்-தசவர்க்க சக்கரங்கள் முதலியன ஒரு ஜாதக உதாரண வாயிலாய்க் கணித்துக் காட்டப் பெற்றிருக்கின்றன.

இந்நூலை அச்சிடப் பொருளுதவியவர் கூடலூர் தாலுக்கா மிட்டா சென்னப்ப நாய்க்கன் பாளையம் நைனார்பேட்டை உயர் திருவாளர் ச. அ. முருகேச முதலியார் அவர்களே யாவர். சாதுக்கள் க்ஷேமார்த்தம் இவ்வினியநூல் இனிது வாழ்க. சுபம். சுபம்.

பறங்கிப்பேட்டை
ஆங்கீரஸ ஸூ துலாரவி
30-10-1932

சு. ஏ. முத்துக்குமாரஸ்வாமி,
சித்தாந்த கணித ஜோதிஷன்.

உ

குகமயம்

## சிறப்புப்பாயிரம்.

இது

பறங்கிப்பேட்டை

**இயற்றமிழ்ப் பிரபந்த வித்வ ஸ்ரீமான் திருவாளர்**

**ஆ. நாராயணஸ்வாமிப் பிள்ளையவர்கள் இயற்றியது.**

முருகவிழ் விரிமடன் முளரி முகிழ்ப்பப்
பெருகொளி தொடர்ந்து பிறங்குபல் கோடி
நெடுங்கர விதிர்த்து முடங்கு வலவ
னுகைத்த வெழுமாச் சகட்டிர தத்திற்
சேண்விசும் பாரிற் செலவு நயந்த
வாண்மலி சுடரொடு வளம்பெறத் தவழ்ந்து
நிலவுமிழ் வெண்மதி நிலவேந் தறிஞன்
பொலன்பதி குரவன் குலம்பொரு மவுண
மந்திரி யெவரு மறுக்கமுன் றுணிபு
முந்துறு முரண்பெறு முடவன ரவிரண்
டாகவா ழியநவ மாகமீப் படர்கோள்
கடலுடை யுடுத்த புடவி யிடத்த
நடப்பன கிடப்ப நவில்பல் பேதத்
தொகுதி யாருயிர்ப் பகுதிய வினையிற்
பயிற்றிய வழியிற் குயிற்றிய முறையிற்
பொறிபடு விதியின் குறிபெறு தேற்றமும்
அவ்வயின் இசைந்தே ஆருறு பொசிப்பும்
எவ்வமு முயர்வும் இயங்குவ நாடி
வழுத்துவ தாக விழுத்தகு மறையி
னாறங் கத்தி னமையுஞ் சோதிடம்
கூறங் கத்திற் குலவுப வென்ப
அனையவொன் பானின ரமைவுங் குணமும்
வனையு மாற்றலும் வகையுளி தெரிக்குங்
கணிதமெனவே துணிவுறக் கொண்ட
சாத்திர மதுவே நாத்திறம் பெற்று
வகுத்தவ ரெண்ணிலர் மிகுத்த வவற்றுள்
பன்மாண் செறிவொடு பரப்பினிப் பாங்கரின்
சொன்மா ணகலை துரிசறக் காணத்
தகுவ தாக புகரறப் பெறுமென
நிந்தையில் வாக்கி மந்தி ரேசனும்
வசிட்டமா தவனும் விசிட்டவேங் கடனும்
பரவுரு மரீசி விரவு மல்லாரி
எண்ணறு முனிவர் உண்ணயந் துரைத்த
சித்தாந் தத்தும் ஒத்தாங் குணர்த்து
கிரகலா கவமெனப் பகர்பெறு நூலும்

கெழுமிய வுவகையிற் கிளர்ச்சி பெற்றுத்
தழுவிய **திருக்**கெனச் சாற்றுங் **கணித**
வுலவா வைப்பி னுலகு நிறுவ
வாய்ந்துறு கேள்வி வாய்ந்தவ ரிடந்தேர்ந்
தோவா நிதியின் மாவா தரத்தரும்
**திருக்கணி** தப்பேர் பெருக்க நிலவப்
பெரும்பே ரோடு நிரம்ப வாழியன்
மடவுடைத் தெழவெறி வாளை யுயர்முப்
புடைவுடை சிதர்கனி பொருது வாழை
முதிர்மா வருக்கை பிதிர்கொள வுடைத்த
பழம்பிழி சாறு வழங்கப் பாய்வயல்
செழித்த் வான்பயிர் தழைத்த சாலி
கூனிரும் பரியக் குவைகதிர்ச் செந்நெல்
வானுயர் போரின் வைகளைந் தொதுக்கிக்
குவித்தலிற் றெரித்த குளிரொளி முத்தம்
குவளையு மாம்பலுங் குணங்கவர் வனப்பிற்
கடைசியர் பிரித்துக் கதிர்கான் றறலை
முடைநா றணவு முறிசிறு கிழங்கும்
பெறுவது பிடித்த பெறுவள நடுநாட்
டணிகிளர் தில்லை யம்பல மருங்கு
மணிகிளர் பஃறலை வாளெயிற் றரவின்
முடியடி பெயர்த்த நெடியவர்க் கருளிய
வெற்றி வேலவன் உற்றநற் பதியுட்
பெற்றசீர் கிருட்டினப் பேர்புனை புரியிற்
தொல்குடிப் பிறப்பின் மல்கிய விச்சுவ
குலதீ பகமாய் நலமா ரேகாம்
பரன்றரு சேயி னுரம்பெறு மிளைஞன்
சாத்திரக் கடலை நாத்திறம் படைத்து
மடுத்த கொண்டலி னடுத்துச் சோதிடப்
பெருநூன் மழைபொழி பெரியன் குமாரச்
சுவாமியொ டுபழகும் துணையெனப் பெறுவோன்
தவாநல வொழுக்கச் சதுருறு நியதியோன்
மருண்மலி மனத்தும் தெருண்மதி விளக்கின்
அருளொளி தழைக்க வமர்கும ரேச
ஞானபண் டிதன்று ளானமெய் யன்பன்
சோதிட முரைத்த மாதிட வலத்தன்
மதிமலி யறிஞரின் துதிபெறு செல்வன்
செவ்விய குணத்திற் சீரிய புநிதன்
மெய்த்தவ நெறிபெறு முத்துக்
குமாரச் சுவாமியாங் கொற்றவன் மாதோ.

உ

குகமயம்.

இது தில்லையாளி

## திருவாளர் நா. தம்பியப்ப செட்டியார் அவர்களால்

இயற்றப்பட்டது.

உலகமெலாம் நிறைந்தவுயிர் பெறுநன்மை தீமையினை யுணர வொன்பா
னலகுபெறு கோட்களினால் அவ்வவற்றின் வினைக்கேற்ப வாரும் பண்போர்
கலையதனைப் பற்பலசித் தாந்தமுறை கண்டுணர்ந்து கணித மென்னப்
பலவகையால் தெரிக்கலுற்றார் அக்கணிதம் மூக்காலும் படர்ந்து தேர்வார். 1

கூறுமவை தமக்குள்ளும் சித்தாந்த திருக்கணிதம் குணமீக் கொண்ட
பேறுபெறு நூலெனமங் கிரசமுனி பரீசிதவம் பேண்மல் லாரி
தேறுமதி வசிஷ்டன்வேங் கடன்பிரா சிரோன்மணிநற் சீர்சான் றோங்கி
வீறுபெறு கிரகலாக வமெனச்சொல் பன்னூலாய் விரிந்து தோன்றும். 2

சொன்னவிவை தமையுலகம் தொழுதேத்து வகைதுணிந்து சுருதிக் கேற்பப்
பன்னலமும் பெறுவதெனப் பழுதகன்ற படிநாடி பலனுற் றோங்க
உன்னதசொற் றமிழ்மொழியால் உறுதிபயப் பனவாக வுறும்பே றுற்றே
மன்னவிளங் கியமேலோன் யாவனெனின் இனையனென வழுத்து வோமால் 3

பொன்னாட்டுப் புரந்தானும் புகழ்நாட்டுப் பெருவளனிற் பொலிந்து போற்று
நன்னாட்டு ணடுநாட்டு நடுநாட்டில் மணிமூத்த நலஞ்சீர் வாய்ப்ப
மூன்னாட்டு வாணிபமும் செல்வமுமார் கிருஷ்ணபுரி முதுப திக்கண்
மின்னாட்டும் தொல்குடியின் விசுவகுல விளக்கமென விளங்கு சீரோன் 4

பலகலையும் பயின்றுகுரு பதமறவான் சிவகுமாரப் பத்தி வாய்ந்து
நலமிகுமா வேகாம்ப ராச்சாரி நற்றவத்தின் நண்ணு செல்வன்
வலமிகுநற் றுறைமருவிக் குமாரகுரு பதமறவா வண்மை யோடு
குலநலமார் சீர்முத்துக் குமாரனென வாழியநற் குணக்கோ மானே. 5

உ

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நம:

# சித்தாந்த திருக்கணிதம்.

"செவ்வி திகழ்பொகுட்டுச் செந்தா மரைவதனக்
கொவ்வையெழிற் செவ்வாய் குறத்தேனை—நவ்வி
விழியானை யைப்புணரும் வேளைமத வெள்ளம்
பொழியானை யைமனமே போற்று"

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்"

"உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
வலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே."

முத்தாருஞ் செஞ்சொன் முளரித் திருமகளால்
கொத்தாரும் வண்ணம் குலாவிக்கும்—சத்தார்சித்
தாந்த திருக்கணிதந் தந்திமுகத் தைங்கரனே
சேந்தன் றுணையாய்த் திகழ்ந்து.

## காலப் பிரமாணம்.

18 கண்ணிமை கொண்டது ஒரு காஷ்டை. 30 காஷ்டை கொண்டது ஒரு கலை. 15 கலை கொண்டது ஒரு நாழிகை. 2 நாழிகைகொண்டது ஒரு முகூர்த்தம். 30 முகூர்த்தங் கொண்டது ஒரு (மானுஷ) தினம். 15 தினங் கொண்டது ஒரு பட்சம். 2 பட்சங் கொண்டது ஒரு மாசம். 6 மாசங் கொண்டது ஒரு அயனம். 2 அயனங் கொண்டது ஒரு (மானுஷ) வருஷம். 365 தினம் 15 நாழிகை 31 விநாடி 15 தற்பரை ஆகிய இவை கொண்டது ஒரு மானுஷ வருஷம். இந்த மானுடவருடம் தேவர்களுக்கு ஒரு தினம். (இதில் பகற் பொழுது உத்தராயணம் இராப்பொழுது தட்சணாயனம்). இவ்வாறு சொல்லப்படும் தினம் 30 கொண்டது தேவர்களுக்கு ஒருமாசம். இந்த

மாசம் 12 கொண்டது ஒரு தேவ வருஷம். இந்தத் தேவ வருஷம் 12000 கொண்டது ஒரு சதுர்யுகம். இதற்கு மானுஷ வருஷங்கள் 43,32,000. மேலே சொன்ன சதுர்யுகமானது மகாயுகமெனவும் பெயர் பெறும். தேவ வருஷம் 4800க்குச் சரியாகிய மானுஷ வருஷம் 1,728,000 கொண்டது கிருதயுகம். தேவ வருஷம் 3600க்குச் சரியாகிய மானுஷ வருஷம் 1,296,000 கொண்டது திரோதாயுகம். தேவ வருஷம் 2400க்குச் சரியாகிய மானுஷ வருஷம் 864,000 கொண்டது துவாபரயுகம். தேவ வருஷம் 1200க்குச் சரியாகிய மானுஷ வருஷம் 432,000 கொண்டது கலியுகம். இந்நான்குங் கூடியது மகாயுகம். இந்தச் சதுர்யுகம் 1000 ஆனால் பிரமாவிற்கு ஒரு பகலாகும். இந்தப் பகற்பொழுதிலே † 14 மனுக்கள் அதிகாரம் செய்வார்கள். ஒவ்வொரு மனுக்களின் அதிகார முடிவான மன்வந்திரங்களானவை எழுபத்தொரு சதுர்யுகமாகும். தேவேந்திரன் முதலாகிய சமஸ்த தேவர்களுக்கும் மேற் சொல்லிய மனுக்களுக்கும் இதுவே ஆயுட் பிரமாணமாம். பிரமதேவனுடைய பகற்காலமானது ஒரு கற்பமென்று சொல்லப்படும். அக்கற்பமாவது சிருஷ்டிமுதல் பிரளயாந்தமாகிய காலமாம். அந்தப் பகற்கால முடிவில் பூலோக புவர்லோக சுவர்லோகமென்னும் மூன்றுலகங்களும் அழியும்படியான தினப்பிரளய மொன்றுண்டாகும். அப்பகலளவாகிய இராப்பொழுதிலே நித்திரை செய்தருளி அவ்விரவின் முடிவாகிய விடியற் காலத்தில் எழுந்து திரும்பவும் சராசரங்க ளெல்லா வற்றையுஞ்சிருஷ்டி செய்தருளுவான்.

இப்படிச் சொல்லப்பட்ட பகலும் இரவும் சேர்ந்து பிரமனுக்கு ஒரு நாளாகும். இவ்விதம் சொல்லப்பட்ட 30 நாள் கொண்டது பிரமனுக்கு ஒரு மாச மாகும். இந்த மாதம் 12 கொண்டது பிரமனுக்கு ஒரு வருஷமாகும். இவ்விதமாக 100 வருஷம் பிரமா ஜீவித்திருப்பார்.

பிரமாவின் ஆயுள் (100 வருஷமும்) விஷ்ணுவுக்கு ஒரு தினமாகும். இவ்விதமாக விஷ்ணு 100 வருஷம் ஜீவித்திருப்பார்.

விஷ்ணுவின் ஆயுள் (100 வருஷமும்) உருத்திரனுக்கு ஒரு தினமாகும் இவ்விதமாக உருத்திரன் 100 வருஷம் ஜீவித்திருப்பார்.

---

† 14 மனுக்களாவர்: 1 சுவாயம்புவர், 2 சுவரோசிஷர், 3 உத்தமர், 4 தாமசர், 5 ரைவதர், 6 சாட்சுஷர், 7 வைவஸ்வதர், 8 சாவர்ணி, 9 தக்ஷசாவர்ணி, 10 பிரமசாவர்ணி, 11 தர்மசாவர்ணி, 12 ருத்ரசாவர்ணி, 13 ரௌச்சியர், 14 பௌமர்.

ஒரு மனுவந்தரத்திற்கு தேவ மானத்தினாலே எட்டு லட்சத்தைம்பத்திரண்டாயிரம் 852,000 வருஷங்களாகும். அது மனுஷிய மானத்தினாலே முப்பது கோடியே யறுபத்தேழு லட்சத்திருபதினாயிரம் வருஷங்களாகும்.

1. பிரமப் பிரளயம் ஒரு கற்பம் ஆம்.
2. விஷ்ணுப் பிரளயம் ஒரு மகா கற்பம் ஆம்.
3. உருத்திரப் பிரளயம் ஒரு ஆதிகற்பம் ஆம்.

இதற்கு மேல் பரமாத்மா சர்வாதீதரா யிருப்பார்.

## வருஷம்.

ஆரியர்கள் தங்கள் வைதீக கருமாநுஷ்டானங்களின்பொருட்டு ஐவ்வகை யாகப் பிரித்துவைத்துக் கொண்டிருக்கின்றார்கள் 1. சாந்திரமானம், 2. சௌரமானம், 3. சாவனமானம், 4 நட்சத்திரமானம், 5 பார்ஹஸ்பத்தியமானம்.

1. சாந்திரமானம்:—சைத்திர சுத்தப் பிரதமை முதல் (பங்குனிமீ சுக்கில பட்சப் பிரதமையிலிருந்து) பால்குன அமாவாசியை வரையிலும் (பங்குனிமீ அமாவாசியை வரையிலும்) உள்ளது சாந்திர மானமாம். இதில் அடங்கிய தினங்கள் 354.

2. சௌரமானம்:—சூரியன் மேஷ விராசியிற் பிரவேசிக்குங் காலம், முதல் மீனவிராசியை விட்டுப் பெயருங்காலம் வரையிற் கொண்டுள்ளது இதிலடங்கிய தினங்கள் 365.

3. சாவன மானம்:—360 நாள் கொண்டதே சாவனமானமாம். இதனை எது முதலேனுங் கணக்கிடலாம்.

4. நட்சத்திர மானம்:—நட்சத்திரங்கள் 12 தடவை சுழன்று வருவது நட்சத்திரமானமாம். இதிலடங்கிய தினங்கள் (27 × 12) = 324.

5. பார்ஹஸ்பத்திய மானம்:—பிரகஸ்பதி ஒரு ராசியில் தங்கியிருக்குங் காலத்திற்குப் பார்ஹஸ்பத்தியமானம் எனப்பெயர். இதில் 361 நாட்கள் அடங்கியிருக்கின்றன.

குறிப்பு:—எல்லாச் சாதியர்களும் சௌரமானமும், சாந்திரமானமும் கைக்கொள்கின்றனராயினும், வடநாட்டினர் சிலர் மட்டும் மற்றை யாண்டுகளைக் கையாள்கின்றனர்.

## காலப்பகுதி.

1 கற்பம், 2 மனுவந்தரம், 3 யுகம், 4 சகம், 5 நூற்றாண்டு (அல்லது தலைமுறை), 6 வருஷம், 7 ருது (அல்லது பருவம்), 8 மாசம், 9 பட்சம் (15 நாள்), 10 வாரம் (7 நாள்), 11 தினம் (ஒரு நாள்), 12 நாழிகை, 13 விநாடி, 14 தற்பரை.

வருஷம் என்னுங்கால அளவில் ருது-மாசம்-பட்சம்-வாரம்-தினம்-நாழிகை-விநாடி-தற்பரை என்பனயாவும் அடங்கியிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| 12 மாதம் | கொண்டது | ஒரு | வருஷம் |
| 2 மாதம் | ,, | ,, | ருது |
| 30 நாள் | ,, | ,, | மாதம் |
| 60 நாழிகை | ,, | ,, | நாள் |
| 60 விநாடி | ,, | ,, | நாழிகை |
| 60 தற்பரை | ,, | ,, | விநாடி |

| ருதுக்கள் | சாந்திர மாதங்கள் | சௌர மாதங்கள் | | | ஆங்கில மாதங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 வசந்த ருது | 1 சைத்திரம் | மேஷம் | = | சித்திரை | ஏப்ரல் |
| ,, | 2 வைசாகம் | விருஷபம் | = | வைகாசி | மே |
| 2 கிரீஷ்ம ருது | 3 ஜ்யேஷ்டம் | மிதுனம் | = | ஆனி | ஜூன் |
| ,, | 4 ஆஷாடம் | கடகம் | = | ஆடி | ஜூலை |
| 3 வர்ஷ ருது | 5 சிராவணம் | சிங்கம் | = | ஆவணி | ஆகஸ்ட் |
| ,, | 6 பாத்திரபதம் | கன்னி | = | புரட்டாசி | செப்டம்பர் |
| 4 சரத் ருது | 7 ஆஸ்விஜம் | துலாம் | = | ஐப்பசி | அக்டோபர் |
| ,, | 8 கார்த்திகம் | விருச்சிகம் | = | கார்த்திகை | நவம்பர் |
| 5 ஹேமந்த ருது | 9 மார்க்கசிரம் | தநுசு | = | மார்கழி | டிசம்பர் |
| ,, | 10 புஷ்யம் | மகரம் | = | தை | ஜனவரி |
| 6 சசி ருது | 11 மாகம் | கும்பம் | = | மாசி | பிப்ரவரி |
| ,, | 12 பால்குனம் | மீனம் | = | பஙகுனி | மார்ச் |

## கத சாலியவாகன சகம் அறிய.

கணிதஸ்தானத்தில் 60 ஐ வைத்து அதை 28 ஆல் பெருக்கிப் பிரபவாதி கத வருஷங்களைச் சேர்தது அதனுடன் துருவம் 109 ஐச் சேர்க்க வருவது கதசாலியவாகன சகமாம்.

உதாரணம்:—ரௌத்திரிஞு வைகாசிமீ 30 ஆந்தேதி ஸ்திரவாரம் ஜ்யேஷ்டபருள ஏகாதசியில் சூரிய உதயாதி நாழிகை 1-விநாடி 7-க்கு சிதம்பரந் தாலூக்கா பறங்கிப்பேட்டையில் ஜனனம். 60 × 28 = 1,680. பிரபவாதி கத வருஷம் 53. துருவம் 109. இம்மூன்றும் சேர்க்க 1,842. இது கத சாலிய வாகன சகம் ஆம்.

குறிப்பு:—சாலிய வாகன சகம்ஞு 1849 வரையில் 60 ஐ 28 ஆல் குணிக்க வேண்டும். 1850 முதல் 60 ஐ 29 ஆல் குணிக்கவேண்டும். அஃதாவது பரிவிருத்தி ஒன்றுக்கு 1 அதிகம் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

## பரிவிருத்தி.

கதசாலிய வாகன சகத்தில் 109 ஐக் கழித்துவந்த சேடத்தை 60 ஆல் வகுக்க வந்த ஈவு பரிவிருத்தியாம். சேடம் வருஷமாம்.

உதாரணம்:—கத சாலிய வாகன சகம் 1842. இதில் 109 ஐக் கழிக்கவந்தது 1733. இதை 60 ஆல் வகுக்க ஈவு 28. சேடம் 53. இந்த ஈவு 28. பரிவிருத்தியாம். சேடம் 53. இது 29-ம் பரிவிருத்தியில் கத வருஷமாம்.

## கத கலியப்தம் அறிய.

முன் கணித்து வைத்திருக்கிற கத சாலிய வாகன சகத்தில் 3,179 ஐச் சேர்க்க கத கலியப்தம் ஆகும். உதாரணம்: 1842+3179=5021. இது கத கலியப்தம் ஆம்.

## இனி த்யுகண கணனம்.

கத சாலிய வாகன சகாப்தத்தில் துருவம் 1491 ஐக் கழித்து வந்த சேடம் துருவாப்த மாகும். இத் துருவாப்தத்தை 12 ஆல் பெருக்கிக் கத மாசங்களைச் சேர்க்க வருவது மாசப்பிரதி யாகும்.

உதாரணம்:—கத சகாப்தம் 1842. இதில் 1491 ஐக் கழிக்க வந்த சேடம் 351. இது துருவாப்தமாம். இதை 12 ஆல் குணிக்க வந்தது 4212. இதனுடன் கதமாதம் (சைத்திரம் வைசாகம்) ஆன 2 ஐச்சேர்க்க வந்தது 4214. இது மாசப்பிரதி.

## அதிகமாச யுத கணனம்.

இம் மாசப் பிரதியை இரண்டிடத்தில் வைத்து ஒரு பிரதியை 900 ஆல் குணித்து இதனுடன் துருவம் 12396 ஐச் சேர்த்து வந்த தொகையை 29,282 ஆல் ஹரிக்க (வகுக்க) வந்த ஈவு அதிக மாசங்களாகும். இந்த அதிக மாசங்களை மற்றொரு பிரிவாக முன்வைத்திருக்கும் மாசப்பிரதியில் சேர்க்கவேண்டும் இப்படிச் சேர்த்து வந்த தொகைக்கு அதிகமாச யுதப் பிரதி என்பர்.

உதாரணம் :—மாசப் பிரதி 4214. இதை 900 ஆல் பெருக்க வந்தது 3,792,600. இதனுடன் துருவம் 12396 ஐச் சேர்க்க வந்தது 3,804,996. இதை 29,282 ஆல் வகுக்க வந்த ஈவு 129. இஃது அதிக மாசம். சேடம் 27618. இதனை நீக்குக. முன் வைத்துள்ள மாசப் பிரதியான 4214 ல் அதிகமாசம் 129ஐச் சேர்க்க வந்தது 4343. இஃது அதிகமாசயுதப் பிரதியாம்.

முன்வந்துள்ள அதிகமாசப் பிரதியை 30 ஆல் பெருக்கி சுக்கில பக்கப் பிரதமை முதல், ஜனனம் வரையிலுமுள்ள திதிகளின் எண்களைச் சேர்த்து இதை இரண்டு பிரதியாக வைத்து ஒரு பிரதியை 72 ஆல் குணித்து 4601 ஆல் வகுத்து வந்த ஈவு க்ஷய வாஸரங்களாகும். இப்படி வந்த க்ஷய வாஸரங்களை மற்றொரு பிரதியில் கழிக்க வந்தது இலங்கா மத்தியான்ன த்யுகண மாகும்.

உதாரணம் :—அதிக மாசயுதப் பிரதியான 4343 ஐ 30 ஆல் குணிக்க வந்தது 1,30,290. இதில் சுக்கில பக்கப் பிரதமை முதல் கிருஷ்ண பக்க ஏகாதசி வரையில் உள்ள திதி 26 ஐச் சேர்க்க வந்தது 130316. இதனை

72 ஆல் பெருக்க வந்தது 9,382,752. இதை 4601 ஆல் வகுக்க வந்த ஈவு 2039. இதற்கு க்ஷய வாஸரம் என்பர் பெரியார். சேடம் 1313. இதனை நீக்குக. (க்ஷய வாஸரத்தினை க்ஷய தினங்களென்பாரு முளர்.) இந்த க்ஷய வாஸர தினங்களை மற்றொரு படியாக வைத்திருக்கின்ற 130316 இல் கழிக்க வந்தது 128277. இஃது இலங்கா மத்தியான்ன த்யுகணம் ஆம்.

இந்த த்யுகணத்தை 7 ஆல் வகுக்க வந்த சேஷம் சுக்கிர வாராதியாக ஜனன வாரம் வரும் விதமாம்.

குறிப்பு :—த்யுகணத்தை 7 ஆல் வகுத்து வந்த சேடம் ஒன்று கூடுதல் கம்மியாகவரின் குறைந்தால் ஒன்று சேர்த்தும், அதிகமானால் ஒன்று குறைத்தும் கொள்க.

உதாரணம்:—த்யுகணம் 128277. இதை 7 ஆல் வகுக்க வந்த ஈவு 18325, சேடம் 2. இதனை சுக்கிரவாராதியாக எண்ண ஜனன வாரம் ஸ்திரவாரமாக வருவதுமுங் காண்க. உதயாதி நாழிகை இதற்குத் தேவையில்லை. இந்த லங்கா மத்தியான்ன த்யுகணமானது ரௌத்திரி ஞ வைகாசி மீ 30-ஆந் தேதி ஸ்திரவாரம் பகல் சூரியன் உச்சியிலிருக்கும்போது இலங்கைக்கு த்யுகணம் ஆம்.

முக்கிய கவனிப்பு:—இந்த இலங்கா மத்தியான்ன த்யுகணத்தை வைத்துக் கொண்டுதான் சூரியாதி சமஸ்த கிரகங்களையும் கணனம் செய்யவேண்டும்.

## ஸ்புட ஜந்திரி.

### பிரதம விராசியாதி முதல் வரும் ஸ்புட ஜந்திரி யாவன.

| கிரகங்கள் | பிரதமம் | | | தவிதீயம் | | | திருதீயம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெ. எண் | வ எண் | பலம் | கு | ஹா | ப | ஹா | ப |
| சூரியன் | 1000 | 30438 | இ. | 10 | 22407 | க | 0 | 0 |
| சந்திரன் | 1000 | 2277 | ,, | 10 | 148 | க | 10 | க |
| செவ்வாய் | 100 | 5725 | ,, | 0 | 0 | 0 | 24 | க |
| புத-சீக்கிரோ | 100 | 733 | ,, | 10 | 370 | க | 50 | க |
| குரு | 100 | 36103 | ,, | 0 | 0 | 0 | 60 | க |
| சுக்-சீச்கிரோ | 100 | 1872 | ,, | 10 | 399 | க | 0 | 0 |
| சனி | 100 | 89715 | ,, | 0 | 0 | 0 | 0 | 0 |
| பாதன் = ராகு | 10 | 566? | ,, | 0 | 0 | 0 | 0 | 0 |
| சந்திரோச்சம | 10 | 2693 | ,, | 0 | 9795 | க | 0 | 0 |

### கிரகங்களின் பூர்வ துருவ-தினகதி-மந்தோச்ச ஜந்திரி.

| கிரகங்கள் | பூர்வ துருவம் | | | | தினகதிor புத்தி | | | மந்தோச்சம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இ | பா | க | வி | க | வி | உ.வி | இ | பா | க |
| சூரியனுக்கு | 11 | 17 | 17 | 34 | 59 | 8 | 10 | 0 | 0 | 0 |
| சந்திரனுக்கு | 11 | 13 | 22 | 52 | 790 | 34 | 52 | 0 | 0 | 0 |
| செவ்வாய்க்கு | 10 | 23 | 41 | 51 | 31 | 26 | 0 | 4 | 10 | 3 |
| புத-சீச்கிரோ | 1 | 23 | 5 | 15 | 245 | 32 | 0 | 7 | 10 | 29 |
| குருவிற்கு | 8 | 21 | 12 | 42 | 5 | 0 | 0 | 5 | 21 | 23 |
| சுக்ர-சீக்கிரோ | 3 | 4 | 0 | 15 | 96 | 8 | 0 | 2 | 19 | 54 |
| சனிக்கு | 5 | 8 | 57 | 7 | 2 | 0 | 0 | 7 | 26 | 39 |
| பாதனுக்கு | 6 | 18 | 36 | 18 | 3 | 11 | 0 | 0 | 0 | 0 |
| சந்திரோச்சத் | 0 | 0 | 53 | 50 | 6 | 41 | 0 | 0 | 0 | 0 |
| இரவி உச்சத்தி | 2 | 17 | 16 | 50 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |

## கோண வாய்ப்பாடு.

| | | | | |
|---|---|---|---|---|
| 60 | உபவிகலை | கொண்டது | | ஒருவிகலை. |
| 60 | விகலை | ,, | ,, | கலை. |
| 60 | கலை | ,, | ,, | பாகை |
| 30 | பாகை | ,, | ,, | இராசி |
| 12 | இராசி | ,, | ,, | மண்டலம் |

## இரண தனம்.

மேட முதல் 6 இராசி வரை தனமென்றும், துலா முதல் 6 இராசி வரை இரணமென்றும் அறிக. தனமானால் அவரவர்கள் பலத்தைச் சேர்க்க; இரணமானல் அவரவர்கள் பலத்தைக் கழிக்க.

## புஜாகோடி.

மந்த கேந்திரங்கள் 6 இராசிக்குள்ளிருந்தால் அதுவே புஜா. 6 இராசிக்கு மேல் 12 இராசிக்குள்ளிருந்தால் 12 இராசியில் கழிக்க புஜா.

## குஜாதி பஞ்ச கிரகங்களுக்கு ஜியா சமஸ்காரம்.

இராசி ஒன்றுக்கு வாக்கியம் 8 ஆகவும், வாக்கியம் 1-க்குப் பாகை 3 கலை 45 ஆகவும் கொள்க. இதை அவரவர்கள் சீக்கிரக் கலா பதக சாரணியிலும், மந்த பதக கலா சாரணியிலும் வாக்கியங்கள் எடுத்து மறுநாள் வாக்கியத்தில் அந்தரம் அறிந்து ஜியா சமஸ்காரம் செய்து அவரவர்கள் பலத்தை மேடாதி தனமானல் சேர்க்கவும், துலாதி இரணமானல் கழிக்கவும் வருவதே அவரவர்கள் ஸ்புடமாம்.

## மத்திய கிரகாயனம்.

சூரியாதி கிரகங்களுக்குப் பிரதம சமஸ்காரத்தில் முதலாவது கிரியையில் அவரவர்களுக்குச் சொல்லிய குணக எண்களால் த்யுகணத்தைக் குணித்து அந்தந்தக் கிரகங்களுக்குச் சொல்லும் ஆரகங்களால் வகுக்க வந்த ஈவு இராசியாம். (இதனை மண்டலமாகிய 12 இராசி எடுபடும் வரையில் எடுத்துச் சேடத்தை இராசியாகக் கொள்க). சேடத்தைக் கிரமமாகப் பாகை கலை விகலைகள் வரும்படி 30-60-60 ஆல் குணித்து முன் சொல்லப்பட்ட ஹாரகங்களால் ஹரிக்கவேண்டும். இவ்விதம் செய்யின் பாகை கலை விகலைகள் வரும். இந்தப் பிரகாரமாகச் சூரியாதி கிரகங்களுக்குப் பிரதம விராசியாதிகளைக் கணித்து வைத்துக்கொள்க.

முன் பதகம் எழுதியிருப்பினும் இதன் கீழும் கிரமமாக எழுதப்படும்.

சூரிய சந்திரர்களுக்குத் த்யுகணத்தை 1000 த்தால் குணித்து அவரவர் களுக்குச் சொல்லக்கூடிய ஆரகமான சூரியனுக்கு 30438. சந்திரனுக்கு 2277. இந்த ஹாரகங்களால் தனித்தனியாக ஹரித்து இராசியாதிகளைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

உதாரணம்-சூரியனுக்கு:—இலங்கா மத்தியான்ன த்யுகணம் 128277. இதை 1000 த்தால் குணிக்க வந்தது 128,277,000. இதனை 30,438 ஆல் வகுக்க ஈவு 4214. இது இராசி. சேடம் 11268 இதை 30 ஆல் பெருக்கி 30438 க்குக்கொடுத்துவந்த ஈவு 11 இதுபாகை. சேடம் 3222. இதை 60 ஆல் பெருக்கி 30438 ஆல் வகுக்கவந்த ஈவு 6 இதுகலை. சேடம் 10692. இதை 60 ஆல் பெருக்கி 30438 ஆல் வகுக்கவந்த ஈவு 21 இது விகலை. சேடம் 2322. இதனை நீக்கி விடவும். முன் வந்துள்ள இராசி 4214 ஐ இராசி மண்டலத்தில் களைய ஈவு 351. இதுமண்டலம். சேடம் 2 இது இராசி. இவ்விதம் கணிதம் செய்யப்பெற்று வந்த இராசி 2-பாகை 11-கலை 6-விகலை 21 இதனையே சூரியனுக்குப் பிரதம சமஸ்காரகணனம் என்பர் பெரியார்.

உதாரணம்.சந்திரனுக்கு:—இலங்காமத்தியான்ன த்யுகணம் 128277. இதனை 1000 த்தால் பெருக்க வந்தது 128277000. இதனை 2277 ஆல் வகுக்க வந்த ஈவு 56335 இது இராசி. சேடம் 2205 இதனை 30 ஆல் பெருக்கி 2277 க்குக் கொடுத்து வந்த ஈவு 29 இது பாகை. சேடம் 117 இதை 60 ஆல் பெருக்கி 2277 ஆல் வகுக்கவந்த ஈவு 3 இது கலை. சேடம் 189 இதனை 60 ஆல் பெருக்கி 2277 க்குக் கொடுக்கவந்த ஈவு (அர்த்தாதிகத்துடன்) 5 இது விகலை. முன் வந்துள்ள இராசியாதிகள் 56335. இதை மண்டலத்தில் களைய ஈவு 4694 இது மண்டலம். சேடம் 7. இது இராசி. இவ்விதம் கணிக்கப் பெற்றுவந்த இராசி 7. பாகை 29-கலை 3-விகலை 5 இதுவே சந்திரனுக்குப் பிரதம சமஸ்கார கணனமாம்.

குஜாதி பஞ்சக் கிரகங்களுக்குப் பிரதம சமஸ்காராதிகளைக் காணும் வழியாவன:

குஜாதி பஞ்சக் கிரகங்களுக்குப் பிரதம சமஸ்கார இராசியாதிகளைத் தெரிவதின் பொருட்டுத் த்யுகணத்தை 100 ஆல் குணித்து அவரவர்களுக்குச் சொல்லியுள்ள ஆரகங்களான செவ்வாய்க்கு 5725, புதனுக்கு 733, குருவிற்கு 36103, சுக்கிரனுக்கு 1872, சனிக்கு 89715 இவைகளால் தனித்தனியாக ஹரித்து இராசி பாகை கலை விகலைகளாகச் செய்து கொள்ள வேண்டும்.

உதாரணம் செவ்வாய்க்கு:—இலங்கா மத்தியான்ன த்யுகணம் 128277. இதனை 100 ஆல் குணிக்க வந்தது 12827700. இதனை 5725 ஆல் ஹரிக்க வந்த இராசியாதிகள் 2240, பாகை 19, கலை 23, விகலை 19, இராசியாதிகள்

2240 ஐ மண்டலத்தில் களைய ஈவு 186. இது மண்டலம். சேடம் 8. இது இராசி. இவ்விதம் கணிதம் செய்துவந்த பிரதம சமஸ்கார கணனம் செவ்வாய்க்கு இராசியாதிகள் 8,19,23,19.

உதாரணம் புதனுக்கு:—இலங்கா மத்தியான்ன த்யுகணத்தை 100 ஆல் குணிக்க வந்தது 12827700. இதனை 733 ஆல் வகுக்கவந்த இராசியாதிகள் 17500, பாகை 8, கலை 11, [அர்த்தாதிகத்துடன்) விகலை 8. இராசியாதிகள் 17500ஐ மண்டலத்தில் களைய ஈவு 1458, இது மண்டலம். சேடம் 4. இது இராசி. இவ்விதம் கணிக்கப் பெற்று வந்த பிரதம சமஸ்கார கணனம் புதனுக்கு இராசியாதிகள் 4, 8, 11, 8.

உதாரணம் குருவிற்கு:—இலங்கா மத்தியான்ன த்யுகணத்தை 100 ஆல் குணிக்க வந்தது 12827700 இதனை 36103 ஆல் வகுக்கவந்த இராசியாதிகள் 355, பாகை 9, கலை 15, விகலை 9. இராசியாதிகள் 355ஐ மண்டலத்தில் களைய ஈவு 29. இதுமண்டலம் சேடம் 7. இது இராசி. இவ்விதம் கணிதம் செய்துவந்த பிரதம சமஸ்கார கணனம் குருவிற்கு இராசியாதிகள் 7, 9, 15, 9.

உதாரணம் சுக்கிரனுக்கு:-இலங்கா மத்தியான்ன த்யுகணத்தை 100 ஆல் குணிக்க வந்தது 12827700. இதனை 1872 ஆல் வகுக்க வந்த இராசியாதிகள் 6852. பாகை 12. கலை 6. விகலை 55, இராசியாதிகள் 6852 ஐ மண்டலத்தில் களைய ஈவு 571. இது மண்டலம். சேடம் 0 இது இராசி. இவ்விதம் கணிதம் செய்து வந்த பிரதம சமஸ்கார கணனம் சுக்கிரனுக்கு இராசியாதிகள் 0, 12, 6, 55.

உதாரணம் சனிக்கு:—இலங்கா மத்தியான்ன த்யுகணத்தை 100 ஆல் குணிக்க வந்தது 12827700. இதனை 89715 ஆல் வகுக்கவந்த இராசியாதிகள் 142 பாகை 29. கலை 29, விகலை 0. இராசியாதிகள் 142 ஐ மண்டலத்தில் களைய ஈவு 11 இதுமண்டலம். சேடம் 10 இது இராசி. இவ்விதம் கணிதம் செய்து வந்த பிரதம சமஸ்கார கணனம் சனிக்கு இராசியாதிகள் 10, 29, 29, 0.

உதாரணம் பாதன் என்னும் இராகுவிற்கு:—இலங்கா மத்தியான்ன த்யுகணத்தை 10 ஆல் குணிக்க வந்தது 1282770. இதனை 5662 ஆல் வகுக்க இராசியாதிகள் 226. பாகை 16. கலை 43. விகலை 57. இராசியாதிகள் 226 ஐ மண்டலத்தில் களைய ஈவு 18 இது மண்டலம். சேடம் 10. இது இராசி. இவ்விதம் கணிதம் செய்து வந்த பிரதம சமஸ்கார கணனம் பாதன் என்னும் இராகுவிற்கு இராசியாதிகள் 10, 16, 43, 57.

உதாரணம் சந்திரோச்சத்திற்கு:—இலங்கா மத்தியான்ன த்யுகணத்தை 10 ஆல் குணிக்க வந்தது 1282770. இதனை 2693 ஆல் வகுக்க வந்த இராசியாதிகள் 476. பாகை 10. கலை 2. (அர்த்தாதிகத்துடன்) விகலை 54. இராசி

யாதிகள் 476 ஐ மண்டலத்தில் களைய ஈவு 39 இது மண்டலம். சேடம் 8. இது இராசி. இவ்விதம் கணிதம் செய்து வந்த பிரதம சமஸ்கார கணனம் சந்திரோச்சத்திற்கு இராசியாதிகள் 8, 10, 2, 54.

## இதுவரையில் கணிக்கப் பெற்றவைகள் அடியிற் காட்டப் பெற்றிருக்கின்றன.

| விவரம். | | | | இ. | பா. | க. | வி. |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியனுக்குப் பிரதம சமஸ்கார கணனம் | | | | 2. | 11. | 6. | 21. |
| சந்திரனுக்குப் | ,, | ,, | ,, | 7. | 29. | 3. | 5 |
| அங்காரகனுக்குப் | ,, | ,, | ,, | 8. | 19. | 23. | 19 |
| புதனுக்குப் | ,, | ,, | ,, | 4. | 8. | 11. | 8 |
| குருவிற்குப் | ,, | ,, | ,, | 7. | 9. | 15. | 9 |
| சுக்கிரனுக்குப் | ,, | ,, | ,, | 0. | 12. | 6. | 55 |
| சனிக்குப் | ,, | ,, | ,, | 10. | 29. | 29. | 0 |
| பாதனுக்குப் [இராகு] | ,, | | ,, | 10. | 16. | 43. | 57 |
| சந்திரோச்சத்திற்குப் | ,, | | ,, | 8. | 10. | 2. | 54 |

## துதீய சமஸ்கார கணனம்.

துதீய கலாதிகளறியும் வகை.

த்யுகணத்தை 10 ஆல் குணித்து இதன் கீழ்ச் சொல்லிய ஆரகங்களால் வகுத்து வந்துள்ள பலங்களைச் சந்திரனுக்கு மாத்திரம் பிரதம சமஸ்கார சந்திரனில் சேர்க்கவேண்டும், மற்றைய கிரகங்களுக்குள்ள பலங்களை அவரவர்கள் பிரதம சமஸ்காரத்தில் கழிக்க வேண்டும். சூரியனுக்கு (ஹாரகம்) 22407, சந்திரனுக்கு 148, புதன் சீக்கிரோச்சத்திற்கு 370, சுக்கிரன் சீக்கிரோச்சத்திற்கு 399, சந்திரோச்சத்திற்கு 9795, மற்றைய கிரகங்களான அங்காரகன்-குரு-சனி-பாதனென்னும் இராகு இவர்களுக்கு துதீய சமஸ்கார கணனமில்லை.

உதாரணம் சூரியனுக்கு:—இலங்கா மத்தியான்ன த்யுகணம் 128277. இதனை 10-ஆல் பெருக்க 1282770. இதனை 22407-ஆல் வகுக்க வந்த ஈவு 57 இது கலை. சேடம் 5571. இதனை 60 ஆல் பெருக்க 334260. இதனை 22407 ஆல் வகுக்க (அர்த்தாதிகத்துடன்) விகலை 15. இவ்விதம் கணிக்கப் பெற்று வந்த துதீய சமஸ்கார சூரியனுக்குக் கலை 57, விகலை 15.

உதாரணம்-சந்திரனுக்கு:—இலங்கா மத்தியான்ன த்யுகணத்தை 10 ஆல் பெருக்கி 148 க்குக் கொடுத்து வந்த கலை 8667. சேடம் 54. இதை 60 ஆல் பெருக்கி 148 க்குக் கொடுத்து வந்த விகலை (அர்த்தாதிகத்துடன்) 22,

கலைகள் 8667 ஐ இராசி பாகை கலைகளாக்க இராசி 4-பாகை 24-கலை 27 முன்வைத்திருக்கிற விகலை 22, துதிய சமஸ்கார சந்திரன் இராசி 4-24-27-22.

## அங்காரகனுக்குத் துதிய சமஸ்காரமில்லை.

உதாரணம்-புதன் சீக்கிரோச்சத்திற்கு:—இலங்கா மத்தியான்ன த்யு கணத்தை 10ஆல் பெருக்கி 370ஆல் வகுக்க வந்தது 3466 கலை. சேடம் 350. இதை 60ஆல் பெருக்கி 370க்குக் கொடுக்க வந்தது (அர்த்தாதிகத்துடன்) விகலை 57. இவைகளை இராசி பாகை கலைகளாக்க இராசி 1. பாகை 27. கலை 46. விகலை 57. இது துதிய சமஸ்கார புதன் சீக்கிரோச்சமாம்.

## குருவிற்குத் துதிய சமஸ்காரமில்லை.

**உதாரணம் சுக்கிரன் சீக்கிரோச்சத்திற்கு** :—இலங்கா மத்தியான்ன த்யுகணத்தை 10 ஆல் பெருக்கி 399 ஆல் வகுக்க வந்த கலை 3214. சேடம் 384. இதை 60 ஆல் பெருக்கி 399 க்குக் கொடுத்து வந்த விகலை (அர்தாதிகத்துடன்) 58. இவைகளை இராசி பாகை கலைகளாக்க இராசி 1. பாகை 23 கலை 34 விகலை 58. இது துதிய சமஸ்கார சுக்கிரன் சீக்கிரோச்சமாம்.

## சனிக்குத் துதிய சமஸ்காரமில்லை.

**உதாரணம் சந்திரோச்சத்திற்கு** :—இலங்கா மத்தியான்ன த்யு கணத்தை 10 ஆல் பெருக்கி 9795 க்குக் கொடுத்து வந்த பலம் கலை 130. விகலை 57. இவைகளைப் பாகை செய்ய பாகை 2. கலை 10. விகலை 57. இது துதிய சமஸ்கார சந்திரோச்சமாம்.

## பாதனென்னும் இராகுவிற்குத் துதிய சமஸ்காரமில்லை.

இதுவரையில் கணிக்கப் பெற்றவைகளை அடியிற் காண்க.

| விவரம். | இராசி. | பா. | கலை. | விகலை. |
|---|---|---|---|---|
| சூரியனுக்குத் துதிய சமஸ்கார கணனம் | 0. | 0. | 57. | 15 |
| சந்திரனுக்குத் ,, ,, ,, | 4. | 24. | 27. | 22 |
| புதன் சீக்கிரோச்சத்திற்குத் ,, | 1. | 27. | 46. | 57 |
| சுக்கிரன் சீக்கிரோச்சத்திற்குத் ,, | 1. | 23. | 34. | 58 |
| சந்திரோச்சத்திற்குத் ,, ,, | 0. | 2. | 10. | 57 |

## திருதீய சமஸ்கார கணனம்.

திருதீய சமஸ்கார கணனம்:—சந்திரன்-அங்காரகன்-புதன்-குரு-இந்நால்வர்களுக்கு மட்டும் உண்டு. மற்றைய கிரகங்களுக்கில்லை.

† துருவாப்தத்தை 10 ஆல் ஹரித்து வந்த கலை விகலைகளைச் சந்திரனிலும், துருவாப்தத்தை 50 ஆல் ஹரித்து வந்த கலை விகலைகளை புதன் சீக்கிரோச்சத்திலும் கழித்து விடவேண்டும்.

துருவாப்தத்தை 24 ஆல் ஹரித்து வந்த கலை விகலைகளை அங்காரகனிலும், துருவாப்தத்தை 60 ஆல் ஹரித்து வந்த கலை விகலைகளைக் குருவிலும் சேர்க்கவேண்டும்.

அஃதாவது சந்திரனுக்கு ஹாரகம் 10. புதனுக்கு 50. அங்காரகனுக்கு 24. குருவிற்கு 60. இவைகளே ஹாரகங்களாம்.

**உதாரணம்-சந்திரனுக்குத் திருதீய சமஸ்கார கணனம்:**—துருவாப்தத்தை 10 ஆல் வகுக்க வந்த கலை 35. விகலை 6. இது சந்திரனுக்குத் திருதீய சமஸ்காரமாம்.

**உதாரணம்—அங்காரகனுக்குத் திருதீய சமஸ்கார கணனம்:**—துருவாப்தத்தை 24 ஆல் வகுக்க வந்த கலை 14. விகலை 37. இது அங்காரகனுக்கு திருதீய சமஸ்காரமாம்.

**உதாரணம்—புதனுக்குத்திருதீயசமஸ்கார கணனம்:**—துருவாப்தத்தை 50 ஆல் வகுக்கவந்த கலை 7. விகலை 1. இது புதனுக்குத் திருதீய சமஸ்காரமாம்.

**உதாரணம்—குருவிற்குத் திருதீயசமஸ்கார கணனம்:**—துருவாப்தத்தை 60 ஆல் வகுக்க வந்த கலை 5. விகலை 51. இது குருவிற்குத் திருதீய சமஸ்காரமாம்.

குறிப்பு:—**சூரியன்-சுக்கிரன்-சனி-பாதனேன்னும் இராகு-சந்திரோச்சம்** இவர்களுக்குத் திருதீய சமஸ்கார கணனமில்லை.

இது வரையில் கணிக்கப் பெற்றவைகளை அடியிற் காண்க.

| விவரம் | | | | கலை. | விகலை |
|---|---|---|---|---|---|
| சந்திரனுக்குத் திருதீய சமஸ்கார கணனம் | | | | 35. | 6. |
| அங்காரகனுக்குத் | ,, | ,, | ,, | 14. | 37. |
| புதனுக்குத் | ,, | ,, | ,, | 7. | 1. |
| குருவிற்குத் | ,, | ,, | ,, | 5. | 51. |

---

† துருவாப்தம் பற்றி இப்புத்தகம் 5-ஆம் பக்கத்தில் கத சாலியவாகன சகாப்தத்தில் 1491 ஐக் கழிக்க வந்த சேடம் துருவாப்தமென்று முன்னமே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதனை ஞாபகத்தில் வைக்கவேண்டும். இதில் (உதாரணமாய்) காண்பிக்கப்படும் ஜாதகருக்கு துருவாப்தம் 351.

# இலங்கைக்கு மத்தியான்னத்திற்கு நடுப்பகல் மத்திய கிரகங்களைக் கணிக்கும் வழி.

ஏழாம் பக்கத்திற் கண்ட (பதகத்தில்) ஸ்புட ஜந்திரியில் அவரவர்களின் பூர்வதுருவங்களில் அவரவர்களின் பிரதம இராசியாதிகளைச் சேர்த்துத் துதிய திருதிய கலாதி பலங்களில் அந்தந்தக் கிரகங்களுக்குத் தனமென்றால் கூட்டியும் ரிணமென்றால் கழித்தும் வருவது இலங்கா மத்தியான்னமத்தியம கிரகங்களாகும்.

**இலங்கா மத்தியான்ன மத்திய சூரிய கணனம்:**—சூரியன் பூர்வ துருவத்தில் சூரியன் பிரதம சமஸ்கார இராசியாதிகளைச் சேர்த்துத் துதிய கலாதியைக் கழிக்க வருவது இலங்கா மத்தியான்ன மத்தியம சூரியனும் (பூர்வ துருவம்=மூலத்துருவம்).

**உதாரணம்:** சூரியன் பூர்வ துருவம் இராசி 11. 17. 17. 34. பிரதம சமஸ்கார சூரியன் இராசி 2. 11. 6. 21 இவ்விரண்டையும் சேர்க்க வந்தது 13. 28. 23. 55 இதில் மண்டலம் 12 இராசியைக் கழிக்க வந்தது 1. 28. 23. 55 இதில் துதிய சமஸ்கார சூரியன் கலை 57 விகலை 15 ஐக் கழிக்கவந்த இராசி 1. 27. 26. 40 இது இலங்கா மத்தியான்ன சூரிய மத்தியம ஸ்புடமாம்.

**இலங்கா மத்தியான்ன மத்திய சந்திர கணனம்:**—சந்திரன் பூர்வ துருவத்தில் சந்திர பிரதம சமஸ்கார விராசியாதியையும் சந்திர துதிய சமஸ்கார விராசியாதிகளையும் ஒன்று சேர்த்து அதில் சந்திர திருதிய சமஸ்கார கலாதியைக் கழிக்க வருவது இலங்கா மத்தியான்ன மத்தியம சந்திரனும்

**உதாரணம்:** சந்திரன் பூர்வதுருவம் இராசி 11. 13. 22. 52 பிரதம சமஸ்கார சந்திரன் இராசி 7. 29. 3. 5. துதிய சமஸ்கார சந்திரன் இராசி 4. 24. 27. 22 இம்மூன்றையுஞ் சேர்க்க வந்த இராசியாதிகள் 24. 6. 53 19. இதில் மண்டலம் 2-க்கு 24 ராசியைக் கழிக்க வந்த சேடம் இராசி 0. 6. 53. 19 இதில், திருதிய சமஸ்கார சந்திரன் கலை 35. விகலை 6 ஐக் கழிக்க வந்த இராசியாதிகள் 0. 6. 18. 13 இது இலங்கா மத்தியான்ன சந்திர மத்தியம ஸ்புடமாம்.

**இலங்கா மத்தியான்ன மத்திய அங்காரக கணனம்:** அங்காரகன் பூர்வ துருவத்தில் அங்காரகன் பிரதம சமஸ்கார விராசிகளையும் துதிய சமஸ்கார கலாதிகளையும் ஒன்று சேர்க்க வருவது இலங்கா மத்தியான்ன மத்தியம அங்காரகனும்.

**உதாரணம்:** அங்காரகன் பூர்வ துருவம் இராசி 10-23-41-51. பிரதம சமஸ்கார அங்காரகன் இராசி 8-19-23-19 துதீய சமஸ்கார அங்காரகன் கலாதி 14-37 இம் மூன்றையும் ஒன்று சேர்க்க வந்த இராசி 19-13-19-47 இதில், மண்டலம் 12 இராசியைக் கழிக்க வந்தது 7-13-19-47 இது இலங்கா மத்தியான்ன அங்காரக மத்தியம ஸ்புடமாம்.

**இலங்கா மத்தியான்ன மத்திய புத சீக்கிரோச்ச கணனம்:—** புதன் சீக்கிரோச்ச பூர்வ துருவத்தில் புத சீக்கிர பிரதம சமஸ்கார விராசிகளைச் சேர்த்து அதில் துதீய சமஸ்கார புதனையும், திருதீய சமஸ்கார புதனையும் கழிக்க வந்தது இலங்கா மத்தியான்ன மத்தியம புத சீக்கிரோச்சமாம்.

**உதாரணம்:** புதன் சீக்கிரோச்ச பூர்வதுருவம் இராசி 1-23-5-15. பிரதம சமஸ்கார புதன் இராசி 4-8-11-8 இவ்விரண்டையும் ஒன்று சேர்க்க வந்த விராசி 6-1-16-23 இதில், துதீய சமஸ்கார புதன் இராசி 1-27-46-57, திருதீய சமஸ்கார புதன் கலாதி 7-1 இவ்விரண்டையுஞ் சேர்க்க வந்த விராசி 1-27-53-58 ஐக் கழிக்க வந்த சேடம் இராசி 4-3-22-25 இது இலங்கா மத்தியான்ன புதன் சீக்கிரோச்ச மத்தியம ஸ்புடமாம்.

**இலங்கா மத்தியான்ன மத்திய குரு கணனம்:—** குரு பூர்வ துருவத்தில் குரு பிரதம சமஸ்கார இராசியாதிகளையும் குரு திருதீய சமஸ்கார கலைகளையும் ஒன்றுசேர்க்க வருவது இலங்கா மத்தியான்னமத்தியம குருவாம்.

**உதாரணம்:** குரு பூர்வ துருவம் இராசி 8-21-12-42 பிரதம சமஸ்கார குரு இராசி 7-9-15-9 துதீய சமஸ்கார குரு கலாதி 5-51 இம் மூன்றையும் ஒன்று சேர்க்க வந்த விராசி 16-0-33 42 இதில், மண்டலம் 12 இராசியைக் கழிக்க வந்த விராசி 4-0-33-42 இது இலங்கா மத்தியான்ன குரு மத்தியம ஸ்புடமாம்.

**இலங்கா மத்தியான்ன மத்திய சுக்கிர சீக்கிரோச்ச கணனம்:—** சுக்கிரன் சீக்கிரோச்ச பூர்வ துருவத்தில் சுக்கிரன் பிரதம சமஸ்கார விராசிகளைக் சேர்த்து, சுக்கிரன் துதீய சமஸ்கார கலாதிகளைக் கழிக்க வந்தது இலங்கா மத்தியான்ன மத்தியம சுக்கிரன் சீக்கிரோச்சமாம்.

**உதாரணம்:** சுக்கிரன் சீக்கிரோச்ச பூர்வ துருவம் இராசி. 3-4-0-15 பிரதம சமஸ்கார சுக்கிரன் இராசி 0-12-6-55 இவ்விரண்டையும் ஒன்று சேர்க்க வந்த விராசி 3-16-7-10 இதில், சுக்கிரன் துதீய சமஸ்காரம் இராசி 1-23-34. 58 ஐக் கழிக்க வந்த விராசி 1-22-32-12 இது இலங்கா மத்தியான்ன சுக்கிரன் சீக்கிரோச்ச மத்தியம ஸ்புடமாம்.

**இலங்கா மத்தியான்ன மத்திய சனி கணனம்:**—சனி பூர்வ துருவத்தில் சனி பிரதம சமஸ்கார விராசியாதிகளைச் சேர்க்க வந்த விராசியாதிகள் இலங்கா மத்தியான்ன மத்தியம சனியாம்.

**உதாரணம்:** சனி பூர்வ துருவம் இராசி 5. 8. 57. 7 இதனுடன் பிரதம சமஸ்கார சனி இராசி 10. 29. 29. 0 த்தைச் சேர்க்க வந்த இராசி 16 8. 26. 7. இதில் மண்டலம் 12 இராசியைக் கழிக்க வந்த விராசி 4. 8. 26. 7 இது இலங்கா மத்தியான்ன மத்திய சனி ஸ்புடமாம்.

**இலங்கா மத்தியான்ன மத்திய பாதன் (இராகு) கணனம்:**—பாதன் பூர்வ துருவத்தில் பாதன் பிரதம சமஸ்கார இராசியாதிகளைச் சேர்க்க வந்த விராசியாதிகள் இலங்கா மத்தியான்ன மத்தியம பாதனும்.

**உதாரணம்:** பாதன் பூர்வ துருவம் இராசி 6. 18. 36. 18 இதனுடன் பிரதம சமஸ்கார பாதன் இராசி 10. 16. 43. 57 ஐச் சேர்க்க வந்தது இராசி 17. 5. 20. 15 இதில் மண்டலம் 12 இராசியைக் கழிக்க வந்த இராசி 5. 5. 20. 15 இது இலங்கா மத்தியான்ன மத்தியம பாதனென்னும் இராகு ஸ்புடமாம்.

**இலங்கா மத்தியான்ன மத்திய சந்திரோச்ச கணனம்:**—சந்திரோச்ச பூர்வ துருவத்தில் சந்திரோச்ச பிரதம சமஸ்கார விராசியாதிகளைச் சேர்த்து துதீய சமஸ்கார கலாதியைக் கழிக்க வந்தது இலங்கா மத்தியான்ன மத்தியம சந்திரோச்சமாம்.

**உதாரணம்:** சந்திரோச்ச பூர்வ துருவம் இராசி 0. 0. 53. 50 இதில், சந்திரோச்ச பிரதம சமஸ்கார இராசியாதிகள் 8. 10-2. 24 ஐச் சேர்க்க வந்த விராசியாதிகள் 8. 10 56. 44 இதில், சந்திரோச்ச துதீய சமஸ்காரம் இராசி 0. 2. 10. 57 ஐக் கழிக்க வந்த சேட விராசிகள் 8 8. 45. 47. இது இலங்கா மத்தியான்ன மத்தியம சந்திரோச்ச ஸ்புடமாம்.

**இலங்கா மத்தியான்ன மத்திய ரவி யுச்ச கணனம்:**—இரவியுச்சத்திற்குப் பூர்வ துருவம் இராசி 2. 17. 16. 50. துருவாப்தத்தை 2 ஆல் பெருக்கி 17 ஆல் வகுத்து வந்த ஈவு விகலையாம். இந்த விகலைகளை ரவியுச்ச பூர்வ துருவத்தில் சேர்க்கவருவது ரவியுச்சமாம்.

**உதாரணம்:** துருவாப்தம் 351, இதை 2 ஆல் பெருக்க வந்தது 702 இதை 17 ஆல் வகுக்க ஈவு 41. இது விகலை. இந்தவிகலை 41ஐ ரவியுச்ச பூர்வ துருவம் இராசி 2. 17. 16. 50 ல் சேர்க்க வந்தது இராசி 2. 17. 17. 31 இது இலங்கா மத்தியான்ன மத்தியம ரவியுச்ச ஸ்புடமாம்.

## இதுவரையிற் கணிக்கப் பெற்றவைகளை அடியிற் காண்க.

| விவரம் | இராசி | பாகை | கலை | விகலை |
|---|---|---|---|---|
| இலங்கா மத்தியான்ன மத்தியம சூரியன் | 1. | 27. | 26. | 40. |
| ,, ,, ,, சந்திரன் | 0. | 6. | 18. | 13. |
| ,, ,, ,, அங்காரகன் | 7. | 13. | 19. | 47. |
| ,, ,, புதன் சீக்கிரோச்சம் | 4. | 3. | 22. | 25 |
| ,, ,, குரு | 4. | 0. | 33. | 42. |
| ,, ,, சுக்கிரன் சீக்கிரோச்சம் | 1. | 22. | 32. | 12. |
| ,, ,, சனி | 4. | 8. | 26. | 7. |
| ,, ,, பாதனென்னும் இராகு | 5. | 5. | 20. | 15. |
| ,, ,, சந்திரோச்சம் | 8. | 8. | 45. | 47. |
| ,, ,, ரவியுச்சம் | 2, | 17. | 17. | 31. |

## தேசாந்தர ஸமஸ்கார கணனம்.

பூமத்தியத்திற்கு மேற்குத் திக்கில் இருப்பவராயினும் கிழக்குத் திக்கில் இருப்பவராயினும் பூமத்தியமத்திற்குத் தாங்கள் எவ்வளவுதூரத்தில் இருப்பார்களோ அந்த யோசனைகளை அர்த்தித்து (பாதி செய்து) இதனால் சூரியாதி தினகதிகளைக் குணித்து 40 ஆல் வகுத்து வந்த ஈவு விகலைகளாகும். இந்த விகலைகளைப் பூமத்தியத்திற்கு மேற்கில் இருப்பவர்கள் முன்கண்ட இலங்கா மத்தியான்ன மத்தியம கிரகங்களில் சேர்க்கவேண்டும். பூமத்தியத்திற்குக் கிழக்கில் உள்ளவர்கள் இலங்கா மத்தியான்ன மத்தியம கிரகங்களில் கழிக்கவேண்டும். இப்படிச் செய்து வருவது ஸ்வதேச (சுதேச) மத்தியான்ன மத்தியம கிரகஸ்புடங்களாகும்.

சில முக்கிய பட்டணங்களுக்குப் பூமத்திய ரேகைக்குக் கிழக்கில் உள்ள தூரத்தை அறிவிக்கும் அட்டவணே.

| எண் | முக்கிய பட்டணங் களின் பெயர் | கிழக்கு | மைல்கள் | எண் | முக்கிய பட்டணங் களின் பெயர் | கிழக்கு | மைல்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆரணி | கிழக்கு | 700 | 19 | தஞ்சாவூர் | கிழக்கு | 627 |
| 2 | ஆற்காடு | ,, | 635 | 20 | தலைச்சேரி | ,, | 361 |
| 3 | உதகமண்டலம் | ,, | 430 | 21 | திருநெல்வேலி | ,, | 563 |
| 4 | கர்நூல் | ,, | 530 | 22 | திருப்பதி | ,, | 650 |
| 5 | கடப்பை | ,, | 587 | 23 | திருப்பத்தூர் | ,, | 650 |
| 6 | கல்கத்தா | ,, | 1154 | 24 | திரிசிராப்பள்ளி | ,, | 560 |
| 7 | கள்ளிக்கோட்டை | ,, | 403 | 25 | திருவனந்தபுரம் | ,, | 498 |
| 8 | கன்னனூர் | ,, | 361 | 26 | தர்மபுரி | ,, | 551 |
| 9 | காளத்தி | ,, | 620 | 27 | புதுக்கோட்டை | ,, | 600 |
| 10 | கும்பகோணம் | ,, | 635 | 28 | புதுச்சேரி | ,, | 672 |
| 11 | கொச்சி | ,, | 432 | 29 | பெங்களூர் | ,, | 509 |
| 12 | கோயம்புத்தூர் | ,, | 521 | 30 | மங்களூர் | ,, | 346 |
| 13 | கொழும்பு | ,, | 694 | 31 | மைசூர் | ,, | 456 |
| 14 | கஞ்சம் | ,, | 972 | 32 | மாயூரம் | ,, | 638 |
| 15 | சித்தூர் | ,, | 612 | 33 | ராமநாதபுரம் | ,, | 508 |
| 16 | சிதம்பரம் | ,, | 645 | 34 | ராமேஸ்வரம் | ,, | 646 |
| 17 | செங்கல்பட்டு | ,, | 703 | 35 | விஜயநகரம் | ,, | 874 |
| 18 | சென்னை | ,, | 672 | 36 | விசாகப்பட்டினம் | ,, | 865 |

**உதாரணம்:**—ஜனன தேசமானது தென்னுற்காடு ஜில்லா சிதம்பரம் தாலூக்கா பறங்கிப்பேட்டை யானதினுல் இது பூமத்திய ரேகைக்குக் கீழ் பாகத்தில் 645 மைலில் இருப்பதினுல் இந்த மைலை 10 ஆல் வகுக்க யோசனையாகும் (யோசனை 1-க்கு 10 மைல்) இந்த மைல் 645 ஐ 10 ஆல் வகுக்க $64\frac{1}{2}$ இது யோசனையாம். இதை அர்த்திக்க (அதாவது பாதி செய்ய) $32\frac{1}{4}$ இதனைக் கொண்டே சமஸ்தமும் செய்து கொள்ளவேண்டும்.

**தேசாந்தர கணன உதாரணம் சூரியனுக்கு.** சூரியதினகதி கலை 59. விகலை 8. உபவிகலை 10. இதை $32\frac{1}{4}$ விஞல் பெருக்க வந்தது கலை 1907. விகலை 8. உபவிகலை $22\frac{1}{2}$. இதை 40 ஆல் வகுக்க ஈவு 47 இது விகலை சேடத்தை நீக்குக. இந்த விகலை 47-ம் சூரியனுக்குத் தேசாந்தர விகலையாம்

**தேசாந்தர கணன உதாரணம்:—சந்திரனுக்கு:** சந்திர தினகதி 790. விகலை 34 உபவிகலை 52 இதை $32\frac{1}{4}$ விஞற் பெருக்க வந்தது கலை 25496. 14. 27இதை 40 ஆல் வகுக்க ஈவு 637. இதுவிகலை.சேடத்தை நீக்குக.

விகலை 637 க்குக் கலை 10. விகலை 37 இதுவே சந்திரனுக்குத் தேசாந்தர கலை விகலைகளாம்.

**தேசாந்தர கணன உதாரணம்:—அங்காரகனுக்கு:** அங்காரக தின கதி கலை 31 விகலை 26 உபவிகலை 0 இதை $32\frac{1}{4}$ வினுற் பெருக்க வந்தது கலை 1013-43-30 இதை 40 ஆல் வகுக்க வந்த ஈவு 25 இது விகலை. சேடம் நீக்குக, இந்த 25. விகலையே அங்காரகனுக்குத் தேசாந்தர விகலையாம்.

**தேசாந்தர கணன உதாரணம்:—புத சீக்கிரோச்சத்திற்கு:** புதன் சீக்கிரோச்ச தினகதி கலை 245, 32, 0. இதனை $32\frac{1}{4}$ வினுற் பெருக்க வந்தது கலை 7918, 27, 0 இதை 40 ஆல் வகுக்க வந்த ஈவு அர்த்தாதிகத்துடன் 198 இது விகலை. இந்த விகலை 198 க்குக் கலை 3 விகலை 18 இதுவே புதனுக்குத் தேசாந்தர கலை விகலைகளாம்.

**தேசாந்தர கணன உதாரணம்:—குருவிற்கு:** குருதினகதி கலை 5-0-0 இதை $32\frac{1}{4}$ வினுற் பெருக்க வந்தது கலை 161-15-0 இதை 40 ஆல் வகுக்கவந்த ஈவு விகலை 4.இந்த விகலை 4-ம் குருவிற்குத்தேசாந்தர விகலையாம்.

**தேசாந்தர கணன உதாரணம்:—சுக்கிர சீக்கிரோச்சத்திற்கு:** சுக்கிரன் சீக்கிரோச்ச தினகதி கலை 96-8-0 இதை $32\frac{1}{4}$ வினுற் பெருக்க வந்தது கலை 3100-18-0 இதை 40 ஆல் வகுக்க வந்த ஈவு விகலை 77 இதனைக் கலையாக்க கலை 1 விகலை 17 இது சுக்கிரனுக்குத் தேசாந்தர கலை விகலைகளாம்.

**தேசாந்தர கணன உதாரணம்:—சனிக்கு:** சனி தினகதி கலை 2-0-0 இதை $32\frac{1}{4}$ வினுற் பெருக்க வந்தது கலை 64-30. இதை 40 ஆல் வகுக்க வந்தது விகலை 1 சேடம் நீக்குக.இந்த விகலை ஒன்றே சனிக்குத்தேசாந்தர விகலையாம்.

**தேசாந்தர கணன உதாரணம்:—பாதனென்னும் இராகுவிற்கு:** இராகு தினகதி கலை 3-11-0 இதனை $32\frac{1}{4}$ வினுற் பெருக்க வந்தது கலை 102-39-45. இதை 40 ஆல் வகுக்க வந்த விகலை 2 இந்த 2. விகலையே இராகுவிற்குத் தேசாந்தர விகலையாம்.

**தேசாந்தர கணன உதாரணம்:—சந்திரோச்சத்திற்கு:** சந்திரோச்ச தினகதி கலை 6-41-0 இதை $32\frac{1}{4}$ வினுற் பெருக்க வந்த கலை 215-32-15 இதை 40 ஆல் வகுக்க வந்த விகலை 5இந்த 5 விகலையே சந்திரோச்ச தேசாந்தர விகலையாம்.

## இதுவரையில் கணிக்கப் பேற்றவைகளை அடியிற் காண்க.

ஜனனமான பறங்கிப்பேட்டையின் தேசாந்தர சமஸ்கார விகலைகள்.

| கிரகம். | க. வி. | கிரகம் | க. வி. | கிரகம் | க. வி. |
|---|---|---|---|---|---|
| சூரியனுக்கு | 0. 47. | புதன்சீக்கிரோச்ச | 3. 18. | சனிக்கு | 0. 1. |
| சந்திரனுக்கு | 10. 37 | குருவிற்கு | 0. 4. | பாதனுக்கு | 0. 2. |
| அங்காரகனுக்கு | 0. 25. | சுக்கிரன் சீக்கிரோச்ச | 1. 17. | சந்திரோச்ச | 0. 5. |

ஜனன தேசமானது (பறங்கிப்பேட்டை) பூமத்திய ரேகைக்குக் கிழக்கி லிருப்பதினால் இலங்கா மத்தியான்ன மத்தியம கிரகங்களில் கழிக்கவருவது ஜனன தேசமான பறங்கிப்பேட்டைக்கு மத்தியான்ன மத்தியம கிரகங்களாக ஏற்படும்.

**உதாரணம்:—சூரியனுக்கு:** இலங்கா மத்தியான்ன மத்தியம சூரியன் இராசி 1-27-26-40 இதில் சூரியன் தேசாந்தர விகலை 47 ஐக் கழிக்க வந்தது 1-27-25-53. இது சுதேச மத்தியான்ன மத்தியம சூரியஸ்புடமாம்.

**உதாரணம்:—சந்திரனுக்கு:** இலங்கா மத்தியான்ன மத்தியம சந்திரன் இராசி 0-6-18-13 இதில் சந்திரன் தேசாந்தர கலை 10-37 ஐக் கழிக்க வந்தது 0-6-7-36 இது சுதேச மத்தியான்ன மத்தியம சந்திரஸ்புடமாம்.

**உதாரணம்:—அங்காரகனுக்கு:** இலங்கா மத்தியான்ன மத்தியமஅங்காரகன் 7-13-19-47 இதில் அங்காரகன் தேசாந்தர விகலை 25 ஐக் கழிக்க வந்தது 7-13-19-22 இது சுதேச மத்தியான்ன மத்தியமஅங்காரகஸ்புடமாம்.

**உதாரணம்:—புதனுக்கு:** இலங்கா மத்தியான்ன மத்தியம புத சீக்கிரோச்சம் 4-3-22-25 இதில் புதன் தேசாந்தர கலாதி 3-18 ஐக் கழிக்க வந்தது 4-3-19-7 இது சுதேச மத்தியான்ன மத்தியம சீக்கிரோச்ச புதஸ்புடமாம்.

**உதாரணம்:—குருவிற்கு:** இலங்கா மத்தியான்ன மத்தியம குரு 4-0-33-42 இதில் குரு தேசாந்தர கலை 4 ஐக் கழிக்க வந்தது 4-0-33-38 இது சுதேச மத்தியான்ன மத்தியம குருஸ்புடமாம்.

**உதாரணம்:—சுக்கிரனுக்கு:** இலங்கா மத்தியான்ன மத்தியம சுக்கிர சீக்கிரோச்சம் 1-22-32 12 இதில் சுக்கிரன் தேசாந்தர கலாதி. 1-17 ஐக்கழிக்க, வந்தது 1-22 30-55இது சுதேச மத்தியான்ன மத்தியம சீக்கிரோச்ச சுக்கிரஸ்புடமாம்.

**உதாரணம்:-சனிக்கு:** இலங்காமத்தியான்ன மத்தியம சனி 4-8-26-7 இதில் சனி தேசாந்தர விகலை 1 ஐக் கழிக்க வந்தது 4-8-26-6 இது சுதேச மத்தியான்ன மத்தியம சனிஸ்புடமாம்.

**உதாரணம்:—பாதனென்னும் இராகுவிற்கு:** இலங்கா மத்தியான்ன மத்தியம பாதனென்னும் இராகு 5-5-20-15 இதில் இராகு தேசாந்தர விகலை 2 ஐக் கழிக்க வந்தது 5-5-20-13 இது சுதேச மத்தியான்ன மத்தியம பாதனென்னும் இராகு ஸ்புடமாம்.

**உதாரணம்:—சந்திரோச்சத்திற்கு:** இலங்கா மத்தியான்ன மத்தியம சந்திரோச்சம் 8-8-45-47 இதில் சந்திரோச்ச தேசாந்தர விகலை 5 ஐக் கழிக்க வந்தது 8 8.45-42 இது சுதேச மத்தியான்ன மத்தியம சந்திரோச்ச ஸ்புடமாம்.

இதுவரையில் கணிக்கப் பெற்றவைகள் ரௌத்திரி௵ வைகாசி௴ 30 ஆந் உ ஸ்திரவாரம் ஜனன தேசமான பறங்கிப்பேட்டைக்கு மத்தியான்ன மத்தியம கிரகஸ்புடங்களாகும்.

அவை வருமாறு.

| கிரகம். | இ. பா. க. வி. | கிரகம். | இ. பா. க. வி. |
|---|---|---|---|
| சூரிய மத்தியமம் | 1. 27. 25. 53 | சுக்கிரன் சீக்கிரோச்சம் | 1 22 30 55 |
| சந்திர மத்தியமம் | 0. 6. 7. 36 | சனி மத்தியமம் | 4. 8. 26 6 |
| அங்காரக மத்தியமம் | 7. 13. 19. 22 | இராகு மத்தியமம் | 5. 5. 20. 13 |
| புதன் சீக்கிரோச்சம் | 4. 3. 19. 7 | சந்திரோச்சம் | 8. 8. 45. 42 |
| குரு மத்தியமம் | 4. 0. 33. 38 | ரவியுச்சம் | 2. 17. 17. 31 |

## திருக் சமஸ்கார கணனம்.

கத கலியுகாதி வருஷத்தை 3600 ஆல் ஹரிக்க (வகுக்க) வந்த சேடம் 1800-க்கு மேலிருந்தால் முன் கண்ட ஹாரகத்தில் வாங்கவேண்டும். சேஷ வருஷங்களை 11 ஆல் குணிக்க வேண்டும். அப்படிக் குணித்து வந்த சங்கியைகளை 1000 (ஆயிரத்தால்) ஹரித்துக்கலாதி பலத்தைக் கொள்ளவேண்டும். அந்தக் கலாதி பலத்தை இதன் கீழ்ச் சொல்லும் எண்களால் (சங்கியைகளால்) குணிக்க வருவது அந்தந்தக் கிரகங்களுக்குத் திருக் பலமாகும். ஷை திருக் பலங்களை இவ்விடம் சொல்வதைப்போல் அந்தந்த மத்தியம கிரகங்களில் (சுதேச மத்தியான்ன) சமஸ்கரிக்க வருவது திருக் சமஸ்கார மத்தியம கிரகங்களாகும். பின்பு ஸ்புடம் செய்து கொள்ளவேண்டும்.

**குணக எண்கள்:** சந்திரனுக்கு 1, சந்திரோச்சத்திற்கு 8, பாதனென்னும் இராகுவிற்கு 15, குருவிற்கு 10, சுக்கிர சீக்கிரோச்சத்திற்கு 32, சனிக்கு 15, இந்தக் குணக எண்களால் முன் சொல்லிய கலாதி பலங்களைப் (திருக் சமஸ்கார கலைகளைப்) பெருக்கவேண்டும். இவ்விதம் பெருக்கி வந்த பலங்களானது அவரவர்களுக்கு திருக் பலமாம். அப்படி வரும் சனியின் திருக் பலத்தை சனி மத்தியமத்திலும், பாதனின் திருக்பலத்தைப் பாதனென்னும் இராகு மத்தியமத்திலும் சேர்க்கவேண்டும். மற்ற கிரகங்களான எல்லாக் கிரகங்களின் மத்தியமங்களிலும் அவரவர்கள் திருக்பலத்தைக் கழிக்கவேண்டும்.

**குறிப்பு:** சூரியன் - அங்காரகன் - புதன் இவர்கள் மூவருக்கும் திருக் சமஸ்காரம் சொல்லப்படவில்லை இப்படியாக திருக்சமஸ்காரம் செய்து கொண்டு பின்பு ஸ்புடம் செய்யத் திருக் சித்த ஸ்புட கிரகங்களாகும்.

**உதாரணம்:**—கத கலியப்தம்ளூ 5021. இதை 3600 ஆல் வகுக்க வந்த ஈவு 1. சேடம் 1421. இதை 11 ஆல் பெருக்க 15631. இதனை 1000 த்தால் வகுக்க ஈவு 15 இது கலை. சேடம் 631 இதை 60 ஆல் பெருக்கி 1000 த்தால் வகுக்க அர்த்தாதிகத்துடன் விகலை 38. இந்தக்கலை 15 விகலை 38 க்கும் திருக் ஸம்ஸ்கார கலை விகலைகள் என்பர் பெரியார்.

**உதாரணம்-சந்திரனுக்கு:** திருக் சமஸ்கார கலாதிகள் 15.38. இதை 1 ஆல் பெருக்க வந்தது கலை 15,38. இது சந்திரனுக்குத் திருக்பலமாம்.

**உதாரணம்-சந்திரோச்சத்திற்கு:** திருக் சமஸ்கார கலாதிகள் 15.38 இதனைச்சந்திரோச்ச துருவம் 8ஆல் பெருக்கவந்தகலை 125 விகலை 4 இதற்குத் சந்திரோச்ச திருக்பலமென்பர். (இதன் பாகாதிகள் 2. 5.4 )

**உதாரணம்-பாதனென்னும் இராகுவிற்கு:** திருக் சமஸ்கார கலாதிகள் 15. 38. இதனை இராகு துருவம் 15, ஆல் பெருக்க வந்தது கலை 234 விகலை 30. இதற்குப்பாதன் திருக்பலமென்பர். (இதன் பாகாதிகள் 3. 54 30)

**உதாரணம்-குருவிற்கு:** திருக் ஸம்ஸ்கார கலாதிகள் 15. 38. இதனைக் குருதுருவம் 10 ஆல் பெருக்க வந்தது கலை 156. 20. இது குருவிற்குத் திருக்பலமாம். (இதன் பாகாதிகள் 2. 36. 20)

**உதாரணம்-சுக்கிரனுக்கு:** திருக் சமஸ்கார கலாதிகள் 15. 38. இதனைச் சுக்கிர துருவம் 32 ஆல் பெருக்க வந்தது கலை 500. 16 இது சுக்கிரனுக்குத் திருக்பலமாம். (இதன் பாகாதிகள் 8. 20. 16.)

**உதாரணம்-சனிக்கு:** திருக் சமஸ்கார கலாதிகள் 15. 38. இதனைச் சனி துருவம் 15 ஆல் பெருக்க வந்தது கலை 234. 30. இது சனிக்கு திருக்பலமாம். (இதன் பாகாதிகள் 3. 54. 30).

**சூரியன்-அங்காரகன்-புதன்:** இவர்களுக்குத் திருக்பல சமஸ்காரமில்லை. ஆனதினுல் சுதேச மத்தியான்ன மத்தியம கிரகங்களுக்கு ஏற்பட்ட மத்தியமத்தையே இந்தவிடத்தில் சூரியன்-அங்காரகன்-புதன் இம் மூவர்களுக்கும் உபயோகித்துக் கொள்க.

## திருக்பல சமஸ்கார கணனம்.

**உதாரணம்-சூரியனுக்கு:** திருக்பல சமஸ்காரமில்லை. ஆனதினுல் சுதேச மத்தியான்ன சூரிய மத்தியமத்தையே கொள்க. இராசி. 1. 27. 25. 53.

**உதாரணம்-சந்திரனுக்கு:** சுதேச மத்தியான்ன மத்தியம சந்திரன் இராசி 0. 6. 7. 36 இதில் சந்திரன் திருக்பலம்கலை 15. 38. ஐக் கழிக்க வந்த இராசி 0. 5. 51. 58. இது திருக் துல்லிய சமஸ்கார சந்திரனும்.

**உதாரணம்-அங்காரகனுக்கு:** திருக்பல சமஸ்காரமில்லை. ஆனதினல் சுதேச மத்தியான்ன அங்காரக மத்தியமத்தையே கொள்க. இராசி. 7. 13. 19. 22.

**உதாரணம்-சந்திரோச்சத்திற்கு:** சுதேச மத்தியான்ன மத்தியம சந்திரோச்சம் இராசி 8. 8. 45, 42. இதில் சந்திரோச்ச திருக்பலம் பாகை 2 5. 4 ஐக் கழிக்க வந்தது இராசி 8. 6. 40. 38. இது திருக்துல்லிய சமஸ்கார சந்திரோச்சமாம்.

**உதாரணம்-புதனுக்கு:** திருக்பல சமஸ்கார மில்லை. ஆனதினல் சுதேச மத்தியான்ன புத மத்தியமத்தையே கொள்க இராசி 4. 3. 19. 7.

**உதாரணம்-குருவிற்கு:** சுதேச மத்தியான்ன மத்தியம குரு இராசி 4-0. 33. 38 இதில் குருதிருக்பலம் பாகை 2. 36. 20 ஐக் கழிக்க வந்தது இராசி 3. 27. 57. 18. இது திருக்துல்லிய சமஸ்கார குருவாம்.

**உதாரணம்-சுக்கிரனுக்கு:** சுதேச மத்தியான்ன மத்தியம சுக்கிரன் இராசி 1. 22. 30. 55, இதில் சுக்கிரன் திருக்பலம் பாகை 8. 20. 16 ஐக் கழிக்க வந்தது இராசி 1. 14. 10. 39. இது திருக்துல்லிய சமஸ்கார சுக்கிரனும்.

**உதாரணம்-சனிக்கு:** சுதேச மத்தியான்ன மத்தியம சனி இராசி 4 8. 26. 6. இதில் சனி திருக்பலம் பாகை 3. 54. 30 ஐச் சேர்க்க வந்தது இராசி 4 12. 20. 36. இது திருக்துல்லிய சமஸ்கார சனியாம்

**உதாரணம்-பாதனுக்கு:** சுதேச மத்தியான்ன மத்தியம பாதன் இராசி 5. 5. 20, 13. இதில் பாதன் என்னும் இராகு திருக்பலம் பாகை 3. 54. 30. ஐச் சேர்க்க வந்தது இராசி 5. 9. 14. 43. இது திருக்துல்லிய சமஸ்கார பாதனும்.

இதுவரையில் கணிக்கப் பெற்றவைகள் பறங்கிப்பேட்டைக்கு (சுதேசத்திற்கு) மத்தியான்ன **திருக்துல்லிய** சமஸ்கார கிரகங்களாகும். அவைவருமாறு

| கிரகம் | இ. பா. க. வி | கிரகம் | இ. பா. க. வி | கிரகம் | இ. பா. க. வி |
|---|---|---|---|---|---|
| சூரியன் | 1. 27 25. 53 | புதன் | 4 3. 19. 7. | சனி | 4. 12. 20. 36. |
| சந்திரன் | 0. 5. 51. 58. | குரு | 3. 27. 57. 18. | இராகு | 5. 9. 14. 43. |
| அங்கார | 7. 13. 19. 22. | சுக்கி | 1. 14. 10. 39. | சந்திரோ | 8. 6. 40. 38. |

குறிப்பு: இந்தத் திருக்துல்லிய கிரகங்களே மேல் கணிக்கப் படுவதற்கு உபயோகமாகும்.

இந்தத்திருக்துல்லிய கிரகங்களைப்புஜாகோடி சமஸ்காரம் செய்துகொள்ள

வேண்டும். அவை வருமாறு. இந்தப் புஜாகோடி சமஸ்காரம் சூரிய சந்திரர் களுக்கு மாத்திரம் உபயோகம். (மற்ற கிரகங்களான குஜாதி பஞ்சக்கிரகங் களுக்கு உபயோகமில்லை.)

## சூரிய மந்த பதகம்.

| எண் | மந்த பதகம் | | அந்தரம் | | எண் | மந்த பதகம் | | அந்தரம் | | எண் | மந்த பதகம் | | அந்தரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | க | வி | க | வி | | க | வி | க | வி | | க | வி | க | வி |
| 1 | 2 | 20 | 2 | 20 | 31 | 68 | 1 | 1 | 56 | 61 | 114 | 31 | 1 | 4 |
| 2 | 4 | 40 | 2 | 20 | 32 | 69 | 57 | 1 | 55 | 62 | 115 | 35 | 1 | 2 |
| 3 | 7 | 0 | 2 | 20 | 33 | 71 | 52 | 1 | 54 | 63 | 116 | 37 | 1 | 0 |
| 4 | 9 | 20 | 2 | 19 | 34 | 73 | 46 | 1 | 52 | 64 | 117 | 37 | 0 | 58 |
| 5 | 11 | 39 | 2 | 19 | 35 | 75 | 38 | 1 | 51 | 65 | 118 | 35 | 0 | 55 |
| 6 | 13 | 58 | 2 | 18 | 36 | 77 | 29 | 1 | 49 | 66 | 119 | 30 | 0 | 54 |
| 7 | 16 | 16 | 2 | 17 | 37 | 79 | 18 | 1 | 48 | 67 | 120 | 24 | 0 | 51 |
| 8 | 18 | 33 | 2 | 17 | 38 | 81 | 6 | 1 | 46 | 68 | 121 | 15 | 0 | 49 |
| 9 | 20 | 50 | 2 | 17 | 39 | 82 | 52 | 1 | 45 | 69 | 122 | 4 | 0 | 47 |
| 10 | 23 | 7 | 2 | 17 | 40 | 84 | 37 | 1 | 44 | 70 | 122 | 51 | 0 | 44 |
| 11 | 25 | 24 | 2 | 16 | 41 | 86 | 21 | 1 | 42 | 71 | 123 | 35 | 0 | 42 |
| 12 | 27 | 40 | 2 | 15 | 42 | 88 | 3 | 1 | 40 | 72 | 124 | 17 | 0 | 42 |
| 13 | 29 | 55 | 2 | 14 | 43 | 89 | 43 | 1 | 38 | 73 | 124 | 59 | 0 | 37 |
| 14 | 32 | 9 | 2 | 14 | 44 | 91 | 21 | 1 | 36 | 74 | 125 | 36 | 0 | 36 |
| 15 | 34 | 23 | 2 | 14 | 45 | 92 | 57 | 1 | 35 | 75 | 126 | 12 | 0 | 33 |
| 16 | 36 | 37 | 2 | 12 | 46 | 94 | 32 | 1 | 33 | 76 | 126 | 45 | 0 | 31 |
| 17 | 38 | 49 | 2 | 12 | 47 | 96 | 5 | 1 | 31 | 77 | 127 | 16 | 0 | 29 |
| 18 | 41 | 1 | 2 | 11 | 48 | 97 | 36 | 1 | 30 | 78 | 127 | 45 | 0 | 27 |
| 19 | 43 | 12 | 2 | 10 | 49 | 99 | 6 | 1 | 28 | 79 | 128 | 12 | 0 | 24 |
| 20 | 45 | 22 | 2 | 9 | 50 | 100 | 34 | 1 | 26 | 80 | 128 | 36 | 0 | 22 |
| 21 | 47 | 31 | 2 | 8 | 51 | 102 | 0 | 1 | 24 | 81 | 128 | 58 | 0 | 22 |
| 22 | 49 | 39 | 2 | 7 | 52 | 103 | 24 | 1 | 25 | 82 | 129 | 18 | 0 | 17 |
| 23 | 51 | 46 | 2 | 5 | 53 | 104 | 46 | 1 | 20 | 83 | 129 | 35 | 0 | 15 |
| 24 | 53 | 51 | 2 | 5 | 54 | 106 | 6 | 1 | 18 | 84 | 129 | 50 | 0 | 13 |
| 25 | 55 | 56 | 2 | 4 | 55 | 107 | 24 | 1 | 17 | 85 | 130 | 3 | 0 | 10 |
| 26 | 58 | 0 | 2 | 3 | 56 | 108 | 41 | 1 | 14 | 86 | 130 | 13 | 0 | 8 |
| 27 | 60 | 3 | 2 | 1 | 57 | 109 | 55 | 1 | 11 | 87 | 130 | 21 | 0 | 6 |
| 28 | 62 | 4 | 2 | 0 | 58 | 111 | 6 | 1 | 11 | 88 | 130 | 27 | 0 | 4 |
| 29 | 64 | 4 | 1 | 59 | 59 | 112 | 17 | 1 | 8 | 89 | 130 | 31 | 0 | 1 |
| 30 | 66 | 3 | 1 | 58 | 60 | 113 | 25 | 1 | 6 | 90 | 130 | 32 | 0 | 0 |

## புஜா கோடி.

3 இராசிக் குள்ளிருந்தால் அதுவே புஜா.

3 இராசிக்குமேல் 6 இராசிக்குள் இருந்தால் 6 இராசியில் கழிக்க } புஜா.

6 இராசிக்கு மேல் 9 இராசிக்குள் இருந்தால் 6 இராசியைக் கழிக்க } புஜா.

9 இராசிக்கு மேல் 12 இராசிக்குள் இருந்தால் 12 இராசியில் கழிக்க } புஜா.

**சூரியஸ்புட கணனம்:** இலங்கா மத்தியான்ன ரவியுச்சத்தில் ஜனன கால திருக்துல்லிய சூரியனைக் கழித்து வந்த சேடம் மந்தகேந்திரம் ஆம். இது மேடாதி 6 இரா்சி வரையில் தனமென்றும் துலாதி 6 இராசி வரையில் ரிணமென்றும் அறிக. இந்த மந்த கேந்திரத்தை முன் சொன்னபடி புஜா செய்து கொள்ளவேண்டும். அப்படிச் செய்து வந்தவைகளைப் பாகைக ளாக்கவேண்டும். புஜா சேஷ ராசி ஸ்தானத்தில் இராசிகள் இருந்தால் அந்த ராசிகளையும் பாகைகளாக்கிக் கொள்ளவேண்டும் இப்படிச் செய்து வரும் பாகைகளுக்குப் பதக சங்கியை என்று பெயர். இராசிஸ்தானத்தில் இராசியில்லாவிடின் பாகை எவ்வளவிருக்கின்றதோ அதே பதக சங்கியையாகும். ஷை பதக சங்கியைப்படி (முன் 24ஆம் பக்கத்தில் உள்ள) சூரியன் மந்த பதகத்தில் உள்ள பதக கலைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஷை பதக கலைக்கும் அடுத்த பதககலைக்கும் உள்ள அந்தர கலைகளைப் புஜா சேஷ கலாதிகளினுற் சதுஷ்பிரதி நியாயமாகக் குணித்து 60 ஆல் பாகித்து வந்த கலைகளைப் பதக வாக்கியங்களில் சேர்த்து வருவது சூரியன் ஸ்புட பதகமாகும். இப்படி வந்த ஸ்புட பதக கலைகளை, முன்வந்திருக்கிற மந்த கேந்திரம் மேஷாதி 6 இராசிக் குள்ளிருப்பின் சுதேச மத்தியான்ன திருக்துல்லிய சூரியனில் சேர்க்க வேண்டும். துலாதி 6 இராசிக்குள்ளிருப்பின் சுதேச மத்தியான்ன திருக்துல்லிய சூரியனில் கழிக்க வேண்டும். (இது மேஷாதி தனம், துலாதிரிணமாம்.) முன் வந்துள்ள சூரியன் ஸ்புட பதக கலை விகலைகளை 6 ஆல் வகுத்து வந்த சவு விகலை. இதற்கு ஷடாம்ச பலமென்று பெயர். இந்த விகலையைத் தன ரிண நியதிப்படி முன் ஸ்புட பதக கலாதிகளைக் கொண்டு சமஸ்காரம் செய்து வைத்திருக்கும் ஸ்புட பதக சமஸ்கார சூரியனில் சமஸ்கரிக்க வருவது சுதேச மத்தியான்ன சூரியஸ்புடமாம்.

**உதாரணம் சூரியனுக்கு:**—இலங்கா மத்தியான்ன ரவியுச்சம் இராசி 2. 17. 17. 31. (16ஆம் பக்கம் பார்க்க) இதில், ஜனனகால சுதேச மத்தியான்ன திருக்துல்லிய சூரியன் இராசி 1. 27. 25. 53 ஐக் கழித்து வந்த இராசி

0. 19. 51. 38 இது சூரியன்மந்த கேந்திரமாம். (இது மேஷாதி 6 இராசிக்குள்ளிருப்பதினால்) இது மேஷாதி தனமாம். (இது மூன்று இராசிக்குள்ளிருப்பதினால்) இதுவே புஜா. இதில் இராசியில்லை. பாகை 19 இருப்பதினால் சூரியன் மந்தபதகம் வாக்கியம் 19-க்குக்கலை 43. 12 இதன் அடுத்த வாக்கியம் 20 க்குக் கலை 45. 22 இதன் அந்தரம் கலை 2. 10. சுபாங்க சேஷகலை 51-38 அந்தரம் 2. 10 இதை சதுஷ்பிரதி நியாயப்படி குணிக்க வேண்டும்.

சதுஷ்பிரதி நியாயமாவது:—

| | |
|---|---|
| 51. 38. 51. 38 | |
| 2. | 10 |
| 102. 76. 510. 380. | |

இதில் நான்காவது தொகை 380 ஐ 60 ஆல் வகுக்க வந்த ஈவு 6 சேடம் 20. இந்த ஈவு 6 ஐ 3 ஆவது அயிட்டமான 510 இல் சேர்க்க வந்தது 516, இந்த 516 ஐ 2 ஆவது அயிட்டமான 76 உடன் சேர்க்க வந்தது 592. இதை 60 ஆல் வகுக்க வந்த ஈவு விகலை 9. உபவிகலை 52. இதனுடன் முதல் அயிட்டம் 102 ஐச் சேர்க்க வந்தது விகலை 111. 52 அர்த்தாதிகப்படி விகலை 112. இதைக் கலை செய்ய கலை 1. விகலை 52 இந்தக்கலை விகலைகளைச் சூரியன் மந்தபதகம் 19 க்கு வந்திருக்கிற கலை 43 விகலை 12 உடன் சேர்க்க வந்தது கலை 45. விகலை 4 இதற்குச் சூரியன் ஸ்புட பதக பலமென்று பெயர். இதைச் (முன் வந்திருப்பது சூரிய மந்த கேந்திரம் மேஷாதி தனமானதினால்) சுதேச மத்தியான்ன திருக்துல்லிய சூரியன் இராசி 1. 27. 25. 53 ல் (ஸ்புட பதகபலம் கலை 45. விகலை 4. ஐச்) சேர்க்க வந்தது இராசி 1. 28. 10. 57 இது ஸ்புடபதக சமஸ்கார சூரியஸ்புடமாம்.

அர்க்கபாத பல சந்திர கணனம்.

இந்த ஸ்புட பதக கலை விகலைகளை 27 ஆல் வகுத்து வந்தகலை விகலைகளைச் சுதேச மத்தியான்ன மத்தியம சந்திரனில் (ரவிமந்தகேந்திரம் தனமானால் கூட்டவும், ரிணமானால் கழிக்கவும்) சமஸ்கரிக்க வருவது அர்க்கபாகு பல சந்திரனும், இது சந்திரஸ்புடம் செய்யுங் காலத்தில் அவசியமாம்.

முன் வந்திருக்கும் சூரிய ஸ்புட பதகபல கலை 45. 4 இதை 6 ஆல் வகுக்க வந்த ஈவு $7\frac{1}{2}$ இதுவிகலை இதற்கு ஷடாம்ச பலம் என்று பெயர். இந்த விகலை $7\frac{1}{2}$ யும் மந்தகேந்திரம் மேஷாதி தனமானதினால் ஸ்புட பதக சமஸ்கார சூரியஸ்புடத்தில் சேர்க்க வந்தது (1. 28. 10. 57+0. 0. 0. 7=) இராசி. 1. 28. 11. 4 இது ஜனன தேசமான பறங்கிப்பேட்டைக்கு ஜனன்கால மத்தியான்ன சுத்த சூரியஸ்புடமாம்.

சூரிய கதிஸ்புட கணனம்:—சூரியனுக்கு ஏற்பட்ட பதக சங்கியையின் பேரில் ஸ்புடகதிகளை சித்தம்செய்து பதகமாக எழுதப் பெற்றிருக்

கின்றது. பதக சங்கியைகளைக் கொண்டு அந்தந்த ஸ்புடகதிகளைப் பார்த்து கணித்துக் கொள்ளவும். சூரிய ஸ்புடகதிகளைப் பிரதி பதத்திற்கும் தனித்தனி யாக கணித்து எழுதப் பெற்றிருக்கின்றது. மந்தகேந்திரம் கடகாதியானல் அந்தப் பலத்தை மத்தியம கதியில் சேர்க்கவேண்டும். மந்தகேந்திரம் மகராதி யானல் மத்தியமகதியில் அந்தப் பலத்தைக் கழிக்கவேண்டும். இப்படிச் செய்துவருவது சூரிய கதிஸ்புடமாம். (மந்தகேந்திரம் கடகாதி 6 இராசி தனமென்றும், மகராதி 6 இராசி ரிணமென்றும் அறிக.)

உதாரணம் சூரியனுக்கு:—சூரியன் மந்தபல பதகம் 19-க்குச் சூரிய கதிபல சாரணியில் ஏற்பட்ட கலை 2 விகலை 8. இந்தக் கலை 2·8 ஐயும்சூரியன் தினகதியாகிய கலை 59-8-ல் கழித்துவிடவேண்டும். (ஏனென்றல் முன்வந்த சூரியன் மந்த கேந்திரமானது இராசி 0-19-51-38 வந்திருக்கின்றமையால் இது மகராதி ரிண மெனப்பட்டது, ஆனதினல் சூரியனின் கதிபலம் கலை. 2·8 ஐ சூரியகதி கலை 59-8-ல் கழிக்கவேண்டும்) இப்படிக் கழித்து வந்த சேடம் கலை 57-0. இதுவே சூரியனுக்கு கதிஸ்புடமாம்.

## சூரிய கதி பல சாரணி.

| எண் | கதி பலம் | | எண் | கதி பலம் | | எண் | கதி பலம் | | எண் | கதி பலம் | | எண் | கதி பலம் | | எண் | கதி பலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | க | வி | | க | வி | | க | வி | | க | வி | | க | வி | | க | வி |
| 1 | 2 | 18 | 16 | 2 | 10 | 31 | 1 | 54 | 46 | 1 | 31 | 61 | 1 | 3 | 76 | 0 | 30 |
| 2 | 2 | 18 | 17 | 2 | 10 | 32 | 1 | 53 | 47 | 1 | 30 | 62 | 1 | 1 | 77 | 0 | 29 |
| 3 | 2 | 18 | 18 | 2 | 9 | 33 | 1 | 52 | 48 | 1 | 29 | 63 | 0 | 59 | 78 | 0 | 27 |
| 4 | 2 | 17 | 19 | 2 | 8 | 34 | 1 | 50 | 49 | 1 | 27 | 64 | 0 | 57 | 79 | 0 | 24 |
| 5 | 2 | 17 | 20 | 2 | 7 | 35 | 1 | 49 | 50 | 1 | 25 | 65 | 0 | 54 | 80 | 0 | 22 |
| 6 | 2 | 16 | 21 | 2 | 6 | 36 | 1 | 47 | 51 | 1 | 23 | 66 | 0 | 53 | 81 | 0 | 20 |
| 7 | 2 | 15 | 22 | 2 | 5 | 37 | 1 | 46 | 52 | 1 | 21 | 67 | 0 | 50 | 82 | 0 | 17 |
| 8 | 2 | 15 | 23 | 2 | 3 | 38 | 1 | 44 | 53 | 1 | 19 | 68 | 0 | 48 | 83 | 0 | 15 |
| 9 | 2 | 15 | 24 | 2 | 3 | 39 | 1 | 43 | 54 | 1 | 17 | 69 | 0 | 46 | 84 | 0 | 13 |
| 10 | 2 | 15 | 25 | 2 | 2 | 40 | 1 | 42 | 55 | 1 | 16 | 70 | 0 | 43 | 85 | 0 | 10 |
| 11 | 2 | 14 | 26 | 2 | 1 | 41 | 1 | 40 | 56 | 1 | 13 | 71 | 0 | 41 | 86 | 0 | 8 |
| 12 | 2 | 13 | 27 | 1 | 59 | 42 | 1 | 38 | 57 | 1 | 10 | 72 | 0 | 41 | 87 | 0 | 6 |
| 13 | 2 | 11 | 28 | 1 | 58 | 43 | 1 | 36 | 58 | 1 | 10 | 73 | 0 | 36 | 88 | 0 | 4 |
| 14 | 2 | 11 | 29 | 1 | 57 | 44 | 1 | 34 | 59 | 1 | 7 | 74 | 0 | 35 | 89 | 0 | 1 |
| 15 | 2 | 11 | 30 | 1 | 56 | 45 | 1 | 33 | 60 | 1 | 5 | 75 | 0 | 32 | 90 | 0 | 0 |

**சந்திரஸ்புட கணனம்:**—சுதேச மத்தியான்ன திருக்துல் லிய சமஸ்கார சந்திரோச்சத்தில் † அர்க்கபாஹு பல சமஸ்கார சந்திரனைக் கழிக்கவருவது சந்திரமந்த கேந்திரமாம். அர்க்கபாகு பல சமஸ்கார கணனம் முன்னமே கூறப் பெற்றிருக்கின்றது. ஆயினும் மறுபடியும் கூறப்படுகிறது. சூரிய கணிதத்தில் வந்த ஸ்புட பதகத்தின் பலத்தை 27 ஆல் வகுத்து கலை விகலைகளாக்கிக்கொண்டு சுதேச மத்தியான்ன திருக்துல்லிய சந்திரனில் சமஸ்கரிக்க வருவது அர்க்கபாஹு பல சமஸ்கார சந்திரனும். (சமஸ்காரமென்பது சூரியன் மந்தகேந்திரம் மேஷாதி தனமானுல் 27 ஆல் வகுத்து வந்த பலத்தைத் திருக் துல்லிய சந்திரனில் சேர்க்க வேண்டும். துலாதி ரிணமானுல் 27 ஆல் வகுத்துவந்த பலத்தைத் திருக்துல்லிய சந்திரனில் கழிக்கவேண்டும்.) சந்திர மந்தகேந்திரமானது மேஷாதி 6 இராசிக்குள்ளிருப்பின் தனமென்றும், துலாதி 6 இராசிக்குள்ளிருப்பின் ரிணமென்றும் அறிக. இந்தச் சந்திர மந்த கேந்திரத்தைப் புஜைசெய்து சூரிய கணிதத்தில் சொல்லியபடி வாக்கியம் எடுத்து அந்தரம் அறிந்து புஜாசேஷ கலாதிகளை அந்தரத்தால் குணித்து சதுஷ்பிரதி நியாயமாக 60 ஆல் பாகித்து வந்த கலைகளைப் பதக வாக்கியங்களில் சேர்க்க வருவது ஸ்புட பதசங்களாகும். இவ்விதம் கணிக்கப்பெற்று வந்தவைகளைச் சந்திரமந்த கேந்திரம் மேஷாதி 6 இராசிக்குள்ளிருப்பின் அர்க்கபாகு பல சமஸ்கார சந்திரனில் சேர்த்தும், துலாதி 6 இராசிக்குள்ளிருப்பின் ஸ்புடபதக பலத்தைஅர்க்கபாகு பல சமஸ்கார சந்திரனில் கழித்தும் வருவது சுதேச மத்தியான்ன சுத்த சந்திரஸ்புடமாம்.

**உதாரணம் சந்திரனுக்கு:**—சூரிய கணிதத்தில் வந்த ஸ்புட பதக பலம் கலை 45·4 இதை 27 ஆல் வகுத்தவந்த கலை 1 விகலை 40 இதை முன் வந்த ரவிமந்த கேந்திரம் தனமானதினுல் சுதேச மத்தியான்ன திருக்துல்லிய சந்திரன் இராசி 0·5-51-58-ல் சேர்க்க வந்தது இராசி0-5-53-38 இது அர்க்கபாகுபல சமஸ்கார சந்திரஸ்புடமாம்.

சுதேச மத்தியான்ன திருக்துல்லிய சந்திரோச்சம் இராசி 8-6-40-38 இதில் அர்க்கபாகு பல சமஸ்கார சந்திரன் இராசி 0-5-53-38 ஐக் கழிக்க வந்த இராசி 8-0-47-0 இது சந்திரன் மந்தகேந்திரமாம். இது துலாதி ரிணம். இதில் புஜை 6 இராசியைக் கழிக்க வந்தது இராசி 2-0-47·0 இதில் இராசிக்கு மட்டும் (2 ராசிக்கு) வாக்கியம் 60. வாக்கியம் 60-க்குச் சந்திரன் மந்த பதககலை 262, விகலை 31 வாக்கியம் 61-க்குக் கலை 265·6. இதன் அந்தரம் கலை 2·35 சுபாங்கசேடம் கலை 47·0 இதைச் சதுஷ்பிரதி நியாயப்படி கணிக்க. சதுஷ்பிரதி நியாயமாவது:—

---

† 26 ஆம் பக்கம் பார்க்க

| | |
|---|---|
| 47. 0. | 47. 0. |
| 2. | 35 |
| 94. 0 | 1645. ). |

இதில் நான்காவது அம்சத் தொகையை 60 ஆல் வகுக்கமுடியாததினால் விட்டு விடுக. 3-வது அம்சத்தை 60 ஆல் வகுக்க வந்த ஈவு 27 சேடம் 25 இந்த 27 ஐ முதல் அம்சத் தொகை 94 உடன் சேர்க்க வந்தது விகலை 121. இந்த விகலையை 60ஆல் வகுக்க வந்த ஈவு கலை 2. வி கலை 1. சந்திரமந்த பதகம் 60 ஆவது வாக்கியம் கலை 262. 31-ல் முன்வந்த கலை 2. 1. ஐச் சேர்க்க கலை 264 விகலை 32 இதைப் பாகையாக்க பாகை 4. கலை 24 விகலை 32 இதற்குச் சந்திரன் ஸ்புட பதக பலமென்று பெரியோர் கூறுவர். முன் வந்திருக்கின்ற சந்திர மந்தகேந்திரம் துலாதி ரிணமானதினால் அர்க்கபாகு பல சமஸ்கார சந்திரன் இராசி 0. 5. 53. 38 ல் சந்திரன் ஸ்புடபதக பலம் பாகை 4. 24, 32 ஐக் கழிக்க வந்தது இராசி 0. 1. 29. 6 இது சுதேச மத்தியான்ன சுத்த சந்திரஸ்புடமாம்.

**சந்திரகதிஸ்புடம்:**—சந்திரனுக்கு ஏற்பட்ட பதக சங்கியையின் பேரில் ஸ்புட கதிகளைச் சித்தம் செய்து பதகமாக எழுதப்பெற்றிருக்கின்றது. பதக சங்கியைகளைக் கொண்டு அந்தந்த ஸ்புடகதிகளைப் பார்த்து கணித்துக் கொள்ளவும். சந்திரஸ்புட கதிகளைப் பிரதி பதத்திற்கும் தனித்தனியாகக் கணித்து எழுதப் பெற்றிருக்கின்றது. மந்தகேந்திரம் கடகாதியானால் பலத்தை மத்தியம கதியில் சேர்க்க. மந்தகேந்திரம் மகராதியானால் மத்தியம கதியில் பலத்தைக் கழிக்க. இப்படிச் செய்து வருவது சந்திரகதிஸ்புடமாம். (மந்தகேந்திரம் கடகாதி தனமென்றும் மகராதி ரிணமென்றும் அறிக.)

**உதாரணம் சந்திரனுக்கு:**—சந்திரமந்த கேந்திரம் கதிக்குக் கடகாதி தனம், சந்திர கதிபல சாரணியில் வாக்கியம் 60-க்குக் கலை 33. விகலை 46. இந்தக் கலை விகலைகளைச் சந்திரன் தின கதியாகிய கலை 790 விகலை 35-ல் (33. 46+790.35= )சேர்க்க வந்தது கலை 824 விகலை 21 இதுவே சந்திரனுக்குக் கதிஸ்புடமாம்.

# சந்திர மந்த பதகம்.

| எண் | மந்த பதகம் | | அந்தரம் | | எண் | மந்த பதகம் | | அந்தரம் | | எண் | மந்த பதகம் | | அந்தரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | க | வி | க | வி | | க | வி | க | வி | | க | வி | க | வி |
| 1 | 5 | 20 | 5 | 20 | 31 | 156 | 55 | 4 | 30 | 61 | 265 | 6 | 2 | 30 |
| 2 | 10 | 40 | 5 | 19 | 32 | 161 | 5 | 4 | 27 | 62 | 267 | 36 | 2 | 26 |
| 3 | 15 | 59 | 5 | 19 | 33 | 165 | 32 | 4 | 24 | 63 | 270 | 2 | 2 | 21 |
| 4 | 21 | 18 | 5 | 19 | 34 | 169 | 56 | 4 | 21 | 64 | 272 | 23 | 2 | 15 |
| 5 | 26 | 37 | 5 | 18 | 35 | 174 | 17 | 4 | 18 | 65 | 274 | 38 | 2 | 11 |
| 6 | 31 | 55 | 5 | 17 | 36 | 178 | 35 | 4 | 14 | 66 | 276 | 49 | 2 | 6 |
| 7 | 37 | 12 | 5 | 16 | 37 | 182 | 49 | 4 | 11 | 67 | 278 | 55 | 2 | 0 |
| 8 | 42 | 28 | 5 | 15 | 38 | 187 | 0 | 4 | 8 | 68 | 280 | 55 | 1 | 55 |
| 9 | 47 | 43 | 5 | 14 | 39 | 191 | 8 | 4 | 4 | 69 | 282 | 50 | 1 | 50 |
| 10 | 52 | 57 | 5 | 14 | 40 | 195 | 12 | 4 | 1 | 70 | 284 | 40 | 1 | 45 |
| 11 | 58 | 11 | 5 | 13 | 41 | 199 | 13 | 3 | 57 | 71 | 286 | 25 | 1 | 40 |
| 12 | 63 | 24 | 5 | 11 | 42 | 203 | 10 | 3 | 54 | 72 | 288 | 5 | 1 | 35 |
| 13 | 68 | 35 | 5 | 10 | 43 | 207 | 4 | 3 | 50 | 73 | 289 | 40 | 1 | 29 |
| 14 | 73 | 45 | 5 | 8 | 44 | 210 | 54 | 3 | 46 | 74 | 291 | 9 | 1 | 24 |
| 15 | 78 | 53 | 5 | 7 | 45 | 214 | 40 | 3 | 40 | 75 | 292 | 33 | 1 | 19 |
| 16 | 84 | 0 | 5 | 5 | 46 | 218 | 20 | 3 | 38 | 76 | 293 | 52 | 1 | 13 |
| 17 | 89 | 5 | 5 | 3 | 47 | 221 | 58 | 3 | 32 | 77 | 295 | 5 | 1 | 8 |
| 18 | 94 | 8 | 5 | 1 | 48 | 225 | 30 | 3 | 29 | 78 | 296 | 13 | 1 | 3 |
| 19 | 99 | 9 | 5 | 0 | 49 | 228 | 59 | 3 | 25 | 79 | 297 | 16 | 0 | 57 |
| 20 | 104 | 9 | 4 | 58 | 50 | 232 | 24 | 3 | 21 | 80 | 298 | 13 | 0 | 52 |
| 21 | 109 | 7 | 4 | 56 | 51 | 235 | 45 | 3 | 16 | 81 | 299 | 5 | 0 | 46 |
| 22 | 114 | 3 | 4 | 53 | 52 | 239 | 1 | 3 | 12 | 82 | 299 | 51 | 0 | 41 |
| 23 | 118 | 56 | 4 | 51 | 53 | 242 | 13 | 3 | 8 | 83 | 300 | 32 | 0 | 36 |
| 24 | 123 | 47 | 4 | 49 | 54 | 245 | 21 | 3 | 3 | 84 | 301 | 8 | 0 | 31 |
| 25 | 128 | 36 | 4 | 47 | 55 | 248 | 24 | 2 | 59 | 85 | 301 | 39 | 0 | 25 |
| 26 | 133 | 23 | 4 | 44 | 56 | 251 | 23 | 2 | 54 | 86 | 302 | 4 | 0 | 20 |
| 27 | 138 | 7 | 4 | 42 | 57 | 254 | 17 | 2 | 49 | 87 | 302 | 24 | 0 | 14 |
| 28 | 142 | 49 | 4 | 39 | 58 | 257 | 6 | 2 | 45 | 88 | 302 | 38 | 0 | 8 |
| 29 | 147 | 28 | 4 | 35 | 59 | 259 | 51 | 2 | 40 | 89 | 302 | 46 | 0 | 2 |
| 30 | 152 | 3 | 4 | 32 | 60 | 262 | 31 | 2 | 35 | 90 | 302 | 48 | 0 | 0 |

| சந்திர கதிபல சாரணி. | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எண் | கதி பலம் | | எண் | கதி பலம் | | எண் | கதி பலம் | | எண் | கதி பலம் | | எண் | கதி பலம் | | எண் | கதி பலம் | |
| | க | வி | | க | வி | | க | வி | | க | வி | | க | வி | | க | வி |
| 1 | 69 | 41 | 16 | 66 | 25 | 31 | 58 | 48 | 46 | 47 | 28 | 61 | 32 | 40 | 76 | 15 | 54 |
| 2 | 69 | 28 | 17 | 65 | 59 | 32 | 58 | 9 | 47 | 46 | 10 | 62 | 31 | 48 | 77 | 14 | 49 |
| 3 | 69 | 28 | 18 | 65 | 33 | 33 | 57 | 30 | 48 | 45 | 30 | 63 | 30 | 42 | 78 | 13 | 43 |
| 4 | 69 | 28 | 19 | 65 | 20 | 34 | 56 | 50 | 49 | 44 | 38 | 64 | 29 | 24 | 79 | 12 | 25 |
| 5 | 69 | 15 | 20 | 64 | 54 | 35 | 56 | 11 | 50 | 43 | 46 | 65 | 28 | 32 | 80 | 11 | 19 |
| 6 | 69 | 2 | 21 | 64 | 28 | 36 | 55 | 19 | 51 | 42 | 41 | 66 | 27 | 27 | 81 | 10 | 1 |
| 7 | 68 | 49 | 22 | 63 | 49 | 37 | 54 | 40 | 52 | 41 | 49 | 67 | 26 | 8 | 82 | 8 | 56 |
| 8 | 68 | 36 | 23 | 63 | 23 | 38 | 54 | 0 | 53 | 40 | 56 | 68 | 25 | 3 | 83 | 7 | 50 |
| 9 | 68 | 23 | 24 | 62 | 56 | 39 | 53 | 8 | 54 | 39 | 51 | 69 | 23 | 57 | 84 | 6 | 45 |
| 10 | 68 | 23 | 25 | 62 | 30 | 40 | 52 | 29 | 55 | 38 | 59 | 70 | 22 | 52 | 85 | 5 | 27 |
| 11 | 68 | 10 | 26 | 61 | 51 | 41 | 51 | 37 | 56 | 37 | 54 | 71 | 21 | 47 | 86 | 4 | 21 |
| 12 | 67 | 44 | 27 | 61 | 25 | 42 | 50 | 58 | 57 | 36 | 48 | 72 | 20 | 42 | 87 | 3 | 3 |
| 13 | 67 | 31 | 28 | 60 | 46 | 43 | 50 | 5 | 58 | 35 | 56 | 73 | 19 | 23 | 88 | 1 | 45 |
| 14 | 67 | 5 | 29 | 59 | 54 | 44 | 49 | 13 | 59 | 34 | 51 | 74 | 18 | 18 | 89 | 0 | 26 |
| 15 | 66 | 52 | 30 | 59 | 14 | 45 | 47 | 55 | 60 | 33 | 46 | 75 | 17 | 12 | 90 | 0 | 0 |

## குஜாதி பஞ்ச கிரகங்களின் ஸ்புடவிவரம்.

**குஜாதியர்களுக்குப் புஜா விஷயம்:**—குஜாதியர்களுக்குக் கேந்திரம் 6 இராசிகளுக்குக் குறைந்திருப்பின் அதுவே புஜை. 6 இராசிகளுக்கு அதிகப்பட்டிருப்பின் 12 இராசிகளில் கழிக்கப் புஜை (அஃதாவது 12 இராசிகளில் கழித்து விடவேண்டும்).

இப்படிப் புஜைசெய்து வந்த இராசியாதிகளைக் கலைசெய்து 225 ஆல் அரித்து (வகுத்து) வந்த லப்தம் பதக சங்கியை யாகும். புஜா சேஷராசியில் உள்ள கலை விகலைகளைப் பதகாந்தரத்தால் குணித்து 225ஆல் வகுத்துவந்த ஈவு தனாந்தரத்தினால் வந்ததாயின் பதகலிப்தையில் சேர்த்தும், ரிணாந்தரத்தினால் வந்ததாயின் பதகலிப்தையில் கழித்தும் வந்தது ஸ்புடபதக கலைகளாகும். இந்த ஸ்புட பதக கலைகளை இராசி பாகை கலைகளாக்கி இந்த இராசி பாகை கலைகளை இதன் கீழே சொல்லப்படும் மேஷாதி கேந்திரமாகும்போது கிரகங்களில் (அவரவர்களுக்கு) தனகர்மம் (சேர்க்க) செய்ய வேண்டும். அந்தக் கேந்திரம் துலாதியாகும்போது ரிணகர்மம் (கழிக்க) செய்ய வேண்டும். அஃது எப்படியென்றால் பிரதம சீக்கிர கர்மத்தில் வந்த பலத்தை அர்த்தித்து (பாதிசெய்து) மத்தியம கிரகத்தில் சமஸ்கரிக்க வேண்டும். துதீய மந்த கர்மத்

தில் வந்த பலத்தை முழுவதும் மத்தியம கிரகத்தில் தன ரிண நியதிப்படி சமஸ்கரிக்கவேண்டும். மூன்றுவது கிரியையான அந்திய சீக்கிர கர்மத்தில் வந்த பலத்தை முழுவதும் மந்த ஸ்புட கிரகங்களில் தன ரிண நியதிப்படி சமஸ்கரிக்கவேண்டும். இப்படிச் செய்யின் குஜாதி பஞ்ச கிரகங்களுக்குச் சுத்த ஸ்புடம் வரும்.

## மறுபடியும் விளக்கமாகச் சொல்லப்படுகிறது.

மத்தியம சூரியனவர், அங்காரகன்-குரு-சனி இம்மூன்று கிரகங்களுக்குச் சீக்கிரோச்சனவார், இதைச் செவ்வையாய்க் கவனத்தில் வைக்க வேண்டும்.

அங்காரக-குரு-சனி ஸ்புட விவரம்:—அங்காரகன்-குரு-சனி இவர்களுக்குச் சீக்கிரோச்சமான திருக் சுதேச மத்தியான்ன சூரிய மத்தியமத்தில் அங்காரகன்-குரு-சனி இவர்களின் மத்தியமங்களைக் கழித்துவந்த சேடம் அங்காரகன்-குரு-சனி இந்தக் கிரகங்களுக்குப் பிரதம சீக்கிர கேந்திரமாகும்.

(1) இந்தப் பிரதம சீக்கிர கேந்திரத்தைப் புஜைசெய்து பதகத்தில் பலம் கண்டு பிடித்துவந்த பதக பலத்தைப் பாதிசெய்து (ஜியாபலம்) அவரவர்களின் (அங்காரக-குரு-சனி) மத்தியம கிரகங்களில் (திருக் சுதேச மத்தியான்ன மத்தியம) தன ரிண நியதிப்படி சமஸ்கரிக்க வருவது அவரவர்களின் பிரதம சீக்கிர கிரகஸ்புடங்களாகும்.

(2) இந்தப் பிரதம சீக்கிர கிரகங்களை அவரவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கும் மந்தோச்சங்களில் வாங்க (கழிக்க) இரண்டாவது (துதீய) கர்மமான மந்த கேந்திரமாகும். இதைப் புஜை செய்து பதகத்தில் பலம் கண்டு பிடித்து வந்த பதகாதி பலங்கள் முழுவதும் அவரவர்களின் திருக் சுதேச மத்தியான்ன மத்தியம கிரகங்களில் தன ரிண நியதிப்படி சமஸ்கரிக்க வருவது துதீய (கர்மமான) மந்த கிரகஸ்புடங்களாகும். இதனையே மந்தஸ்புடம் பெரியார்.

(3) இந்தத் துதீய மந்த கிரகங்களான கிரகங்களை அங்காரகன்-குரு-சனி இந்த மூன்று கிரகங்களுக்கும் சீக்கிரோச்ச கிரகமான திருக் சுதேச மத்தியான்ன மத்தியம சூரியனில்கழிக்கவருவது மூன்றுவது (திருதீய) கர்மமான அந்திய சீக்கிர கேந்திரமாகும். இந்தக் கேந்திரத்தைப் புஜை செய்து பதகபலங் கண்டுபிடித்து வந்தபதகாதி பலங்கள் முழுவதும் தன ரிண நியதிப்படி துதீய மந்த கிரகங்களில் சமஸ்கரிக்க வருவது அங்காரக-குரு-சனி இவர்களுக்கு மத்தியான்ன சுத்தஸ்புடமாம்.

குறிப்பு.—அங்காரகனுக்குத் திருக்பல சமஸ்காரமில்லை. ஆனதினால் சுதேச மத்தியான்ன அங்காரக மத்தியமத்தையே, திருக் சுதேச மத்தியான்ன அங்காரகனாகக் கொள்க.

குரு-சனி இவ்விரண்டு கிரகங்களின் ஸ்புடங்களைச் செய்யும்போது இவ்விருவர்களுக்குத்திருக்பல சமஸ்காரம் செய்துவைத்திருக்கின்ற திருக்துல்லிய குரு-சனி இவர்களின் மத்தியான்ன மத்தியமங்களைக் கொண்டு ஸ்புட கிரியைகள் செய்து கொள்ளவேண்டும்.

## புத-சுக்கிர ஸ்புட விவரம்.

(1) புத சுக்கிரர்களின் சீக்கிரோச்சத்தில் (இவ்விருவர்களுக்கும்) மத்தியம கிரகமான சூரியமத்தியமத்தைக் (சுதேச மத்தியான்ன மத்தியமம்) கழிக்க வருவது (அவரவர்களின்) பிரதம சீக்கிர கேந்திரமாகும். இதைப் புஜை செய்து பதகத்தில் பலங் கண்டுபிடித்து வந்த பதக பலத்தைப் பாதி செய்து இவர்களின் மத்தியமமான சூரிய மத்தியமத்தில் தன ரிண நியதிப்படி சமஸ்கரிக்க வருவது (அவரவர்களின்) பிரதம சீக்கிர கிரக ஸ்புடமாகும்.

(2) இந்தச் சீக்கிர கிரகத்தை இவர்களின் மந்தோச்சங்களில் கழிக்கத் துதீய கர்மமான மந்த கேந்திரமாகும். இதைப் புஜைசெய்து பதகத்தில் பலங்கண்டு பிடித்து வந்த பதகாதி பலங்கள் முழுவதும் அவரவர்களின் (அஃதாவது புத-சுக்கிரர்க்கு) மத்தியம கிரகமான சூரிய மத்தியமத்தில் தன ரிண நியதிப்படி சமஸ்கரிக்க வருவது துதீய கர்மமான மந்த கிரகங்களாகும். இதனையே மந்தஸ்புடம் என்ப.

(3) இந்தத் துதீய மந்த கிரகங்களின் ஸ்புடத்தை இந்தப் புத-சுக்கிரர்களின் சீக்கிரோச்சத்தில் கழிக்க மூன்றாவது கர்மமான அந்திய சீக்கிரகேந்திரமாகும். இதைப் புஜைசெய்து பதக சமஸ்காரம் செய்துவந்த பலம் முழுவதும் தன ரிண நியதிப்படி அவரவர்களின் துதீய மந்த கிரகங்களில் சமஸ்கரிக்க வருவது புத சுக்கிரர்களுக்குச் சுத்த ஸ்புடமாகும்.

## இராகு-கேது ஸ்புடம்.

திருக்துல்லிய சமஸ்கார பாதன் என்னும் இராகுவை 12 இராசிகளில் கழிக்க வருவது இராகுவின் சுத்த ஸ்புடமாம்.

இந்த இராகுவின் சுத்த ஸ்புடத்துடன் 6 இராசிகளைச் சேர்க்க கேது சுத்த ஸ்புடமாம். இதுவே இராகு கேதுக்களுக்குச் சுத்த ஸ்புடம் ஆகும்.

---

## குஜாதி பஞ்ச கிரகங்களில் உதாரண அங்காரக ஸ்புடங் காண்க.

பிரதம கிரியை:—அங்காரகனுக்குச் சீக்கிரோச்சமான திருக் சுதேச மத்தியான்ன மத்தியம சூரியன் இராசி 1.27.25.53. இதில் திருக் சுதேச மத்தியான்ன மத்தியம அங்காரகன் இராசி 7.13.19.22 ஐக் கழிக்க வந்தது இராசி 6.14.6.31 இதுதான் அங்காரகனுக்குப் பிரதம சீக்கிர கேந்திரமாகும். இது துலாதிரிணம், இதைப் புஜை செய்யவேண்டும் இது 6 இராசிக்கு மேலிருப்பதினால் 12 இராசியில் கழிக்க வந்தது இராசி 5.15.53.29 இதுவே புஜா. இதற்குப் பதகத்தில் பலங்கண்டு பிடிக்கவேண்டும். எப்படியென்றால் இதைக் கலைகள் செய்ய வந்தது 9953·29 இதை 225 ஆல் வகுக்கவந்த ஈவு 44 சேடம் 53.29 இதற்குப் புஜா சேடம் என்ப. ஈவு (லப்தம்) 44-க்குக் (அங்காரகன் சீக்கிர கலா பதக சாரணியில்) கலை 1465·0 45-ஆம் வாக்கியத்திற்குக் (பதகசாரணியில்) கலை 1163.0 இதன் அந்தரம் கலை 302 இது ரிணாந்தரம் புஜாசேடம் 53·29 இதை ரிணாந்தரத்தினால் (302 ஆல்) பெருக்கக் கலை 16151.58 இதை 225 ஆல் வகுக்க வந்த ஈவு 71 இதுகலை சேடம் 176.58 இதை 60ஆல்பெருக்கி 58ஐச் சேர்க்க 10618. இதை 225 ஆல் வகுக்க ஈவு 47 இதுவிகலை சேடம் 43 இதனைத் தள்ளிவிடவும் அங்காரகன் சீக்கிர கலா பதக சாரணியில் வாக்கியம் 44க்குக் கலை 1465.0 இதில் புஜா சேடத்தில் வந்த கலாதிகள்71·47 ஐக்(ரிணமானதினால்) கழிக்க வந்த சேடம் கலை 1393.13 இதுதான் அங்காரகனுக்கு ஸ்புட பதகமாகும்.

இது பிரதம கர்ம மானதினால் இந்தப் பதக பலங்களை அர்த்தித்து (பாதி செய்து) வந்தது 696 கலை 36½ விகலை இதைப் பாகை செய்ய வந்தது பாகை 11.36.36 இந்தப் 11 பாகை, 36 கலை, 36 விகலை யாகிய ஸ்புட பதகபலத்தைச் சுதேச மத்தியான்ன திருக் துல்லிய அங்காரகன் இராசி 7.13.19.22 ல் பிரதம சீக்கிர கேந்திரம் துலாதி ரிணமானதினால் ரிணகர்மம் செய்ய (கழிக்க) வந்தது இராசி 7.1.42.46 இது பிரதம சீக்கிர அங்காரக ஸ்புடம் ஆம்.

துதீய கிரியை:—இந்தப் பிரதம சீக்கிர அங்காரகனை ஐந்திரியில் சொல்லிய பிரகாரம் அங்காரகன் மந்தோச்சம் இராசி 4.10.3.0 இதில் பிரதம சீக்கிர அங்காரகன் இராசி 7.1.42.46 ஐ வாங்க வந்தது இராசி 9.8.20.14 இது அங்காரகனுக்குத்துதிய மந்த கேந்திரம் இது துலாதிரிணம், இது 6 இராசிக்கு மேலிருப்பதினால் இதை 12 இராசியில் கழித்த புஜா ராசியாதிகள் 2.21.39.46 இதைக் கலைகள் செய்ய 4899.46 இதை 225 ஆல் வகுத்த ஈவு 21 சேட கலை 174.46 இது புஜா சேடம் அங்காரகன் மந்த பல பதகம் வாக்கியம் 21க்கு கலை 663·0 வாக்கியம் 22க்குக் கலை 674.0 இதன் அந்தரம் 11. இது தனாந்தரம் புஜா சேடம் கலை 174.46 இதைத்தனாந்தரம் 11ஆல் பெருக்க வந்தது கலை

1122·26 இதை 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகள் 8.32 இந்தக் கலை விகலைகளுடன் முன் வந்துள்ள பதக வாக்கியம் 21-க்குக் கலை 663.0 இல் (தனுந்தரமானதினால்) சேர்க்க வந்தது கலை 671·32 இதைப் பாகை செய்ய பாகை 11 கலை 11 விகலை 32 இதுதான் அங்காரகனுக்கு ஸ்புட பதக பலம் (ஜாபலம்) இந்த ஜாபலத்தை (மந்த கேந்திரம்) முன் வந்துள்ள துதீய மந்த கேந்திரம் துலாதி ரிணமானதினால் சுதேச மத்தியான்ன திருக் துல்லிய அங்காரகன் இராசி 7.13 19.22ல் கழிக்க வந்தது இராசி 7.2.7.50 இது துதீய கர்ம மந்த ஸ்புட அங்காரகனும்.

**திருதீய கிரியை**:—இந்தத் துதீய கர்ம மந்த ஸ்புட அங்காரகனை அங்காரனுக்குச் சீக்கிரோச்ச கிரகமான சுதேச மத்தியான்ன திருக்துல்லிய மத்திபம சூரியன் இராசி 1.27.25.53 ல் துதீய கர்ம மந்தஸ்புட அங்காரகன் இராசி 7 2.7.50 ஐக் கழிக்க வந்தது இராசி 6.25·18.3 இது அங்காரகனுக்கு அந்திய சீக்கிர கேந்திரம். இது துலாதிரிணம் இது 6 இராசிக்கு மேலிருப்பதினால் இதை 12 இராசிகளில் கழித்த புஜா ராசியாதிகள் 5.4.41 57 இதைக் கலைகள் செய்ய வந்தது 9281.57 இதை 225 ஆல் வகுத்த ஈவு 41சேடகலை 56.57 இது புஜா சேடம். அங்காரகன் சீக்கிர பல பதக வாக்கியம் 41க்குக் கலை 2070.0 வாக்கியம் 42க்குக் கலை 1913.0 இதன் அந்தரம் 157 இது ரிணாந்தரம் புஜா சேடம் 56.57 இதனை ரிணாந்தரம் 157 ஆல் குணிக்க வந்தது 8941.9 இதை 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகள் 39.44 இந்தக்கலை விகலைகளை முன் வந்துள்ள 41 வது சீக்கிர பதக கலை 2070.0 ல் கழிக்க வந்தது 2030.16 இதை இராசிபாகைகலைகளாகவற்றிட இராசி 1.3.50.16 இது அங்காரகனுக்கு ஸ்புட பதகபலம் (ஜாபலம்) இந்த பலத்தை, முன்வந்துள்ள அந்திய சீக்கிர கேந்திரம் துலாதிரிணமானதினால் துதீய கர்ம மந்தஸ்புட அங்காரகன் இராசி 7.2.7.50 ல் கழிக்க வந்தது இராசி 5.28.17.34 இதுஅங்காரனுக்குச்சுதேச மத்தியான்ன சுத்த ஸ்புடமாம்.

**வக்கிரம் அறிய**:—கிரகம் வக்கிரமாயிருந்தால் அன்றைய வாக்கியம் மறுநாள் வாக்கியத்தில் எடுபடாது, அப்போது அன்றைய வாக்கியத்தில் மறுநாள் வாக்கியத்தை வாங்கின சேடத்திற்கு அந்தரம் என்று பெயர். இதன் அந்தரத்தால் சுபாங்க சேடத்தைப் பெருக்கி 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகளை அன்றைய வாக்கியத்தில் வாங்கிப் போட்டு சேட கலை விகலைகளை இராசி பாகம் செய்யவேண்டியதானாலும் முழுவதும் வைத்துக்கொள்ள வேண்டியதானாலும் பாகை இராசிகளாக்கி மேஷாதி தனமானால் சேர்க்கவும். துலாதி ரிணமானால் கழிக்கவும் வருவது அவரவர்கள் ஸ்புடமாம்.

அங்காரகனுக்கு வக்கிரம் ஏற்பட்டிருக்கின்றது.

## அங்காரகன் சீக்கிர கலா பதக சாரணி.

| எண் | கலை | த | அந்தரம் | எண் | கலை | த | அந்தரம் | எண் | கலை | த.ரி | அந்தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 89 | த | 89 | 17 | 1456 | த | 78 | 33 | 2398 | த | 13 |
| 2 | 178 | த | 88 | 18 | 1534 | த | 77 | 34 | 2413 | த | 5 |
| 3 | 266 | த | 88 | 19 | 1611 | த | 76 | 35 | 2418 | ரி | 9 |
| 4 | 354 | த | 88 | 20 | 1687 | த | 73 | 36 | 2409 | ரி | 23 |
| 5 | 442 | த | 88 | 21 | 1760 | த | 72 | 37 | 2386 | ரி | 42 |
| 6 | 530 | த | 87 | 22 | 1832 | த | 70 | 38 | 2344 | ரி | 64 |
| 7 | 617 | த | 87 | 23 | 1902 | த | 67 | 39 | 2280 | ரி | 89 |
| 8 | 704 | த | 86 | 24 | 1969 | த | 64 | 40 | 2191 | ரி | 121 |
| 9 | 790 | த | 86 | 25 | 2033 | த | 63 | 41 | 2070 | ரி | 157 |
| 10 | 876 | த | 85 | 26 | 2096 | த | 58 | 42 | 1913 | ரி | 200 |
| 11 | 961 | த | 85 | 27 | 2154 | த | 54 | 43 | 1713 | ரி | 248 |
| 12 | 1046 | த | 84 | 28 | 2208 | த | 49 | 44 | 1465 | ரி | 302 |
| 13 | 1130 | த | 83 | 29 | 2257 | த | 45 | 45 | 1163 | ரி | 351 |
| 14 | 1213 | த | 82 | 30 | 2302 | த | 40 | 46 | 812 | ரி | 394 |
| 15 | 1295 | த | 81 | 31 | 2342 | த | 32 | 47 | 418 | ரி | 418 |
| 16 | 1376 | த | 80 | 32 | 2374 | த | 24 | 48 | 0 | 0 | 0 |

## அங்காரகன் மந்த பதக கலா சாரணி.

| எண் | கலை | த | அந்தரம் | எண் | கலை | த.ரி | அந்தரம் | எண் | கலை | ரி | அந்தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 42 | த | 41 | 17 | 593 | த | 21 | 33 | 608 | ரி | 24 |
| 2 | 83 | த | 42 | 18 | 614 | த | 19 | 34 | 584 | ரி | 27 |
| 3 | 125 | த | 40 | 19 | 633 | த | 16 | 35 | 557 | ரி | 30 |
| 4 | 165 | த | 40 | 20 | 649 | த | 14 | 36 | 527 | ரி | 32 |
| 5 | 205 | த | 39 | 21 | 663 | த | 11 | 37 | 495 | ரி | 36 |
| 6 | 244 | த | 39 | 22 | 674 | த | 8 | 38 | 459 | ரி | 38 |
| 7 | 283 | த | 37 | 23 | 682 | த | 6 | 39 | 421 | ரி | 40 |
| 8 | 320 | த | 37 | 24 | 688 | த | 3 | 40 | 381 | ரி | 42 |
| 9 | 357 | த | 35 | 25 | 691 | த | 1 | 41 | 339 | ரி | 44 |
| 10 | 392 | த | 33 | 26 | 692 | ரி | 3 | 42 | 295 | ரி | 46 |
| 11 | 425 | த | 33 | 27 | 689 | ரி | 6 | 43 | 249 | ரி | 48 |
| 12 | 458 | த | 30 | 28 | 683 | ரி | 9 | 44 | 201 | ரி | 48 |
| 13 | 488 | த | 29 | 29 | 674 | ரி | 12 | 45 | 153 | ரி | 51 |
| 14 | 517 | த | 27 | 30 | 662 | ரி | 15 | 46 | 102 | ரி | 50 |
| 15 | 544 | த | 26 | 31 | 647 | ரி | 18 | 47 | 52 | ரி | 52 |
| 16 | 570 | த | 23 | 32 | 629 | ரி | 21 | 48 | 0 | 0 | 0 |

## உதாரண புதஸ்புட கணனம்.

பிரதம கிரியை:—சுதேச புதன் சீக்கிரோச்சம் இராசி 4.3.19.17 இதில் சூரியமத்தியமம் இராசி 1.27.25.53ஐக் கழிக்க வந்தது இராசி 2.5.53.14 இது புதன் பிரதம சீக்கிர கேந்திரம், இது மேஷாதி தனம் இது 6 இராசிக் குள்ளிருப்பதினால் இதுவே புஜை இந்தப் பிரதம சீக்கிர கேந்திரத்தைக் கலை கள் செய்ய 3953.14 இதை 225 ஆல் வகுக்க ஈவு 17 சேடம் 128.14 இது புஜா சேடம் புதன் சீக்கிர பதகம் 17 க்குக் கலை 949.0 18-வது புதன் சீக்கிர பதக கலை 994.0 இதன் அந்தரம் 45 இது தனாந்தரம் இதனால் புஜா சேடம் 128.14ஐப் பெருக்க வந்தது கலை 5770·30 இதை 225 ஆல் வகுத்து வந்த கலை விகலை 25.38 இதைப்புதன் சீக்கிர பதகம் 17இன் கலை 949-0ல் சேர்க்க வந்தது கலை 974.38 இதை அர்த்திக்க (பாதிசெய்ய) 487.19 இதைப் பாகாதிகள் செய்ய பாகை 8 கலை 7 விகலை 19 இது ஸ்புட பதகமாம். இதைச் சுதேச மத்தியான்ன சூரியன் இராசி 1. 27. 25. 53 ல் சேர்க்க (பிரதம சீக்கிர கேந்திரம் மேஷாதிதனமானதினால்) வந்தது இராசி 2 5. 33. 12 இது புதன் பிரதம சீக்கிர ஸ்புடமாம்.

துதீய கிரியை:—புதன் மந்தோச்சம் இராசி 7, 10, 29, 0 இதில் பிரதம சீக்கிர புதன் இராசி 2, 5, 33. 12ஐக் கழிக்க வந்தது இராசி 5. 4. 55. 48 இது புதன் துதீய மந்த கேந்திரம், இது மேஷாதிதனம் இது 6 இராசிக் குள்ளிருப்பதினால் இதுவே புஜை. இதைக் கலைகள் செய்ய வந்தது 9295. 48 இதை 225 ஆல் வகுக்க வந்த ஈவு 41 சேடம் 70. 48 இது புஜா சேடமாம் புதன் மந்த பதகம் 41க்குக் கலை 127. 0 மந்த பதகம் 42க்குக் கலை 111-0 இதன் அந்தரம் 16 இது ரிணாந்தரம் இந்த அந்தரத்தினால் புஜா சேடம் கலை 70. 48ஐப் பெருக்க வந்தது கலை 1132. 48 இதை 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகள் 5. 2. இதைப் புதன் மந்த பதகம் 41இன் கலை 127-0 ல் கழிக்க வந்தது. கலை 121. 58 இது புதன் ஸ்புட பதக பலம் (ஜாபலம்) இதைப் பாகை செய்ய பாகை 2 கலை 1 விகலை 58 இதைச் சூரிய மத்தியமம் இராசி 1. 27. 25. 53ல் (துதீய மந்த கேந்திரம் மேஷாதி தனமானதினால்) சேர்க்க வந்தது இராசி 1. 29. 27. 51. இது துதீய கர்ம மந்த புத ஸ்புடமாம்.

திருதீய கிரியை:—புதன் சீக்கிரோச்சம் இராசி 4. 3. 19. 17 இதில் புதன் மந்த ஸ்புடம் இராசி 1. 29. 27. 51ஐக் கழிக்க வந்தது இராசி 2. 3. 51. 16 இது புதன் அந்திய சீக்கிர கேந்திரம் இது மேஷாதி தனம் இது 6 இராசிக் குள்ளிருப்பதினால் இதுவே புஜை இதைக் கலைகள் செய்யவந்தது 3831. 16 இதை 225 ஆல்வகுக்க வந்தது ஈவு 17 சேடம் கலை 6. 16 இது புஜா சேடம் புதன் சீக்கிர பதகம் 17க்குக் கலை 949-0 18 க்குக் கலை 994.0 இதன் அந்தரம் 45 இது தனாந்தரம் இதனால் புஜா சேடம் கலை 6. 16 ஐப் பெருக்க

வந்தது கலை 282-0 இதனை 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகள் 1. 15. இதைப் புதன் சீக்கிரபதகம் 17ன் வாக்கியம் கலை 949-0-ல் சேர்க்க வந்தது கலை 950-15. இதைப் பாகைசெய்ய பாகை 15 கலை 50 விகலை 15 இது புதன் ஸ்புட பதக பலம் (ஜாபலம்) இதை மந்தஸ்புட புதன் இராசி 1. 29. 27.51ல் சேர்க்க (அந்திய சீக்கிர கேந்திரம் மேஷாதி தனமானதினால்) வந்தது இராசி 2. 15. 18. 6. இது சுதேச மத்தியான்ன புதன் சுத்த ஸ்புடமாம்.

---

## புத சீக்கிர பதக கலா சாரணி.

| எண் | கலை | த | அந்தரம் | எண் | கலை | த.ரி | அந்தரம் | எண் | கலை | ரி | அந்தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 61 | த | 60 | 17 | 949 | த | 45 | 33 | 1260 | ரி | 25 |
| 2 | 121 | த | 60 | 18 | 994 | த | 42 | 34 | 1235 | ரி | 32 |
| 3 | 181 | த | 60 | 19 | 1036 | த | 40 | 35 | 1203 | ரி | 42 |
| 4 | 241 | த | 60 | 20 | 1076 | த | 37 | 36 | 1161 | ரி | 50 |
| 5 | 301 | த | 59 | 21 | 1113 | த | 36 | 37 | 1111 | ரி | 58 |
| 6 | 360 | த | 58 | 22 | 1149 | த | 32 | 38 | 1053 | ரி | 68 |
| 7 | 418 | த | 58 | 23 | 1181 | த | 28 | 39 | 985 | ரி | 78 |
| 8 | 476 | த | 58 | 24 | 1209 | த | 25 | 40 | 907 | ரி | 87 |
| 9 | 534 | த | 56 | 25 | 1234 | த | 22 | 41 | 820 | ரி | 96 |
| 10 | 590 | த | 55 | 26 | 1255 | த | 17 | 42 | 724 | ரி | 105 |
| 11 | 645 | த | 54 | 27 | 1272 | த | 12 | 43 | 619 | ரி | 113 |
| 12 | 699 | த | 53 | 28 | 1284 | த | 7 | 44 | 506 | ரி | 120 |
| 13 | 752 | த | 52 | 29 | 1291 | அ | 0 | 45 | 386 | ரி | 125 |
| 14 | 804 | த | 50 | 30 | 1291 | ரி | 5 | 46 | 261 | ரி | 130 |
| 15 | 854 | த | 48 | 31 | 1288 | ரி | 10 | 47 | 131 | ரி | 131 |
| 16 | 902 | த | 47 | 32 | 1278 | ரி | 18 | 48 | 0 | 0 | 0 |

## புத மந்த பதக கலா சாரணி

| எண் | கலை | த | அந்தரம் | எண் | கலை | த.ரி | அந்தரம் | எண் | கலை | ரி | அந்தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 18 | த | 18 | 17 | 237 | த | 8 | 33 | 229 | ரி | 9 |
| 2 | 36 | த | 17 | 18 | 245 | த | 6 | 34 | 220 | ரி | 10 |
| 3 | 53 | த | 17 | 19 | 251 | த | 5 | 35 | 210 | ரி | 12 |
| 4 | 70 | த | 17 | 20 | 256 | த | 5 | 36 | 198 | ரி | 12 |
| 5 | 87 | த | 16 | 21 | 261 | த | 3 | 37 | 186 | ரி | 14 |
| 6 | 103 | த | 16 | 22 | 264 | த | 2 | 38 | 172 | ரி | 14 |
| 7 | 119 | த | 15 | 23 | 266 | த | 1 | 39 | 158 | ரி | 15 |
| 8 | 134 | த | 14 | 24 | 267 | அ | 0 | 40 | 143 | ரி | 16 |
| 9 | 148 | த | 14 | 25 | 267 | ரி | 1 | 41 | 127 | ரி | 16 |
| 10 | 162 | த | 13 | 26 | 266 | ரி | 2 | 42 | 111 | ரி | 18 |
| 11 | 175 | த | 13 | 27 | 264 | ரி | 3 | 43 | 93 | ரி | 18 |
| 12 | 188 | த | 11 | 28 | 261 | ரி | 4 | 44 | 75 | ரி | 18 |
| 13 | 199 | த | 11 | 29 | 257 | ரி | 5 | 45 | 57 | ரி | 19 |
| 14 | 210 | த | 10 | 30 | 252 | ரி | 7 | 46 | 38 | ரி | 19 |
| 15 | 220 | த | 9 | 31 | 245 | ரி | 7 | 47 | 19 | ரி | 19 |
| 16 | 229 | த | 8 | 32 | 238 | ரி | 9 | 48 | 0 | 0 | 0 |

## உதாரண குருஸ்புட கணனம்.

பிரதம கிரியை:—குருவுக்குச் சிக்கிரோச்சமான மத்தியம சூரியன் இராசி 1. 27. 25. 53 இதில் சதேச மத்தியான்ன குருமத்தியமம் இராசி 3.27.57 18 ஐக் கழிக்க வந்தது இராசி 9. 29. 28. 35 இது குருவிற்குப் பிரதம சிக்கிர கேந்திரமாம் இது துலாதிரிணம் இதைப் புஜை செய்யவேண்டும் இது 6 இராசிக்கு மேலிருப்பதினால் 12 இராசியில் கழித்து வந்த சேடம் இராசி 2. 0. 31. 25 இதைக் கலைகள் செய்ய 3631-25 இதை 225 ஆல் வகுத்துவந்த ஈவு 16 சேடம் 31. 25 இது புஜா சேடம் ஈவு 16க்குக் குருசிக்கிர பதகம் கலை 535·0 17க்குக் குரு சிக்கிர பதக கலை 560.0 இதன் அந்தரம் 25 இது தனுந்தாம் இந்த தனுந்தாம் 25 ஆல் புஜா சேடம் கலை 31-25ஐப் பெருக்க வந்தது கலை 785. 25 இதை 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகள் 3. 29 இந்தக் கலை விகலைகளை குரு 16-ம் வாக்கியமான சிக்கிர பதக கலை 535.0ல் சேர்க்க வந்தது 538. 29 இதை அர்த்திக்க (பாதி செய்ய) 269-14 இதைப் பாகை யாக்க பாகை 4 கலை 29 விகலை 14 இது ஸ்புட பதகம் இதைச் சதேச மத்தியான்ன குருமத்தியமம் இராசி 3. 27. 57. 18 ல் (பிரதம சிக்கிர கேந்திரம் துலாதி ரிணமானதினால்) கழிக்க வந்தது இராசி 3. 23. 28. 4 இது பிரதம சிக்கிர குரு ஸ்புடமாம்.

துதீய கிரியை:—குரு மந்தோச்சம் இராசி 5.21.33. 0 ல் பிரதம சீக்கிர குரு இராசி 3. 23 28. 4 ஐக் கழிக்க வந்தது இராசி 1. 27. 54 56 இது குருவிற்குத் துதீய மந்த கேந்திரமாம் இதுமேஷாதி தனம் இது 6 இராசிக்குள்ளிருப்பதினால் இதுவே புஜை இதைக் கலைகள் செய்ய வந்தது 3474·56 இதை 225ஆல் வகுக்க வந்த ஈவு 15 சேடம் கலை 96.56 இது புஜா சேடம் குருமந்த பலபதகம் 15-வது வாக்கியம் கலை 249.0 16 வது வாக்கியம் 260-0 இதன் அந்தரம் 11. இது தனுந்தாம் இந்தத் தனுந்தாம் 11 ஆல் புஜா சேஷம் கலை 96.56 ஐப் பெருக்க வந்தது 1099.16 இதை 225 ஆல் வகுத்து வந்தகலை விகலைகள் 4.53 இதைக் குரு மந்தபல பதகம் 15-வது வாக்கியம் 249-0ல் சேர்க்க வந்தது 253. 53 இதைப் பாகை செய்ய பாகை 4 கலை 13 விகலை 53 இதைச் சுதேச மத்தியான்ன குருமத்தியமம் இராசி 3. 27. 57 18ல் (துதீய மந்தகேந்திரம் மேஷாதி தனமானதால்) சேர்க்க வந்தது இராசி 4. 2. 11. 11 இது துதீய் கர்ம மந்த குரு ஸ்புடமாம்.

திருதீய கிரியை:—குருவிற்குச் சீக்கிரோச்ச கிரகமான மத்தியம சூரியன் இராசி 1. 27. 25 53ல் துதீய கர்ம மந்த ஸ்புட குரு இராசி 4. 2.11. 11ஐக் கழித்த சேடம் இராசி 9. 25. 14. 42 இது குருவிற்கு அந்திய சீக்கிர கேந்திரமாம் இது துலாதிரிணம் இது 6 இராசிக்கு மேலிருப்பதினால் இந்தப் புஜை செய்ய (12 இராசியில் கழிக்க) வந்தது இராசி 2. 4. 45. 18 இதைக் கலைகள் செய்ய 3885-18 இதை 225 ஆல் வகுத்து வந்த ஈவு 17 சேடம் 60-18 இது புஜா சேடம் குரு சீக்கிர பதகம் 17-வது வாக்கியம் கலை 560-0 18-வது வாக்கியம் கலை 583-0 இதன் அந்தரம் 23 இது தனுந்தாம் இந்தத் தனுந்தாம் 23 ஆல் புஜா சேடம் கலை 60-18ஐப் பெருக்க வந்தது கலை 1386-54 இதை 225 ஆல் வகுக்க வந்த கலை விகலைகள் 6.10 இதைக் குரு 17-ம் வாக்கியம் சீக்கிர பல பதகம் கலை 560-0 தனுந்தரமானதினால் சேர்க்க வந்தது கலை 566-10 இதைப் பாகை செய்ய பாகை 9 கலை 26 விகலை 10 இந்தப் பாகை கலை விகலைகளைத் துதீய மந்த குரு ஸ்புடம் இராசி 4. 2. 11. 11-ல் அந்திய சீக்கிர கேந்திரம் துலாதிரிண மானதினால் கழிக்க வந்தது இராசி 3. 22.45. 1 இது சுதேச மத்தியான்ன குரு சுத்த ஸ்புடமாம்.

---

## குரு சீக்கிர பதக கலா சாரணி.

| எண் | கலை | த | அந்தரம் | எண் | கலை | த.ரி | அந்தரம் | எண் | கலை | ரி | அந்தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 37 | த | 36 | 17 | 560 | த | 23 | 33 | 633 | ரி | 23 |
| 2 | 73 | த | 37 | 18 | 583 | த | 22 | 34 | 610 | ரி | 25 |
| 3 | 110 | த | 36 | 19 | 605 | த | 19 | 35 | 585 | ரி | 29 |
| 4 | 146 | த | 37 | 20 | 624 | த | 17 | 36 | 556 | ரி | 32 |
| 5 | 183 | த | 35 | 21 | 641 | த | 15 | 37 | 524 | ரி | 36 |
| 6 | 218 | த | 36 | 22 | 656 | த | 12 | 38 | 488 | ரி | 39 |
| 7 | 254 | த | 35 | 23 | 668 | த | 10 | 39 | 449 | ரி | 42 |
| 8 | 289 | த | 34 | 24 | 678 | த | 8 | 40 | 407 | ரி | 45 |
| 9 | 323 | த | 34 | 25 | 686 | த | 4 | 41 | 362 | ரி | 47 |
| 10 | 357 | த | 32 | 26 | 690 | த | 2 | 42 | 315 | ரி | 49 |
| 11 | 389 | த | 32 | 27 | 692 | ரி | 2 | 43 | 266 | ரி | 51 |
| 12 | 421 | த | 30 | 28 | 690 | ரி | 5 | 44 | 215 | ரி | 53 |
| 13 | 451 | த | 30 | 29 | 685 | ரி | 8 | 45 | 162 | ரி | 53 |
| 14 | 481 | த | 28 | 30 | 677 | ரி | 11 | 46 | 109 | ரி | 55 |
| 15 | 509 | த | 26 | 31 | 666 | ரி | 15 | 47 | 54 | ரி | 54 |
| 16 | 535 | த | 25 | 32 | 651 | ரி | 18 | 48 | 0 | 0 | 0 |

## குரு மந்த பதக கலா சாரணி.

| எண் | கலை | த | அந்தரம் | எண் | கலை | த.ரி | அந்தரம் | எண் | கலை | ரி | அந்தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 20 | த | 19 | 17 | 270 | த | 8 | 33 | 262 | ரி | 12 |
| 2 | 39 | த | 19 | 18 | 278 | த | 8 | 34 | 250 | ரி | 12 |
| 3 | 58 | த | 19 | 19 | 286 | த | 6 | 35 | 238 | ரி | 13 |
| 4 | 77 | த | 19 | 20 | 292 | த | 5 | 36 | 225 | ரி | 15 |
| 5 | 96 | த | 18 | 21 | 297 | த | 4 | 37 | 210 | ரி | 15 |
| 6 | 114 | த | 18 | 22 | 301 | த | 3 | 38 | 195 | ரி | 17 |
| 7 | 132 | த | 17 | 23 | 304 | த | 1 | 39 | 178 | ரி | 17 |
| 8 | 149 | த | 17 | 24 | 305 | த | 1 | 40 | 161 | ரி | 18 |
| 9 | 166 | த | 16 | 25 | 306 | ரி | 1 | 41 | 143 | ரி | 19 |
| 10 | 182 | த | 15 | 26 | 305 | ரி | 3 | 42 | 124 | ரி | 19 |
| 11 | 197 | த | 14 | 27 | 302 | ரி | 3 | 43 | 105 | ரி | 20 |
| 12 | 211 | த | 14 | 28 | 299 | ரி | 5 | 44 | 85 | ரி | 21 |
| 13 | 225 | த | 12 | 29 | 294 | ரி | 6 | 45 | 64 | ரி | 21 |
| 14 | 237 | த | 12 | 30 | 288 | ரி | 8 | 46 | 43 | ரி | 21 |
| 15 | 249 | த | 11 | 31 | 280 | ரி | 8 | 47 | 22 | ரி | 22 |
| 16 | 260 | த | 10 | 32 | 272 | ரி | 10 | 48 | 0 | 0 | 0 |

## உதாரண சுக்கிர ஸ்புட கணனம்.

பிரதம கிரியை:—சுக்கிரன் சீக்கிரோச்சம் இராசி 1 14, 10. 39 இதில் சுதேச மத்தியான்ன மத்தியம சூரியன் இராசி 1-27-25-53 ஐக் கழிக்க வந்த சேடம் இராசி 11-16-44-46 இது சுக்கிரன் பிரதம சீக்கிர கேந்திரமாம் இது துலாதிரிணம் இது 6 இராசிக்கு மேலிருப்பதினால் 12 இராசியில் கழிக்க வந்தது இராசி 0-13.15-14 இதைக் கலைகள் செய்ய 795-14 இதை 225 ஆல் வகுக்க ஈவு 3 சேடம் 120-14 இது புஜா சேடம் ஈவு 3க்குச் சுக்கிரன் சீக்கிர கலா பதக வாக்கியம் கலை 284-0 4-க்குச் சுக்கிரன் சீக்கிர கலா பதக வாக்கியம் கலை 378.0 இதன் அந்தரம் 94 இது தனுந்தரம் இந்த தனுந்தரத்தினால் புஜா சேடம் கலை 120-14ஐப் பெருக்க வந்தது 11301-56 இதை 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகள் 50.14 இதைச் சுக்கிரன் 3 வது வாக்கியம் கலை 284-0ல் சேர்க்க வந்தது கலை 334-14 இதை அர்த்திக்க (பாதி செய்ய)167-7 இதைப் பாகை செய்ய பாகை 2-47-7இதைச் சூரிய மத்தியமம் 1-27-25-53ல் கழிக்க வந்தது இராசி 1-24-38-46 இது பிரதம சீக்கிர சுக்கிர ஸ்புடமாம்.

துதிய கிரியை:—சுக்கிரன் மந்தோச்சம் இராசி 2-19-54-0 இதில் பிரதம சீக்கிர சுக்கிரன் இராசி 1-24-38-46ஐக் கழிக்க வந்த சேடம் இராசி 0-25-15-14 இது சுக்கிரன் துதிய மந்த கேந்திரம் இது மேஷாதி தனம் இது 6 இராசிக்குள்ளிருப்பதினால் இதுவே புஜை இதைக் கலைகள் செய்ய வந்தது 1515-14 இதை 225 ஆல் வகுக்க வந்த ஈவு 6 சேடம் 165-14 இது புஜா சேடமாம் சுக்கிரன் மந்த பதகம் 6க்குக் கலை 42-0 7க்குக் கலை 48-0 இதன் அந்தரம் 6 இது தனுந்தரம் இதனால் புஜா சேட கலை 165-14ஐப் பெருக்க வந்தது கலை 991-24 இதை 225 ஆல் வகுக்க வந்த கலை விகலைகள் 4-24 இந்தக் கலை விகலைகளைச் சுக்கிரன் மந்த பதக வாக்கியம் 42-0ல் சேர்க்க வந்த கலை 46:24 இந்தக் கலை விகலைகளை மத்தியம சூரியன் இராசி 1-27.25-53ல் மந்த கேந்திரம் தனமானதினால் சேர்க்க வந்தது இராசி 1-28-12-17 இது மந்த ஸ்புட சுக்கிரனும்.

திருதிய கிரியை:—சுக்கிரன் சீக்கிரோச்சம் இராசி 1-14. 10-39 இதில் மந்தஸ்புட சுக்கிரன் இராசி 1-28-12–17ஐக் கழிக்க வந்த இராசி 11-15-58-22 இது சுக்கிரனுக்கு அந்திய சீக்கிர கேந்திரமாம் இது துலாதிரிணம் இது 6 இராசிக்கு மேலிருப்பதினால் 12 இராசியில் கழிக்க வந்தது இராசி 0-14-1-38 இதுவே புஜை இதைக் கலைகள் செய்ய வந்தது 841-38 இதை 225 ஆல் வகுக்க வந்த ஈவு 3 சேடம் 166.38 இது புஜா சேடம் சுக்கிரன் சீக்கிர பல பதகம் 3-க்குக் கலை 284. 0.4-க்குக் கலை 378-0 இதன் அந்தரம் 94 இது தனுந்தரம் இந்தத் தனுந்தரம் கலை 94 ஆல் புஜா சேடம் கலை 166-38ஐப்

பெருக்க வந்தது 15663 32 இதை 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகள் 69-37 இந்தக் கலை விகலைகளைச் சுக்கிரன் சீக்கிர பல பதகம் 3-வது வாக்கியம் 284-0ல் சேர்க்க வந்தது கலை 353.37 இதைப் பாகை செய்ய பாகை 5 53 37 இதை மந்தஸ்புட சுக்கிரன் இராசி 1. 28 12. 17 ல் அந்திய சீக்கிரம் துலாதி ரிணமானதினால் கழிக்கவந்தது இராசி 1· 22 18.40 இது சுதேச் மத்தியான்ன சுத்த சுக்கிர ஸ்புடமாம்.

---

## சுக்கிர சீக்கிர பதக கலா சாரணி.

| எண் | கலை | த | அந்தரம் | எண் | கலை | த | அந்தரம் | எண் | கலை | த-ரி | அந்தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 94 | த | 95 | 17 | 1571 | த | 87 | 33 | 2709 | த | 36 |
| 2 | 189 | த | 95 | 18 | 1658 | த | 86 | 34 | 2745 | த | 25 |
| 3 | 284 | த | 94 | 19 | 1744 | த | 84 | 35 | 2770 | த | 13 |
| 4 | 378 | த | 94 | 20 | 1828 | த | 83 | 36 | 2783 | அ | 0 |
| 5 | 472 | த | 94 | 21 | 1911 | த | 82 | 37 | 2783 | ரி | 91 |
| 6 | 566 | த | 93 | 22 | 1993 | த | 80 | 38 | 2764 | ரி | 41 |
| 7 | 659 | த | 94 | 23 | 2073 | த | 79 | 39 | 2723 | ரி | 66 |
| 8 | 753 | த | 93 | 24 | 2152 | த | 75 | 40 | 2657 | ரி | 103 |
| 9 | 846 | த | 93 | 25 | 2227 | த | 74 | 41 | 2554 | ரி | 146 |
| 10 | 939 | த | 92 | 26 | 2301 | த | 71 | 42 | 2408 | ரி | 202 |
| 11 | 1031 | த | 91 | 27 | 2372 | த | 67 | 43 | 2206 | ரி | 273 |
| 12 | 1122 | த | 91 | 28 | 2439 | த | 64 | 44 | 1933 | ரி | 356 |
| 13 | 1213 | த | 91 | 29 | 2503 | த | 61 | 45 | 1577 | ரி | 449 |
| 14 | 1304 | த | 90 | 30 | 2564 | த | 55 | 46 | 1128 | ரி | 537 |
| 15 | 1394 | த | 90 | 31 | 2619 | த | 48 | 47 | 591 | ரி | 591 |
| 16 | 1484 | த | 87 | 32 | 2667 | த | 42 | 48 | 0 | 0 | 0 |

## சுக்கிர மந்த பதக கலா சாரணி.

| எண் | கலை | த | அந்தரம் | எண் | கலை | த.ரி | அந்தரம் | எண் | கலை | ரி | அந்தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | த | 8 | 17 | 94 | த | 3 | 33 | 90 | ரி | 4 |
| 2 | 15 | த | 7 | 18 | 97 | த | 2 | 34 | 86 | ரி | 4 |
| 3 | 22 | த | 7 | 19 | 99 | த | 2 | 35 | 82 | ரி | 5 |
| 4 | 29 | த | 7 | 20 | 101 | த | 2 | 36 | 77 | ரி | 5 |
| 5 | 36 | த | 6 | 21 | 103 | த | 1 | 37 | 72 | ரி | 5 |
| 6 | 42 | த | 6 | 22 | 104 | த | 1 | 38 | 67 | ரி | 5 |
| 7 | 48 | த | 6 | 23 | 105 | அ | 0 | 39 | 62 | ரி | 6 |
| 8 | 54 | த | 6 | 24 | 105 | அ | 0 | 40 | 56 | ரி | 6 |
| 9 | 60 | த | 5 | 25 | 105 | ரி | 1 | 41 | 50 | ரி | 7 |
| 10 | 65 | த | 5 | 26 | 104 | ரி | 1 | 42 | 43 | ரி | 7 |
| 11 | 70 | த | 5 | 27 | 103 | ரி | 1 | 43 | 36 | ரி | 7 |
| 12 | 75 | த | 5 | 28 | 102 | ரி | 2 | 44 | 29 | ரி | 7 |
| 13 | 80 | த | 4 | 29 | 100 | ரி | 2 | 45 | 22 | ரி | 7 |
| 14 | 84 | த | 4 | 30 | 98 | ரி | 2 | 46 | 15 | ரி | 7 |
| 15 | 88 | த | 3 | 31 | 96 | ரி | 3 | 47 | 8 | ரி | 8 |
| 16 | 91 | த | 3 | 32 | 93 | ரி | 3 | 48 | 0 | 0 | 0 |

## உதாரண சனிஸ்புட கணனம்.

பிரதம கிரியை:—சனிக்குச் சீக்கிரோச்சமான திருக் சுதேச மத்தியான்ன மத்தியம சூரியன் இராசி 1.27.25.53 இல் சுதேச மத்தியான்ன சனி இராசி 4.12.20.36 ஐக் கழிக்க வந்தது இராசி 9. 15. 5. 17. இது சனிக்குப் பிரதம சீக்கிர கேந்திரமாம். இது துலாதிரிணம். இது 6 இராசிக்கு மேலிருப்பதினுல் 12 இராசியில் கழிக்க வந்தது இராசி 2.14.54.43 இதுவே புஜை இதைக் கலைகள் செய்யவந்தது 4494.43 இதை 225 ஆல் வகுக்கவந்த ஈவு 19 சேடம 219.43 இது புஜா சேடம். சனி சீக்கிரகலாபதகம் 19-க்குக் கலை 348.0. 20க்குக் கலை 357.0. இதன் அந்தரம் 9. இது தனுந்தரம். இதனுல் புஜா சேட கலைகள் 219.43 ஐப் பெருக்கவந்தது 1977.27. இதை 225 ஆல் வகுத்துவந்த கலை விகலைகள் 8.47. இதை 19-ம் வாக்கியம் கலை 348.0 ல் (தனுந்தரமானதால்) சேர்க்கவந்தது கலை 356-47 இதை அர்த்திக்க (பாதி செய்ய) வந்தது கலை 178.23 இதைப் பாகை செய்ய பாகை 2, 58.23 இதைச் சுதேச மத்தியான்ன சனி இராசி 4.12.20.36 ல் (பிரதம சீக்கிர கேந்திரம் துலாதிரிணமானுல்) கழிக்கவந்தது இராசி 4.9.22.13 இது சனி பிரதம சீக்கிர ஸ்புடமாம்.

துதீய கிரியை:—சனி மந்தோச்சம் இராசி 7.26.39.0 இதில் பிரதம சீக்கிரசனி இராசி 4.9.22.13 ஐக் கழிக்கவந்தது இராசி 3.17.16.47 இது சனி துதீய மந்த கேந்திரமாம். இது மேஷாதிதனம். இது 6 இராசிக் குள்ளிருப்பதினால் இதுவே புஜை. இதைக் கலைகள் செய்ய வந்தது 6436.47 இதை 225 ஆல் வகுத்த ஈவு 28. சேடம் 136.47 இது புஜாசேடம் சனி மந்த பல பதக வாக்கியம் 28க்குக் கலை 451.0 29-ம் வாக்கியம் கலை 444 இதன் அந்தரம் 7. இது ரிணாந்தரம் இதனால் புஜாசேடம் 136.47 ஐப் பெருக்கவந்தது 957.29 இதை 225 ஆல் வகுத்துவந்த கலை விகலைகள் 4.15. இதைச் சனி 28.ம் வாக்கியம் (மந்தபலபதகம்) கலை 451-0 ல் (ரிணாந்தரமான தால்) கழிக்கவந்தது கலை 446·45 இதைப் பாகை செய்யவந்தது பாகை 7.26.45 இதைச் சுதேச மத்தியான்ன சனி இராசி 4.12.20.36 ல் துதீய மந்த கேந்திரம் தனமானதினால் சேர்க்க வந்தது இராசி 4. 19. 47. 21. இது துதீய கர்ம மந்த ஸ்புட சனியாம்.

திருதீய கிரியை:—சனிக்குச் சீக்கிரோச்சமான திருக்சுதேச மத்தியான்ன மத்தியம சூரியன் இராசி 1.27.25 53 இதில் துதீய கர்ம மந்த ஸ்புட சனி இராசி 4.19.47.21 ஐக் கழிக்கவந்த சேடம் இராசி 9.7.38.22 இது துலாதி ரிணம் இது 6 இராசிக்கு மேலிருப்பதினால் 12 இராசியில் கழித்த சேடம் இராசி 2.22.21.28 இதைக் கலைகள் செய்ய வந்தது 4941.28 இதை 225 ஆல் வகுக்கவந்த ஈவு 21. சேடம் 216.28. இது புஜாசேடம் சனி சீக்கிரபல பதகம் வாக்கியம் 21 க்குக் கலை 365.0.22-ம் வாக்கியம் கலை 372.0 இதன் அந்தரம் 7 இது தனாந்தரம். இந்தத் தனாந்தரத்தினால் புஜா சேடம்.கலை 216.28ஐப் பெருக்க வந்தது 1515.16 இதை 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகள் 6.44.இதைச் சனி சீக்கிர பல பதகம் 21-ம் வாக்கியம் 365.0 ல் தனாந்தரமான தால் சேர்க்கவந்தது கலை 371.44 இதைப் பாகை செய்ய பாகை 6.11.44 இதைத் துதீய கர்ம மந்தஸ்புட சனி இராசி 4.19.47.21.ல் அந்திய சீக்கிர கேந்திரம் துலாதி ரிணமானதினால் கழிக்கவந்தது இராசி 4.13.35.37 இது சுதேச மத்தியான்ன சுத்தஸ்புட சனியாம்.

---

## சனி சீக்கிர பதக கலா சாரணி.

| எண் | கலை | த | அந்தரம் | எண் | கலை | த.ரி | அந்தரம் | எண் | கலை | ரி | அந்தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 22 | த | 22 | 17 | 325 | த | 12 | 33 | 336 | ரி | 14 |
| 2 | 44 | த | 22 | 18 | 337 | த | 11 | 34 | 322 | ரி | 15 |
| 3 | 66 | த | 22 | 19 | 348 | த | 9 | 35 | 307 | ரி | 17 |
| 4 | 88 | த | 21 | 20 | 357 | த | 8 | 36 | 290 | ரி | 18 |
| 5 | 109 | த | 22 | 21 | 365 | த | 7 | 37 | 272 | ரி | 20 |
| 6 | 131 | த | 20 | 22 | 374 | த | 5 | 38 | 252 | ரி | 22 |
| 7 | 151 | த | 21 | 23 | 377 | த | 3 | 39 | 230 | ரி | 22 |
| 8 | 172 | த | 20 | 24 | 380 | த | 2 | 40 | 208 | ரி | 24 |
| 9 | 192 | த | 19 | 25 | 382 | த | 1 | 41 | 184 | ரி | 24 |
| 10 | 211 | த | 19 | 26 | 383 | ரி | 2 | 42 | 160 | ரி | 26 |
| 11 | 230 | த | 18 | 27 | 381 | ரி | 3 | 43 | 134 | ரி | 26 |
| 12 | 248 | த | 17 | 28 | 378 | ரி | 5 | 44 | 108 | ரி | 26 |
| 13 | 265 | த | 17 | 29 | 373 | ரி | 7 | 45 | 82 | ரி | 27 |
| 14 | 282 | த | 15 | 30 | 366 | ரி | 8 | 46 | 55 | ரி | 28 |
| 15 | 297 | த | 15 | 31 | 358 | ரி | 10 | 47 | 27 | ரி | 27 |
| 16 | 312 | த | 13 | 32 | 348 | ரி | 12 | 48 | 0 | 0 | 0 |

## சனி மந்த பதக கலா சாரணி.

| எண் | கலை | த | அந்தரம் | எண் | கலை | த.ரி | அந்தரம் | எண் | கலை | ரி | அந்தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 29 | த | 28 | 17 | 400 | த | 14 | 33 | 397 | ரி | 17 |
| 2 | 57 | த | 28 | 18 | 414 | த | 12 | 34 | 380 | ரி | 18 |
| 3 | 85 | த | 28 | 19 | 426 | த | 10 | 35 | 362 | ரி | 21 |
| 4 | 113 | த | 27 | 20 | 436 | த | 8 | 36 | 341 | ரி | 21 |
| 5 | 140 | த | 26 | 21 | 444 | த | 8 | 37 | 320 | ரி | 24 |
| 6 | 166 | த | 27 | 22 | 452 | த | 4 | 38 | 296 | ரி | 25 |
| 7 | 193 | த | 25 | 23 | 456 | த | 3 | 39 | 271 | ரி | 26 |
| 8 | 218 | த | 25 | 24 | 459 | த | 1 | 40 | 245 | ரி | 28 |
| 9 | 243 | த | 23 | 25 | 460 | ரி | 1 | 41 | 217 | ரி | 29 |
| 10 | 266 | த | 23 | 26 | 459 | ரி | 3 | 42 | 188 | ரி | 29 |
| 11 | 289 | த | 22 | 27 | 456 | ரி | 5 | 43 | 159 | ரி | 31 |
| 12 | 311 | த | 20 | 28 | 451 | ரி | 7 | 44 | 128 | ரி | 31 |
| 13 | 331 | த | 20 | 29 | 444 | ரி | 9 | 45 | 97 | ரி | 32 |
| 14 | 351 | த | 17 | 30 | 435 | ரி | 10 | 46 | 65 | ரி | 33 |
| 15 | 368 | த | 17 | 31 | 424 | ரி | 13 | 47 | 33 | ரி | 33 |
| 16 | 385 | த | 15 | 32 | 411 | ரி | 14 | 48 | 0 | 0 | 0 |

# குஜாதி பஞ்ச கிரகங்களுக்குக் கதிஸ்புடங் கணிக்கும் விவரம்.

குஜாதி பஞ்ச கிரகங்களின் † சீக்கிரோச்ச கதிகளில் அவரவர்களின் கிரக கதிகளை (தினகதியை) வாங்க வருவது அவரவர்களுக்குப் பிரதம சீக்கிர கேந்திர கதிகளாகும். இந்தக் கேந்திர கதிகளை அவரவர்களின் பிரதம சீக்கிர பதகாந்தரத்தினுற் பெருக்கி 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகளைப் பாதிசெய்து (அர்த்தித்து அவரவர்களின் கதிகளில்) தனுந்தர பலத்தினல் வந்திருப்பின் சேர்த்தும், ரிணுந்தர பலத்தினல் வந்திருப்பின் (அவரவர்களின்) கதிகளில் கழித்தும் வருவது அவரவர்களின் பிரதம சீக்கிர கதிஸ்புடமாகும்,

துதீய கிரியை:—இந்தப் பிரதம சீக்கிர கதியை, அவரவர்களின் துதீய மந்த பதகாந்தரத்தினுற் பெருக்கி 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகளைப் பூராவும் அவரவர்களின் துதீய கிரியையில் தனுந்தரம் வந்திருப்பின் அவரவர்களின் மத்தியமகதியில் கழித்தும், துதீய கிரியையில் ரிணுந்தரம் வந்திருப்பின் அவரவர்களின் மத்தியம கதியில் சேர்த்தும் வருவது அவரவர்களுக்குத் துதீய கர்மமான மந்த கதிஸ்புட மாகும்.

திருதீய கிரியை:—இந்தத் துதீய மந்தஸ்புடகதியை அவரவர்களின் சீக்கிரோச்ச கதியில் கழிக்கவருவது அவரவர்களுக்கு அந்திய சீக்கிர கேந்திர கதிகளாகும். இதை அவரவர்களின் அந்திய சீக்கிர பதகாந்தரத்தினுற் பெருக்கி 225 ஆல் வகுத்துவந்த கலை விகலைகளைப் பூராவும் அந்திய சீக்கிர பதகாந்தரத்தின் தன ரிண நியதிப்படிக்குத் தெரிந்து மந்தஸ்புடகதியில் தனமாளுல் கூட்டியும், ரிணமாளுல் கழித்தும் வருவது அவரவர்களுக்குச் சுத்த கதிஸ்புட மாகும்.

குறிப்பு:—குஜாதி பஞ்ச கிரகங்களுக்கு இந்தக் கதியில் இரண்டாவது கிரியையில் மாத்திரம் அவரவர்களுக்குத் தனுந்தரம் வந்திருப்பின் கதியின் பலத்தை ரிண சமஸ்காரமும், ரிணுந்தரம் வந்திருப்பின் கதியின் பலத்தைத் தன சமஸ்காரமும் செய்யவேண்டும். முதல் கிரியையிலும் மூன்றுவது கிரியையிலும் தனுந்தரம் வந்திருப்பின் தன சமஸ்காரமும், ரிணுந்தரம் வந்திருப்பின் ரிண சமஸ்காரமும் செய்து கொள்ள வேண்டும்.

இம்மாதிரியாகவே அங்காரக-புத-குரு-சுக்கிர-சனி இவர்களுக்கு மூன்று விதமான கிரியைகளைச் செய்துகொள்ள வேண்டும். முன் குறிப்பிட்டிருக்கும் கிரகங்களுக்கு ஸ்புடம் செய்யும்போது இன்னின்ன பதகம் என்று அந்தந்த விடங்களில் விவரமாய்க் குறித்து வைத்துக்கொண்டு கதிகளைச் சுத்தமாய்க் கணனம் செய்து கொள்ளவேண்டும்.

---

† அங்காரக-குரு-சனி இம்மூன்று கிரகங்களுக்கு மத்தியம சூரியனுனவர் சீக்கிரோச்சனுவர். இதைச் செவ்வையாய்க் கவனத்தில் வைக்கவேண்டும்.

# குஜாதி பஞ்ச கிரகங்களின் கதிஸ்புட கணனம்.

## உதாரண அங்காரக கதிஸ்புடம்.

பிரதம கிரியை:—அங்காரகனுக்கு சீக்கிரோச்ச கதி (இதுவே சூரியகதி) 59-8 இதில் அங்காரகன் மத்தியமகதி கலை 31-26 ஐக் கழித்து வந்த சேடம் கலை 27.42 இது அங்காரகன் பிரதம கேந்திர கதி. இதை அங்காரகன் பிரதம கிரியையில் வந்த ரிணாந்தரம் 302 ஆல் பெருக்க வந்தது கலை 8365.24 இதை 225 ஆல் வகுத்து வந்த ஈவு கலை 37 சேடம் 40·24 இதை 60 ஆல் பெருக்கி 225க்குக் கொடுத்து வந்த ஈவு 11. இது விகலை இந்தக் கலை 37-11ஐ அர்த்திக்க (பாதி செய்ய) வந்தது கலை 18·35½ இது பலம் இந்தப்பலத்தை அங்காரகன் மத்தியம கதி கலை 31-26ல் கழிக்க வந்தது(முன் பிரதம கிரியையில் வந்தது ரிணாந்தரமானதினால்) கலை 12 விகலை 51. இது அங்காரகனுக்குப் பிரதம சீக்கிர கதிஸ்புடமாம்.

துதிய கிரியை:—அங்காரகன் பிரதம சீக்கிர கதி கலை 12 விகலை 51 இதை அங்காரகன் துதிய கிரியையில் வந்த தனாந்தரம் 11 ஆல் பெருக்க வந்தது கலை 141·21 இதை 225 ஆல் வகுக்க வந்த ஈவு கலை 0 விகலை 37 இதை அங்காரகன் மத்தியமகதி கலை 31·26ல் (துதீய மந்த கேந்திரத்தில் தனாந்தரம் வந்தபடியால்) கழிக்க வந்தது கலை 30 விகலை 49 இது அங்காரகனுக்குத் துதீய மந்த கதிஸ்புடமாம்.

திருதிய கிரியை:—அங்காரகன் சீக்கிரோச்ச கதி கலை 59·8 (இதுவே சூரியகதி) ல் துதிய மந்தகதி கலை 30·49 ஐக் கழிக்க வந்தது கலை 28·19 இது அங்காரகனுக்கு அந்திய சீக்கிரகதி இதை அங்காரகன் திருதீய கிரியையில் வந்த ரிணாந்தர கதி 157 ஆல் பெருக்க வந்தது கலை 4445·43 இதை 225 ஆல் வகுக்க வந்த கலை விகலைகள் 19·45 இந்தக் கலை விகலைகளை துதீய மந்தகதி கலை 30·49ல் (ரிணாந்தரமானதால்) கழிக்க வந்தது கலை 11 விகலை 4. இது அங்காரகனுக்குச் சுத்த கதிஸ்புடமாம்.

## உதாரணம் புத கதிஸ்புடம்.

பிரதம கிரியை:—புதன் சீக்கிரோச்ச கதி கலை 245·32. இதில் சூரிய கதி கலை 59·8 ஐக் கழிக்க வந்தது கலை 186·24 இது புதன் பிரதம கேந்திர கதி இதைப் புதனுக்குப் பிரதம கிரியையில் வந்த தனாந்தரம் 45 ஆல் பெருக்க வந்தது 8388·0 இதை 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகள் 37.17 இதை அர்த்திக்க வந்தது கலை 18·38 இதைச் சூரியகதி கலை 59·8ல் தனாந்தரமானதால் சேர்க்க வந்தது கலை 77·46 இது புதனுக்குப் பிரதம சீக்கிர கதிஸ்புடமாம்.

துதீய கிரியை:—புதன் பிரதம சீக்கிரகதி 77.46 இதைப் புதனுக்குத் துதீய கிரியையில் வந்த ரிணாந்தரம் 16 ஆல் பெருக்கவந்தது கலை 1244.16 இதை 225 ஆல் வகுக்க வந்த கலை விகலைகள் 5.32 இதைச் சூரியகதி 59.8ல் (துதீய மந்த கேந்திரத்தில் ரிணாந்தரம் வந்தபடியால்) சேர்க்க வந்தது கலை 64.40 இது புதன் துதீய மந்த கதிஸ்புடமாம்.

கவனிப்பு:—கதிஸ்புடங்களுக்குத் துதீய கிரியையில் வந்தது ரிணமாயின் தனசமஸ்காரமும், தனமாயின் ரிணசமஸ்காரமும் செய்யவேண்டுமென்பது பெரியோர்களின் கருத்து.

திருதீய கிரியை:—புதன் சீக்கிரோச்சகதி கலை 245.32 இதில் புதன் துதீய மந்த கதி கலை 64.40ஐக் கழிக்க வந்தது கலை 180·52 இது புதன் அந்திய சீக்கிரகதி இதைத் திருதீய கிரியையில் வந்த தனாந்தரம் 45 ஆல் பெருக்க கலை 8139.0 இதை 225 ஆல் வகுத்து வந்த கலை விகலைகள் 36.10 இதைத் துதீயமந்த கதி 64.40 ல் தனாந்தரமானதினால் சேர்க்க வந்தது கலை 100.50 இது புதனுக்குச் சுத்தகதிஸ்புடமாம்.

## உதாரண குரு கதிஸ்புடம்.

பிரதம கிரியை:—குரு சீக்கிரோச்ச கதி (இதுவே சூரியகதி) கலை 59.8 இதில் குரு தினகதி கலை 5.0ஐக் கழிக்க வந்தது கலை 54.8 இதைக்குரு பிரதம கிரியையில் வந்த தனாந்தரம் 25 ஆல் பெருக்க வந்தது கலை 1353.20 இதை 225 ஆல் வகுக்க வந்த கலை விகலைகள் 6.1 இதை அர்த்திக்க வந்தது கலை 3.½ இதைக் குரு தினகதி கலை 5.0ல் சேர்க்க வந்தது கலை 8.0 இது குருவிற்குப் பிரதம சீக்கிர கதிஸ்புடமாம்.

துதீய கிரியை:—குரு பிரதம சீக்கிரகதிகலை 8.0. இதைக் குருதுதீயகிரியையில் வந்த தனாந்தரம் 11-ஆல் பெருக்க வந்தது கலை 88.0 இதை 225-ஆல் வகுக்க வந்த கலைவிகலைகள் 0·23 இதைக்குருகதி கலை 5-0-ல் கழிக்க வந்தது கலை 4 விகலை 37 இது குருவிற்குத் துதீய மந்த கதிஸ்புடமாம்.

திருதீய கிரியை:—குரு சீக்கிரோச்சகதி (சூரியகதி) கலை 59.8 இதில் குருதுதீயமந்தகதி கலை 4·37-ஐக் கழிக்க வந்தது கலை 54.31 இதைக் குரு திருதீய கிரியையில் வந்த தனாந்தரம் 23-ஆல் பெருக்கி வந்த கலைவிகலைகள் 1253·53 இதை 225-ஆல் வகுத்து வந்த கலை விகலைகள் 5.34 இதைக் குரு மந்தகதி 4.37-ல் சேர்க்க வந்தது கலை 10.11 இதுவே குருவிற்குச் சுத்த கதிஸ்புடமாம்.

## உதாரண சுக்கிர கதிஸ்புடம்.

பிரதமகிரியை:—சுக்கிரன் சீக்கிரோச்சகதி கலை 96.8 இதில் சூரியன் மத்தியமகதி கலை 59·8-ஐக் கழிக்க வந்தது கலை 37·0 இதைச் சுக்கிரன் பிரதம

கிரியையில் வந்த தனுந்தரம் 94-ஆல் பெருக்க வந்தது 3478·0 இதை 225-ஆல் வகுத்து வந்த கலை விகலைகள் 15·27 இதை அர்த்திக்க 7·43 இதனுடன் சூரியமத்தியமகதி கலை 59-8-ஐச் சேர்க்க வந்தது கலை 66·51 இது சுக்கிரன் பிரதம சீக்கிரகதிஸ்புடமாம்.

துதீய கிரியை:—சுக்கிரன் பிரதம சீக்கிரகதி கலை 66.51 இதைச் சுக்கிரன் துதீய கிரியையில் வந்த தனுந்தரம் 6-ஆல் பெருக்க வந்தது 401·6 இதை 225-ஆல் வகுக்க வந்த கலை விகலைகள் 1·47 இதைச் சூரியமத்தியமகதி 59-8-ல் கழிக்க வந்தது கலை 57·21 இது சுக்கிரன் துதீயமந்தகதி ஸ்புடமாம்.

திருதீய கிரியை:—சுக்கிரன் சீக்கிரோச்சகதி கலை 96·8 இதில் சுக்கிரன் துதீய மந்த கதி கலை 57.21-ஐக் கழிக்க வந்தது கலை 38·47 இதைச் சுக்கிரன் திருதீயகிரியையில் வந்த தனுந்தரம் 94 ஆல் பெருக்க வந்தது கலை 3645·31 இதை 225 ஆல் வகுக்க வந்த கலை விகலைகள் 16.12. இதைச் சுக்கிரன் மந்த கதி கலை 57·21-ல் சேர்க்க வந்தது கலை 73.33 இதுவே சுக்கிரனுக்குச் சுத்த கதிஸ்புடமாம்.

## உதாரண சனி கதிஸ்புடம்.

பிரதம கிரியை:—சனி சீக்கிரோச்சகதி (சூரியகதி) கலை 59.8 இதில் சனிமத்தியமகதி கலை 2·0ஐக் கழிக்க வந்தது கலை 57·8 இதைச் சனி பிரதம கிரியையில் வந்த தனுந்தரம் 9-ஆல் பெருக்க வந்தது கலை 514.12 இதை 225 ஆல் வகுக்க வந்தது கலை விகலைகள் 2·17 இதை அர்த்திக்க கலை 1·8 இதைச் சனிமத்தியம கதி கலை 2.0-ல் சேர்க்க வந்தது கலை 3 விகலை 8 இது சனிக்கு பிரதம சீக்கிர கதிஸ்புடமாம்.

துதீய கிரியை:—சனி பிரதம சீக்கிர கதி கலை 3.8 இதைச் சனி துதீய கிரியையில் வந்த ரிணுந்தரம் 7 ஆல் பெருக்க வந்தது கலை 21.56 இதை 225 ஆல் வகுக்க வந்த கலை விகலைகள் 0.6 இதைச் சனிமத்தியமகதி கலை 2.0-ல் சேர்க்க வந்தது கலை 2.6 இது சனிக்குத் துதீய மந்த கதிஸ்புடமாம்.

திருதீய கிரியை:—சனி சீக்கிரோச்சகதி (சூரியகதி) கலை 59·8 இதில் சனி துதீய மந்தகதி கலை 2·6ஐக் கழிக்க வந்தது கலை 57·2 இதைத் திருதீய கிரியையில் வந்த தனுந்தரம் 7 ஆல் பெருக்க வந்தது கலை 399·14 இதை 225 ஆல் வகுக்க வந்த கலை விகலைகள் 1.46 இதைச் சனிமந்த ஸ்புடகதி கலை 2.6-ல் சேர்க்க வந்தது கலை 3.52 இது சனிக்குச் சுத்த கதிஸ்புடமாம்.

இராகுவிற்கு:—சுத்தகதிஸ்புடம் கலை 3 விகலை 11.

இதுவரையில் கணிக்கப் பெற்றவைகளை அடியிற் காண்க

| கிரகங்கள் | பிரதமசீக்கிரகதி கலை | விகலை | துதீயமந்தகதி கலை | விகலை | சுத்தகதிஸ்புடம் கலை விகலை |
|---|---|---|---|---|---|
| சூரியனுக்கு | ... | ... | ... | ... | 57.0 |
| சந்திரனுக்கு | ... | ... | ... | ... | 824.21 |
| அங்காரகனுக்கு | 12 . | 51 | 30 . | 49 | 11.4 |
| புதனுக்கு | 76 . | 46 | 64 . | 40 | 100.50 |
| குருவிற்கு | 8 . | 0 | 4 . | 37 | 10.11 |
| சுக்கிரனுக்கு | 66 . | 51 | 57 . | 21 | 73.33 |
| சனிக்கு | 3 . | 8 | 2 . | 6 | 3.52 |
| இராகுவிற்கு | ... | ... | ... . | ... | 3.11 |

## இனி இஷ்ட காலத்திற்குக் கிரகங்களை யறிய வழி.

இஷ்ட கால விகடிகைகளை, அந்தந்த கிரகங்களின் ஸ்புடகதிகளை விகலைசெய்து ஒன்றுக்கொன்று பெருக்கி 3600 ஆல் வகுக்க வரும் ஈவு கலாதிகள் இந்தக்கலாதிகளை, ஜாதகன் ஜனன காலம் முற்பகலாயிருப்பின் முன் சித்தமாக ஸ்புடம் செய்து வைத்திருக்கும் சுதேசமத்தியான்ன சுத்தஸ்புடங்களில் கழித்தும், பிற்பகலாயிருப்பின் முன் சித்தமாக வைத்திருக்கும் ஸ்புடங்களில் சேர்த்தும் வருவது ஜனனகாலத்திற்குச் சுத்தஸ்புட கிரகங்களாகும்.

## இராகுஸ்புட கணனம்.

**உதாரணம்:**—திருக் சமஸ்கார பாதன் என்னும் இராகு இராசி 5.9.14.43ஐமண்டலமாகிற 12 இராசியில் கழிக்க வந்தது இராசி 6.20.45.17 இது † இராகு (சுதேச மத்தியான்னத்திற்கு) சுத்த ஸ்புடமாம்.

## கேதுஸ்புட கணனம்.

**உதாரணம்:**—சுதேச மத்தியான்ன இராகு சுத்தஸ்புடம் இராசி 6.20.45.17 ல் 6 இராசியைச் சேர்க்க வந்தது இராசி 12.20.45.17 இதில் மண்டலம் 12 இராசியைக் கழிக்க வந்தது இராசி 0.20.45.17 இது கேது (சுதேச மத்தியான்னத்திற்கு) சுத்தஸ்புடமாம்.

இது வரையில் உதாரணமாகச் செய்து காண்பிக்கப் பெற்றுள்ள சூரியாதி நவக்கிரக ஸ்புடங்களானவை சுதேச பறங்கிப்பேட்டைக்கு மத்தியான்னத்திற்கு (அதாவது 15 நாழிகை 48 விநாடிக்குச்) சுத்தஸ்புடங்களாயின.

---

† 23 ஆம் பக்கம் பார்க்க.

அவை வருமாறு:

| | |
|---|---|
| சூரியஸ்புடம். 1. 28. 11. 4. | சுக்கிரஸ்புடம். 1. 22. 18. 40. |
| சந்திரஸ்புடம். 0. 1. 29. 6. | சனிஸ்புடம். 4. 13. 35. 37 |
| அங்காரகஸ்புடம். 5. 28. 17. 34. | இராகுஸ்புடம் 6. 20. 45. 17. |
| புதஸ்புடம். 2. 15. 18. 6. | கேதுஸ்புடம். 0. 20. 45. 17. |
| குருஸ்புடம், 3. 22. 45. 1. | ——:o:—— |

இந்த ஜனன ஜாதகன் ஜனனகாலம் உதயாதி நாழிகை 1 விநாடி 7. ஜனனகாலத்தன்று அசசு 31 36 இதன்பாதி 15.48 இது திருர்த்தயாம் இதில் இஷ்டகடிகை (ஜனனநாழிகை) 1.7-ஐக் கழிக்க வந்தது நாழிகை 14.41 இது இஷ்டகாலமாம் இதுவே பூர்வநதமுமாம்.

**கதி சமஸ்கார கணன உதாரணம் சூரியனுக்கு:**—சூரியகதி கலை 57 0 இதன் விகலை 3420 பூர்வந்தம் 14.41 இதன் விகலை 881 இவ்விரண்டையும் பெருக்க வந்தது 3013020 இதை 3600-ஆல் வகுக்க வந்த ஈவு அர்த்தாதிகத்துடன் 837 இது விகலை. இதைக் கலை செய்ய 13 கலை 57 விகலை இதுவே சூரியனுக்குக் கதி சமஸ்கார கலை விகலைகளாம்.

**உதாரணம் சந்திரனுக்கு:**—சந்திரகதிகலை 824.21 இதை விகலை செய்ய 49461 பூர்வந்தம் 14.41 இதன் விகலை 881 இவ்விரண்டையும் பெருக்க வந்தது 43575141 இதை 3600-ஆல் வகுத்த ஈவு 12104 இது விகலை. சேடம் நீக்குக. இதைப்பாகை கலை விகலைகளாக்க பாகை 3 கலை 21 விகலை 44 இதுவே சந்திரனுக்குக் கதிசமஸ்கார பாகை கலை விகலைகளாம்.

**உதாரணம் அங்காரகனுக்கு:**—அங்காரககதி கலை 11.4 இதன் விகலை 664 பூர்வநத விகலை 881 இவ்விரண்டையும் பெருக்க வந்தது 584984 இதை 3600-ஆல் வகுத்த ஈவு 162 இது விகலை. இதைக் கலையாக்க கலை 2 விகலை 42 இதுவே அங்காரனுக்குக் கதிசமஸ்கார கலை விகலைகளாம்.

**உதாரணம் புதனுக்கு:**—புதனுக்குக் கதி 100.50 இதன் விகலை 6050 பூர்வநத விகலை 881 இவ்விரண்டையும் பெருக்க வந்தது 5330050 இதை 3600-ஆல் வகுத்த ஈவு 1480 இது விகலை. இதைக்கலையாக்க கலை 24 விகலை 40 இதுவே புதனுக்கு கதி சமஸ்கார கலை விகலைகளாம்.

**உதாரணம் குருவிற்கு:**—குருவிற்குக் கதி 10.11 இதன் விகலை 611 பூர்வநத விகலை 881 இவ்விரண்டையும் பெருக்க வந்தது 538291 இதை 3600-ஆல் வகுத்த ஈவு 149 இது விகலை. இதைக் கலையாக்க கலை 2 விகலை 29 இதுவே குருவிற்குக் கதி சமஸ்கார கலை விகலைகளாம்.

உதாரணம் சுக்கிரனுக்கு:—சுக்கிரனுக்குக் கதி 73.33 இதன் விகலை 4413 பூர்வநத விகலை 881 இவ்விரண்டையும் பெருக்க வந்தது 3887853 இதை 3600-ஆல் வகுத்த ஈவு அர்த்தாதிகப்படி 1080 இது விகலை இதைக் கலையாக்க கலை 18 விகலை 0 இதுவே சுக்கிரனுக்குக் கதி சமஸ்கார கலையாம்.

உதாரணம் சனிக்கு:—சனிக்குக் கதி 3.52 இதன் விகலை 232 பூர்வ நத விகலை 881 இவ்விரண்டையும் பெருக்க வந்தது 204392 இதை 3600 ஆல் வகுத்த ஈவு அர்த்தாதிகப்படி 57 இது விகலை இதற்குச் சனி கதி சமஸ் கார விகலை என்ப.

உதாரணம் இராகுவிற்கு:—இராகுவிற்குக் கதி 3.11 இதை விகலை செய்ய 191 பூர்வநத விகலை 881 இவ்விரண்டையும் பெருக்க வந்தது 168271 இதை 3600-ஆல் வகுத்த ஈவு அர்த்தாதிகப்படி 47 இது விகலை இதற்கு இராகு கதி சமஸ்கார விகலையென்ப.

## இதுவரையில் கணிக்கப் பெற்றுள்ள கதி சமஸ்கார விகலைகள் ஆவன.

| கிரகம் | பா. கலை. விகலை. | கிரகம் | கலை. விகலை. | கிரகம். | விகலை. |
|---|---|---|---|---|---|
| சூரியனுக்குப் | 0. 13. 57. | தனுச்குக் | 24. 40 | சனிக்கு | 57 |
| சந்திரனுக்குப் | 3. 21. 44 | குருவிற்குக் | 2. 29 | இராகுவுக்கு | 47 |
| அங்காரகனுக்குப் | 0. 2. 42. | சுக்கிரனுக்குக் | 18 0 | | |

இவ்விதமாய்ச் சமஸ்காரம் செய்யப் பெற்றிருக்கும் கலை விகலைகளைப் பறங்கிப்பேட்டை மத்தியான்னத்திற்கு அதாவது 15 நாழிகை 48 விநாடிக் குக் கணித்து வைத்திருக்கின்ற சூரியாதி கிரகங்களின் ஸ்புடங்களில் கழிக்க வருவது ஜனனதேசமான சிதம்பரந்தாலூக்கா பறங்கிப்பேட்டைக்கு ரௌத்திரி௵ வைகாசி௴ 30 உ ஸ்திரவாரம் உதயாதிநாழிகை 1 விநாடி 7 க்குச் சுத்தஸ்புடங்களாகும்:

உதாரணம்:—பறங்கிப்பேட்டை மத்தியான்னத்திற்குக் கணனம் செய்து வைத்திருக்கும் சூரியஸ்புடம் இ. 1.28.11.4 இதில் சூரியகதி சமஸ் கார கலை 13.57 ஐக் கழிக்க வந்த இராசி 1.27.57.7. இதுவே சூரியனுக் குச் சுத்தஸ்புடமாம்.

சந்திரஸ்புடம் இ. 0.1.29.6 இதில் சந்திரகதி சமஸ்கார பாகை 3.21.44 ஐக் கழிக்க வந்த இராசி 11.28.7.22. இதுவே சந்திரனுக்குச் சுத்தஸ்புட மாம்.

அங்காரகஸ்புடம் இ-5.28.17.34 இதில் அங்காரகதி சமஸ்கார கலை 2 42 ஐக் கழிக்க வந்த இராசி 5·28·14·52 இதுவே அங்காரகனுக்குச் சுத்த ஸ்புடமாம்.

புதஸ்புடம் இ-2·15·18·6 இதில் புதகதி சமஸ்கார கலை 24·40 ஐக் கழிக்க வந்த இராசி 2.14.53.26 இதுவே புதனுக்குச் சுத்த ஸ்புடமாம்.

குருஸ்புடம் இ. 3.22.45.1-இதில் குருகதி சமஸ்காரகலை 2 29-ஐக் கழிக்க வந்த இராசி 3·22·42 32. இதுவே குருவிற்குச் சுத்த ஸ்புடமாம்.

சுக்கிரஸ்புடம் இ·1.22.18.40 இதில் சுக்கிரகதி சமஸ்கார கலை 18.0 ஐக் கழிக்க வந்த இராசி 1.22.0.40 இதுவே சுக்கிரனுக்குச் சுத்த ஸ்புடமாம்.

சனிஸ்புடம் இ. 4.13.35.37 இதில் சனி கதி சமஸ்கார விகலை 57 ஐக் கழிக்க வந்த இராசி 4.13.34.40 இதுவே சனிக்குச் சுத்த ஸ்புடமாம்.

இராகுஸ்புடம் இ. 6.20.45.17 இதில் இராகுகதி சமஸ்கார விகலை 47 ஐக் கழிக்க வந்த இராசி 6.20.44.30 இதுவே இராகுவிற்குச் சுத்த ஸ்புடமாம்.

கேதுஸ்புடம். இராகுஸ்புடம் இ. 6.20.44.30 உடன் இ 6-0-0.0 சேர்க்க வந்தது இராசி. 12.6.20.30 இதில் மண்டலம் 12 இராசியைக் கழிக்க வந்தது இராசி. 0.6 20.30 இதுவே கேதுவிற்குச் சுத்த ஸ்புடமாம்.

இந்தப்படி கணிக்கப் பெற்றுள்ள சூரியாதி நவக்கிரக ஸ்புடங்களானவை உத்தர அட்சாம்சம் 11.35 ல் உள்ள பறங்கிப்பேட்டைக்கு வர்த்தமான சாலிய வாகன சகம் ௵ 1843. வர்த்தமான கலியுகம் ௵ 5022 ல் ரௌத்திரி வருஷம் வைகாசிமாசம் 30 ஆந்தேதி ஸ்திரவாரம் சூரிய உதயாதி நாழிகை 1, விநாடி 7-க்குச் சித்தாந்த திருக்கணித ரீதியாய் சுத்தஸ்புடமாகும்.

அவை வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| சூரிய சுத்தஸ்புடம் | 1. 27. 57. 7 | சுக்கிரசுத்தஸ்புடம் | 1. 22. 0. 40 |
| சந்திர சுத்தஸ்புடம் | 11. 28. 7. 22 | சனி சுத்தஸ்புடம் | 4. 13. 34. 40 |
| அங்காரகசுத்தஸ்புடம் | 5. 28. 14. 52 | இராகு சுத்தஸ்புடம் | 6. 20. 44. 30 |
| புத சுத்தஸ்புடம் | 2. 14. 53. 26 | கேது சுத்தஸ்புடம் | 0. 20. 44. 30 |
| குரு சுத்தஸ்புடம் | 3. 22. 42. 32 | இலக்கினஸ்புடம் | 2. 4. 33. 37 |

## இலக்கினஸ்புட கணனம்.

ஜனன காலத்திய சுத்த சூரியஸ்புடத்தில் இராசியை நீக்கிப் பாகை கலை விகலைகளுக்கு இஷ்டமென்றும், உதய கால லக்கினத்தின் சுதேச பிரமாண விநாடிகளுக்குப் பலமென்றும் பெயராம். இஷ்டத்துக்கும் பலத்துக்கும்

பெருக்கி இராசிப் பிரமாணமாகிற 1800 ஆல் வகுத்து வந்த ஈவு விநாடி சேஷத்தை 60 ஆல் பெருக்கி ஷை 1800க்குக் கொடுத்து வந்த ஈவு தற்பரை. இந்த விநாடி தற்பரைகளுக்கு உதயாத் பூர்வ மென்று பெயர் இந்த உதயாத் பூர்வத்தை உதயகால லக்கினத்தின் பிரமாண விநாடிகளில் கழிக்க வருவது உதயாத்பர மெனப் பெயர் பெறும்.

இஷ்டகால நாழிகையை விநாடியாக்கி அதில் உதயாத்பர விநாடி தற்பரைகளைக் கழித்து வந்த சேடத்தில் எடுபடவேண்டிய இராசிகளை எடுத்து எடுபடாமல் நின்ற விநாடிகளுக்கு இஷ்டமென்றும், ஒரு இராசிக்கு 30 பாகை யானதினுல் இதற்குப் பலமென்றும் பெயராம் எடுபடாமல் நின்ற விநாடிகளை 30 ஆல் பெருக்கி ஜன்மலக்கினமான எடுபடாமலிருக்கும் இராசிப் பிரமாணமாகிற எண்ணினுல் வகுக்க வரும் ஈவு பாகை சேடத்தை 60 ஆல் பெருக்கி ஷை எண்ணுல் வகுக்கவரும் ஈவு கலை. சேடத்தை 60 ஆல் பெருக்கி ஷை எண்ணுல் வகுக்க வரும் ஈவு விகலை இதனுடன் சென்றிருக்கும் இராசிகளையும் சேர்க்க இராசி பாகை கலை விகலைகளாகும்.

**உதாரணம்:**—ஜனனகால சூரியஸ்புடம் இ 1.27.57.7 இதில் இராசியை நீக்கிப் பாகாதிகள் 27.57.7 இதைக் கலைகள் செய்ய 1677.7 இதை இடபவிராசியின் பிரமாணமாகிற (பறங்கிப்பேட்டையின்) இராசிமானம் 280ஆல் பெருக்க வந்தது 469592-40 இதை 1800-ஆல் வகுக்க வந்த ஈவு 260 இது விநாடி சேடம் 1592.40 இதை 60 ஆல் பெருக்க வந்தது 95560 இதை 1800 ஆல் வகுக்க வந்த ஈவு 53 இது தற்பரை சேடம் நீக்குக. இந்த 260 விநாடி 53 தற்பரையை உதயாத் பூர்வ மென்ப. இதை இடபவிராசியான விநாடி 280-ல் கழிக்க வந்தது விநாடி 19 தற்பரை 7 இதுவே உதயாத் பரமாம்.

இஷ்டகடிகை 1.7ஐ விநாடி செய்ய வந்தது 67 இதில் உதயாத்பரவிநாடி 19.7ஐக் கழிக்க வந்தது 47.53 இதை 30 ஆல் பெருக்க வந்தது 1436.30 இதை மிதுன விராசிப்பிரமாணம் 315 ஆல் வகுத்து வந்த ஈவு 4 இது பாகை சேடம் 176.30 இதை 60 ஆல் பெருக்க 10590 இதை 315 ஆல் வகுக்கவந்த ஈவு 33 இது கலை சேடம் 195 இதை 60 ஆல் பெருக்க 11700 இதை 315 ஆல் வகுக்க வந்த ஈவு 37 இதுவிகலை சேடம் நீக்குக இடபம் கழிபட்டதால் இராசி 2 மிதுன விராசியில் சென்ற பாகை கலை விகலைகள் 4.33.37 ஆக இராசி 2.4.33.37 இதற்கு இலக்கினஸ்புட மென்று பெயர்.

பாதசாரஸ்புடம்:—சூரியாதி கிரகங்களின் ஸ்புடங்களைக் கலை செய்து 800 ஆல் வகுத்து வந்த ஈவு கத நட்சத்திரமாம். சேடம் போக்கிய நட்சத்திரங்களின் பாதமாம். உதாரணம்:—சூரியஸ்புடம் 1.27.57.7. இதைக்கலை செய்ய 3477.7. இதை 800 ஆல் வகுத்துவந்த ஈவு 4. சேடம் 277.7. சென்ற நட்சத்திரம் உரோகணி. மிருகசீரிட நட்சத்திரத்தில் சென்ற கலை 277.7 ஆனதினுல் மிருகசீரிடம் 2-ஆம் பாதத்தில் 77 கலையும் 7 விகலையும் சூரியன் சென்றிருக்கின்றுர்.

மற்றவைகளுக்கும் இவ்வாறே கணிக்கப்பெற்றிருக்கின்றன.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சந்திரன்-ரேவதி | 4-ம் | பாதத்தில் | 87 | கலையும் | 22 | விகலையும்சென்றிருக்கின்றார் | | |
| அங்காரகன்-சித்திரை | 2-ஆம் | ,, | 90 | ,, | 52 | ,, | | ,, |
| புதன்–திருவாதிரை | 3-ஆம் | ,, | 93 | ,, | 26 | ,, | | ,, |
| குரு-ஆயில்லியம் | 2-ஆம் | ,, | 162 | ,, | 32 | ,, | | ,, |
| சுக்கிரன்-உரோகணி | 4 ஆம் | ,, | 120 | ,, | 40 | ,, | | ,, |
| சனி-பூரம் | 1-ஆம் | ,, | 14 | ,, | 40 | ,, | | ,, |
| இராகு-விசாகம் | 1-ஆம் | ,, | 44 | ,, | 30 | ,, | | ,, |
| கேது-பரணி | 3-ஆம் | ,, | 44 | ,, | 30 | ,, | | ,, |

**சுதேசத்தின் அகசு அறிய:**—சுதேச மத்தியான்ன சூரியஸ்புடத்தில் † அயனாம்சம் சேர்க்க சாயன சூரியஸ்புடமாம். இதைப் புஜை செய்து புஜையில் இராசியில்லா விட்டால் சரகண்டத்தின் முதல் எண்ணினால் பாகாதிகளைப் பெருக்கி 30-ஆல் வகுத்து வந்த ஈவு விகலை. இதற்குச் சூரியன் சாபலம் என்று பெயர். புஜையில் ஒரு இராசி யிருந்தால் இராசியை நீக்கிப் பாகாதிகளைச் சரகண்டத்தின் இரண்டாவது எண்ணினால் பெருக்கிப் பாகங் களை மட்டும் 30–ஆல் வகுத்து வரும் ஈவுடன் சரகண்டத்தின் முதல் எண் ணைச் சேர்க்கவருவதற்குச் சூரியன் சாபலம் என்றுபெயர். புஜையில் இரண்டு இராசியிருந்தால் இராசிகளை நீக்கிப் பாகாதிகளைச் சரகண்டத்தின் மூன்றாவது எண்ணினால் பெருக்கிப் பாகங்களை மட்டும் 30-ஆல் வகுத்து வந்த ஈவுடன் சரகண்டத்தின் முதல்எண் இரண்டாவதுஎண் (இவ்விரண்டு எண்) களையுஞ் சேர்க்க வருவது சூரியன் சாபலமாம் இந்தச் சாபலங்களை இரட்டித்தவர விநாடியாம். இது சாயன சூரியன் மேஷாதி ஆறு இராசிக்குள் இருப்பின் அஹர்ப்பிரமாணமாகிய 30 நாழிகையுடன் சேர்க்க வேண்டும். சாயன சூரி யன் ஆறு இராசிக்கு மேற்பட்டிருப்பின் அஹர்ப்பிரமாணமாகிய 30 நாழிகை யில் கழிக்க வேண்டும். இப்படிச் செய்ய வருவது சுதேசத்தின் ஜனன காலத் திய அகசாம்.

உதாரணம்:—கதசாலியவாகன சகம் 1842—421=1421 × 3=4263÷ 200=21 பாகை. சேடம் 63 × 60 = 3780÷200 = 18 கலை. சேடம் 180 × 60 =10800÷200=54 விகலை. இந்த 21 பாகை 18 கலை 54 விகலையே அய னாம்சமாம்.

---

† அயனாம்சம் கதசாலிய வாகன சகத்தில் துருவம் 421-ஐக் கழித்து வந்த சேடத்தை 3 ஆல் பெருக்கி 200–இல் வகுக்க வந்த ஈவு பாகை. சேடத்தை 60-ஆல் பெருக்கி 200-இல் வகுக்க வந்த ஈவு கலை. சேடத்தை 60-ஆல் பெருக்கி 200-ஆல் வகுக்க வந்த ஈவு விகலை.

சரகண்டம் அறிதல்:--இலங்கா சரகண்டம் 10.8.10 இதைச் சுதேசத்தின்† பலச்சாயையினுற் தனித்தனிப் பெருக்கி பின்னங்களை நீக்கி மூன்ருவது தொகையை 3 ஆல் வகுத்து ஈவை வைத்துக்கொண்டு சேடத்தை நீக்குக. உதாரணம் : பறங்கிப்பேட்டைக்குப் பலச்சாயை 2·27 இலங்கா சரகண்டம் 10.8.10 இதை 2.27-ஆல் தனித்தனிப் பெருக்க 24.19.24 இதில் 3-வது எண் 24 இதை 3-ஆல் வகுத்த ஈவு 8 இதில் முதல் தொகையிலும் இரண்டாவது தொகையிலும்மூன்ருவது தொகையிலு வந்த பின்னங்கள் நீக்கப்பட்டன. பறங்கிப்பேட்டைக்குச் சரகண்டம் 24.19.8.

Latitude = அக்ஷாம்சம் அறிதல் சுதேசத்திய பலபாவைக் கலைகள் செய்து அது எத்தனை கலையாகிறதோ அந்தக்கலையால் பெருக்கி 60 ஆல் வகுக்க வரும் ஈவு கலை சேடத்தை நீக்கவும். அந்தக் கலையை 9 ஆல் வகுத்து வந்த ஈவை வைத்துக்கொண்டு சேடத்தை நீக்கிவிடவும். சுதேசத்தின் பலபாவை 5 ஆல் பெருக்கி வரும் தொகையில் முன் 9 ஆல் வகுத்து வந்த ஈவாகிய கலையைக் கழிக்க வருவது சுதேசத்திய அக்ஷாம்சமாம்.

உதாரணம் பறங்கிப்பேட்டைக்கு அக்ஷாம்சம் or Latitude. பறங்கிப்பேட்டைக்குப் பலபா 2-27. இதன் கலை 147 இதை 147 ஆல் பெருக்க 21609. இதை 60 ஆல் வகுக்க வந்த ஈவு 360. இதை 9 ஆல் வகுக்க வந்த ஈவு. 40 இது கலை. சுதேச பலபா 2-27ஐ 5 ஆல் பெருக்கிய தொகை 12.15. இதின் முன்வந்துள்ள 40 கலையைக் கழிக்க வந்தது 11·35. இது பறங்கிப்பேட்டையின் உத்தர அக்ஷாம்சமாகும்.

சுதேச இராசி மானம் அறிதல்:—சுதேச சரகண்டத்தின்முதல்-இரண்டு-மூன்ருவது எண்கள் விநாடிகள். சுதேச சரகண்டத்தின் முதல் எண்ணை இலங்கோதய மேட மீன விராசிமான விநாடிகளிற் கழித்து கன்னி துலா விராசிமான விநாடிகளிற் சேர்க்கவும். சரகண்டத்தின் இரண்டாவது எண்ணை இடப கும்ப விராசிமான விநாடிகளிற் கழித்து சிங்க விருச்சிக விராசிமான விநாடிகளிற் சேர்க்கவும். சரகண்டத்தின் மூன்ருவது எண்ணை மிதுன மகர விராசிமான விநாடிகளிற் கழித்து கடக தநுசு விராசிமான விநாடிகளிற் சேர்க்கச் சுதேசத்தின் மேஷாதி இராசி மானங்கள் ஆகும்.

---

† பலச்சாயை முதலியவை யாழ்ப்பாணம் பஞ்சாங்கங்களிலும் கும்பகோணம் ''டத்துப் பஞ்சாங்கங்களிலும் வெளியிடப் பெற்றிருக்கின்றன. (பலச்சாயை = சங்குச்சாயை.)

## பறங்கிப்பேட்டைக்குச் சுதேச இராசிமானம்.

| எண் | இராசிகள் | இலங்கோதய இராசிமானம் | சரகண்டம 1.2.3-வது எண்கள் | விவரம் | பறங்கிப்பேட்டைக்குயேஷா திஇராசிமான விநாடிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | மேஷம் | 278 | 24 | கழிக்க | 254 |
| 2 | விருஷபம் | 299 | 19 | ,, | 280 |
| 3 | மிதுனம் | 323 | 8 | ,, | 315 |
| 4 | கடகம் | 323 | 8 | சேர்க்க | 331 |
| 5 | சிங்கம் | 299 | 19 | ,, | 318 |
| 6 | கன்னி | 278 | 24 | ,, | 302 |
| 7 | துலாம் | 278 | 24 | ,, | 302 |
| 8 | விருச்சிகம் | 299 | 19 | ,, | 318 |
| 9 | தநுசு | 323 | 8 | ,, | 331 |
| 10 | மகரம் | 323 | 8 | கழிக்க | 315 |
| 11 | கும்பம் | 299 | 19 | ,, | 280 |
| 12 | மீனம் | 278 | 24 | ,, | 254 |

**அகசிற்கு உதாரணம்:**—சுதேசமத்தியான்ன சூரியஸ்புடம் 1·28·11·4 இதில் அயனும்சம் பாகை 21.18.54 ஐச் சேர்க்க இராசி 2·19·29·58 இது சாயன சூரியஸ்புடம். இதுவே புஜை. புஜையில் 2. இராசி இருக்கின்றபடியால் இராசியை நீக்கிப் பாகாதிகளை சரகண்டத்தின் 3-வது எண் (8 ஆற்) ணிஞற் பெருக்கி வந்த தொகை 155·59·44. அர்த்தாதிகப்படி 156. இதை 30 ஆல் வகுத்து வந்த ஈவு 5, இதனுடன் சரகண்டம் முதல் எண் 24. 2-வது எண் 19. ஐச் சேர்க்க வருவது 48. இது சூரியன் சரபலமாம். இதை இரட்டிக்கச் செய்ய 96 விநாடி. இதற்கு நாழிகை 1- விநாடி 36. இதைச் சாயன சூரியன் 6 இராசிக்குள்ளிருப்பதினுல் 30 நாழிகையுடன் சேர்க்க வந்தது நாழிகை 31-விநாடி 36. இது ரௌத்திரிஞூ வைகாசிமீ 30 உ ஸ்திரவாரத்தின் அகசு ஆம்.

**சூரிய உதயம்** அறிய:—ஜனனகாலத்திய இரவின் அகசு நாழிகையை 12 ஆல் பெருக்கி 60 ஆல் வகுக்க வரும் ஈவு மணி. மிச்சத்தை 60 ஆல் பெருக்கி வகுக்க வரும் ஈவு மினிட்.

**சூரிய உதயத்திற்கு உதாரணம்:**—ஜனன காலத்தன்று பறங்கிப்பேட்டையின் இரவின் அகசு நாழிகை 28. விநாடி 24. இதை 12 ஆல் பெருக்க 340.48 இதை 60 ஆல் வகுத்த ஈவு 5. இதுமணி. சேடம் 40.48 இதை 60 ஆல் பெருக்கி 60 ஆல் வகுக்க வந்தது அர்த்தாதிகப்படி 41. இது மினிட் இது ரௌத்திரிஞூ வைகாசிமீ 30 உ ஸ்திரவாரம் காலை மணி 5 மினிட் 41-க்குப் பறங்கிப்பேட்டையில் சூரிய உதயம் ஆம்.

**திதிஸ்புடம்:**—சந்திரன் சுத்தஸ்புடத்தில் சூரியஸ்புடம் கழிக்கவும் இயலாவிடின் மண்டலம் சேர்த்துக் கழித்துச் சேடத்தைப் பாகாதிகள் செய்து 12-ஆல் வகுக்க வேண்டும். அப்படி வகுத்து வரும் ஈவு சுக்கிலபட்ச சுத்தப் பிரதமை முதல் சென்ற திதியாம். சேடம் வர்த்தமான திதியில் கதகாலம். அதைப் 12 பாகையில் கழிக்க வருவது போக்கிய காலம். இரண்டையும் விகலை செய்து தனித்தனி 60 ஆல் பெருக்கி வரும் ஈவைச் சந்திர கதிஸ்புடத்தில் சூரிய கதிஸ்புடத்தைக் கழித்து மிச்சத்தைக் விகலை செய்து தனித்தனி வகுத்தால் வரும் ஈவு நாழிகை. சேடத்தை 60 ஆல் பெருக்கி வகுக்க வருவது விநாடி.

**உதாரணம்:**—சந்திரகதிஸ்புடத்தில் சூரியகதிஸ்புடத்தைக் கழித்த மிச்சம் 767.21. இதன் கலை 46041. சந்திரஸ்புடத்தில் சூரியஸ்புடத்தைக் கழித்த மிச்சம் 10-0-10-15. இதன் பாகை 300-10-15. இதைப் 12 ஆல் வகுக்க ஈவு 25 (25 ஆவதாகிய) கிருஷ்ண பக்க தசமி திதி சென்று விட்டது. 0.10.15. இது ஏகாதசி திதியில் கதகாலம். இதை 12 பாகையில் கழிக்க 11.49.45 இது போக்கிய காலம். கதகாலம் 0.1015.10 × 60 + 15 × 60 = 36900. போக்கியகாலம் 01.49.45. 11 × 60 + 49 × 60 + 45 × 60 = 2555100. கதகாலம் 36900 ÷ 46041 = 0 நாழிகை. 48 விநாடி. போக்கிய காலம் 2555100 ÷ 46041 = 55 நாழிகை, அர்த்தாதிகத்துடன் 30 விநாடி.

ஜனன காலத்தில் கிருஷ்ணபக்க ஏகாதசி திதி சென்றது நாழிகை 0.48.
" " " செல்லவேண்டியது நாழிகை 55.30.
கிருஷ்ணபக்க ஏகாதசி திதி பரம நாழிகை 56.18.

**நட்சத்திரஸ்புடம்:**—சந்திரன் சுத்தஸ்புடத்தைக் கலைகள் செய்து ஆல் வகுத்து வந்த ஈவு கத நட்சத்திரம். சேடம் வர்த்தமான நட்சத்திர கதகாலம். இதை 800 கலைகளில் கழிக்க வருவது போக்கிய காலம். இரண்டையும் தனித்தனி விகலை செய்து 60 ஆல் பெருக்கி கத-போக்ய காலமாகக் கொள்க. சந்திர கதிஸ்புடத்தை விகலைகள் செய்து, இதனால் கத காலத்தையும் போக்கிய காலத்தையும் தனித்தனி வகுக்க வரும் ஈவு நாழிகை சேடத்தை 60 ஆல் பெருக்கி வகுக்க வரும் ஈவு விநாடி. இரண்டையும் (சென்ற நாழிகை விநாடிகளையும் செல்ல வேண்டிய நாழிகை விநாடிகளையும்) சேர்க்க வருவது ஜன்ம நட்சத்திரத்தின் ஆதியந்த பரம நாழிகையாகும்.

**உதாரணம்:**—சுத்த சந்திரஸ்புடம் 11.28.7.22. இதைக் கலைகள் செய்ய 21487-22 ÷ 800 = 26;—687·22. உத்திரட்டாதி நட்சத்திரம் சென்று விட்டது. இரேவதி நட்சத்திரத்தில் கதகாலம் 687·22· இதை 800 கலைக

னில் கழிக்க 112-38 இது போக்கியகாலம். கதகாலம் 687 × 60 + 22 × 60 = 2474520. போக்கிய காலம் 112.38 112 × 60 + 38 × 60 = 405480. கத காலம் 2474520 ÷ 49461 = 50 நாழிகை அர்த்தாதிசத்துடன் 2 விநாடி. போக்கியகாலம் 405480 ÷ 49461 = 8 நாழிகை அர்த்தாதிசத்துடன் 12 விநாடி.

| | | |
|---|---|---|
| ஜனன காலத்தில் இரேவதி நட்சத்திரம் சென்றது நாழிகை | | 50.2. |
| ,, ,, | செல்லவேண்டியது நாழிகை | 8.12. |
| | இரேவதி நட்சத்திரம் பரம நாழிகை | 58.14. |

**யோகஸ்புடம்:**—சூரிய சந்திர ஸ்புடங்கள் இரண்டையுங் கூட்டிக் கலை-விகலைகளாகச் செய்து 800 ஆல் வகுத்து வந்த ஈவு சென்ற யோகம், சேடம் கதகாலம். அதை 800 கலைகளில் கழிக்க வருவது போக்கியகாலம், இரண்டையும் தனித்தனி விகலை செய்து 60 ஆல் பெருக்கி சூரியகதியையும் சந்திரகதியையும் சேர்த்து விகலை செய்து அதனுல் தனித்தனி வகுக்க வரும் ஈவு நாழிகை. சேடத்தை 60 ஆல் பெருக்கி வகுக்க வந்த ஈவு விநாடி,

**உதாரணம்:**—சூரிய சந்திர ஸ்புடங்களைச் சேர்த்து வந்த தொகை 1.26.4.29. இதன் கலைகள் 3364·29 ÷ 800 = 4. ஆவதாகிய சௌபாக்கிய நாம யோகம் சென்றுவிட்டது. 164.29 இது சோபன நாம யோகத்தின் கத காலம். 635.31. இது போக்கியகாலம். கதகால விகலையை 60 ஆல் பெருக்கி னது 592140 போக்கியகால விகலையை 60 ஆல் பெருக்கினது 2287860 சூரியகதியையும் சந்திர கதியையும் சேர்த்து விகலையாக்கினது 52881· இத னல் கதகாலம் 592140 ÷ 52881 = 11 நாழிகை அர்த்தாதிகத்துடன் 12. விநாடி. போக்கியகாலம் 2287860 ÷ 52881 = 43 நாழிகை அர்த்தாதிகத்து டன் 16 விநாடி.

| | | |
|---|---|---|
| ஜனனகாலத்தில் சோபன நாம யோகம் சென்றது | | நாழிகை 11-12. |
| ,, | செல்ல வேண்டியது | நாழிகை 43-16. |
| | சோபன நாமயோகம் பரம | நாழிகை 54-28. |

**கரணம்:**—ஒவ்வொரு திதியின் பாதி பாகமே கரண மாதலால் திதி சூட்சுமம் அறிந்தார்க்கு ஒவ்வொரு கரணத்தின் சூட்சுமம் அறிய எது ண்டு. ஆனதால் அதை இங்கே கூறவில்லை.

**உடுதசா சிஷ்டம்:**—ஜன்ம நட்சத்திரத்தில் செல்ல வேண்டிய நாழி கையை விநாடியாக்கி அந்தந்த நட்சத்திரநாதன் தசா வருஷங்களாற் பெருக்கி பரம நாழிகையை விநாடியாக்கி அதனுல் வகுத்து வந்த ஈவே வருஷம். சேடத்தை 12 ஆல் பெருக்கி வகுக்க வருவது மாசம். மிச்சத்தை 30 ஆல் பெருக்கி வகுக்க வருவது நாள், மிச்சத்தை 60 ஆல் பெருக்கி வகுக்க வருவது நாழிகை.

**உதாரணம்:**—ஜன்ம நட்சத்திரம் இரேவதி பரமநாழிகை 58.14. இரேவதி நட்சத்திரம் செல்ல வேண்டிய நாழிகை 8.12. 8 × 60 + 12 × 17 =

8364÷3492=2 வரு, 4 மீ, 21 நாள், 46 விநாடி ஜனன காலத்தில் புதன் மகா தசையில் செல்ல வேண்டியது வரு 2-4-21-46.

† **காலச்சக்கர தசாசிஷ்டம்:**—ஜன்ம நட்சத்திரத்திற்கு நான்கு பாதங்களாக அந்தந்தப் பாதத்திற் சென்ற நாழிகை விநாடிகளை, அந்தந்தத் தசா நாதன் வருடத்தாற் பெருக்கி ஒரு பாதத்திற்குள்ள பரமநாழிகையால் வகுக்க வரும் ஈவு வருஷம் மாசம் நாள் நாழிகை (இரேவதி நட்சத்திரம் நான்காம் பாதத்திற்குச் சவ்ய மீனகுருகால சக்கரதசை).

**உதாரணம்:**—பரமநாழிகை 58.14. பாதம் 1-க்கு நாழிகை $14-33\frac{1}{2}$. ஜனனகாலத்தில் இரேவதி நட்சத்திரம் 4-ம் பாதத்தில் செல்லவேண்டியது நாழிகை 8.12. $8 \times 60 + 12 = 492 \times 10 = 4920$. பரமநாழிகை $14 \times 60 + 33 = 873$. $4920 \div 873 =$ வரு 5 மீ 7 நாள் 18 அர்த்தாதிகத்துடன் நாழிகை 52 ஜனனகாலத்தில் சவ்யமீன குருதசை (பாக்கி) செல்லவேண்டியது வரு 5.7.18.52.

**சூளிகாதி தூமாதி உபக்கிரகங்களின் ஸ்புடம்:**—இதன் விவரம் என்னால் வெளியிடப் பெற்றிருக்கும் பலதீபிகை 25 ஆம் அத்தியாயத்தில் மிகத் தெளிவாய்க் கூறப் பெற்றுளபடியால் ஆங்கே கண்டு கொள்க.

## *தசவர்க்கச் சக்கரம் வரைதல்

இதுவரையில் சூரியாதி நவக்கிரகங்களின் சுத்தஸ்புடங்களைச் செய்து கொண்டோம். இனி கிரகாதியர்கள் இருக்கவேண்டிய இடங்களில் அவர்களை வைத்தெழுதவேண்டும். இவை, இராசி-ஹோரா-திரேகாணம்-சப்தமாம்சம்-நவாம்சம்-தசாம்சம்-துவாதசாம்சம்-சோடசாம்சம் (கலாம்சம்) திரிம்சாம்சம்-சஷ்டியாம்சம் எனப் பத்து வகைப்படும்.

| | | | |
|---|---|---|---|
| சந்தி. | கேது. | சூ. சு. | ல புதன் |
| | 1. | | குரு. |
| | இராசி. மிதுனம். | | சனி |
| | | இராகு | செவ். |




† இதன் விவரம் என்னால் இரண்டாம் பதிப்பாக வெளியிடப் பெற்றிருக்கும் யந்த்ரேஸ்வரீய மென்னும் பலதீபிகை 22-ஆவது அத்தியாயத்தில் விரிவாய்ப் பலனுடன் கூறப்பெற்றிருக்கின்றது.

*இந்தத் தசவர்க்க சக்கரம் வரைதல் பற்றி என்னால் வெளியிடப் பெற்றுள்ள பலதீபிகை மூன்றாவது அத்தியாயம் மிகத் தெளிவாய்க் கூறும். மற்ற விவரங்களை ஆங்காங்கே கண்டு கொள்க.

| | | | |
|---|---|---|---|
| குரு | | செவ் | ல இரா. |
| | 3 திரேக்காணம் மிதுனம். | | |
| சுக் | | | |
| சூ.சனி கே | சந்தி | புதன் | |

| | | | |
|---|---|---|---|
| சந்தி. | சுக். | சூரி. | குரு. |
| இரா | 4 சப்தமாம்சம். கடகம். | | ல |
| | | | கே |
| | சனி | | செவ் பு |

| | | | |
|---|---|---|---|
| சந்தி. | இரா. | | |
| புதன். | 5 நவாம்சம் விருச்சிகம். | | சுக். |
| குரு. | | | சனி. |
| | ல. | கேது | சூ.செ. |

| | | | |
|---|---|---|---|
| | இரா. | | |
| செவ். | 6 தசாம்சம். கடகம். | | ல |
| | | | சந்தி சுக் |
| சனி. | | சூ. பு. கு. கே | |

| | | | |
|---|---|---|---|
| | சூ. குரு | | இராகு |
| சந்தி. | 7 துவாதசாம்சம் கடகம். | | ல |
| சு.சனி | | | செவ் |
| கேது. | புதன். | | |

| | | | |
|---|---|---|---|
| இரா. கேது. | செவ் | சூரி. சந்தி. | ல |
| | 8 | | குரு. சுக். |
| | | | |
| | புதன். சனி. | | |

| | | | |
|---|---|---|---|
| | ல | | இரா. கேது. |
| | 9 திரிம்சாம்சம். மேஷம். | | |
| குரு சுக்ரன் | | | |
| புதன் சனி | சூ. செ சந்தி | | |

10. சஷ்டியாம்சம்.

சூரியன் 56-க்கு ரக்ஷோகணாம்சம்.
சந்திரன் 57-க்குக் குபேராம்சம்.
அங்காரகன் 57-க்குக் குபேராம்சம்.
புதன் 30-க்கு மந்ததாத்மசாம்சம்.
குரு 46-க்குக் காலாம்சம்.
சுக்கிரன் 45-க்கு அஹியம்சம்.
சனி 28-க் குக்ஷிதீஸ்வராம்சம்.
இராகு-கேது 42-க்கு மூக்கியாம்சம்.
இலக்கினம் 10-க்கு அக்னியம்சம்.

# பல விஷயம்.

இனிக் கிரகங்களின் பலங்கள் முழுவதுங் கணிக்க வேண்டிய விவரங்கள் யாவும் ஸ்ரீபதி ஜாதக கர்மபத்ததியில் தெளிவாய்க் கூறப்பெற்றுள்ளன. அப்பலங்களின் உள்ளுறைகளுட் சில வருமாறு :—

பாவபல அத்தியாயத்தில்:—நத உந்நத விவரங்கள்-தனகர்ம-ரிணகர்ம பாவஸ்புட கணனம்-4.10-ஆம் பாவங்களின் கணனங்கள்-இவைகளை யொட்டிய ஏனைய விவர கணனம்-பாவச் சக்கர கணனம்-பாவசந்தி கணனம்-பாவ பல கணனம்-ஆரோகண அவரோகணபல கணனம் முதலியனவும்,

திருஷ்டிபல அத்தியாயத்தில்,—கிரக பார்வையின் அளவை கணனம் அங்காரக-குரு-சனி இவர்கள் நோக்குகளிற் கவனிக்க வேண்டிய விசேஷ திருஷ்டி கணனம் முதலியனவும்,

ஷட்பல அத்தியாயத்தில்—ஷட்பல கணிதங்களான (1-ஆவது) உச்ச பல கணனம்-சப்தவர்க்கஜபல கணனம்-யுக்மயாம்சக கதபல கணனம்-கண்டாதிபல கணனம்-பாரந்தமத்திய முகபல கணன ஐக்கியங்களாகிய ஸ்தானபல கணனங்களும், (2-ஆவது) திக்குபல கணனமும், (3-ஆவது) தினராத்திரிபல கணனம்-பட்சபல கணனம்-அன்ஹஸ் திருபாக பல கணனம்-வருஷ-மாச-தின-ஹோராபல ஐக்கியங்களாகிய காலபல கணிதங்களும், (4-ஆவது) அயன பல கணனம்-சேஷ்டாபல கணனம்-கிரக கிராந்திபல கணனம் ஸ்புடகிராந்தி பல கணனம்-யுத்தபல கணன ஐக்கியங்களாகிய சேஷ்டாபல கணிதங்களும், (5-ஆவது) நைஸர்க்கிகபல கணனமும், (6-ஆவது) திருஷ்டிபல (திருக்) கணிதமும்-தன்வாதி துவாதச பாவங்களின் திக்குபல கணனம், ஷட்பல கணனம் முதலியனவும்,

இஷ்ட கஷ்டபல அத்தியாயத்தில்—இஷ்ட கஷ்ட பலகணனம்-உச்ச ரசுமிகணனம் சூரிய சேஷ்டா கேந்திர கணனம்-சந்திர சேஷ்டா கேந்திர கணனம்-சேஷ்டா ரசுமி கணனம்-உச்சபல-சேஷ்டாபல கணனம்-இஷ்ட குணித ஷட்பல கணனம்-கஷ்டகுணித ஷட்பல கணனம்.இஷ்ட குணித கிரகதிருஷ்டி கணனம்-கஷ்ட குணித கிரக திருஷ்டி கணனம்-இஷ்ட குணித பாவதிருஷ்டி கணனம்-கஷ்ட குணித பாவதிருஷ்டி கணனம், இஷ்ட குணித சப்தவர்க்கஜ பல கணனம்-கஷ்ட குணித சப்தவர்க்கஜ பல கணனம், இஷ்ட குணித சப்தவர்க்கஜ ஸ்புடகரணபல கணனம், கஷ்ட குணித சப்தவர்க்கஜ ஸ்புடகரணபல கணனம் முதலியனவும்,

ஆயுர்த்தாய அத்தியாயத்தில் :—உச்ச குணக கணனம்-சேஷ்டா குணக கணனம்-ஸ்புட குணக சணனம்-ஆச்ரய குணக கணனம்-கர்ம யோக்கிய குணக கணனம் - ஆயுஷ்கலா கணனம் - அம்சாயுர்த்தாய - பிண்டாயுர்த்தாய- நிஸர்க்காயுர்த்தாய-ஜீவ சர்மோதி தாயுர்த்தாய கணனங்கள்-மேற்கூறிய அம்சாயுர்த்தாய-பிண்டாயுர்த்தாயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கிரகங்கள் ஒரிராசியிலிருக்கும்போது சக்கரார்த்தபாத ஹானியால் வருகணனம்- சக்கரபாத ஹாரண விஷயமாய்த் தேவலர் கூற்று-இலக்கினத்தில் தீயார் நிற்கு ஞான்று பிண்ட நிஸர்க்காயுர்த்தாய குறைதற் கணனம்-நிஸர்க்காயுர்த்தாய கணனம்-பிரஸ்தாப மூவகை ஆயுர்த்தாயங்களும் இது விஷயமாய் ஸ்ரீ நீலகண்டர் அபிப்பிராயம்- ஜீவசர்மாயுர்த்தாய கணனம்-பிண்டநிஸர்க்க ஜீவசர்மாயுர்த்தாயங்களில் இலக்கினாயுஸ் கணனங்கள்-இதுவிஷயமாய் விசேஷ நிலைகளில் ஸ்ரீதரர் முதலியோர்களின் அபிப்பிராயங்கள்-இவைகளைப்பற்றிய கணனவகை முதலியனவும்,

அரிஷ்ட பங்க நிர்ணய அத்தியாயத்தில்:—அரிஷ்ட- அரிஷ்ட பங்க நிர்ணய கணிதங்கள் இது விஷயமாய் ஸ்ரீதரர்-கேசவதைவக்ஞர்-ஸ்ரீ கலியாண வர்மா மாண்டவ்யர் முதலியோர்களின் அபிப்பிராயங்கள் முதலியனவும்,

தசாந்தர தசா அத்தியாயத்தில் —தசா காலங்களில் நடைபெறும் உத்தமோத்தம உத்தம மத்திம அதம தசா கணிதங்கள்-என்னிருவகைப்படும் தசா பாக கணிதங்கள்-தசாக்கிரம கணிதங்கள்-அம்சகாயுர்த்தாயத்தில் தசாவரிசை கணனம்-பிண்டாயுர்த்தாய-நிஸர்க்காயுர்த்தாய தசாவரிசை கணனம்-அந்தர தசா கிரம கணிதம்-விதசா உபதசா கிரம கணிதம்-தசா அந்தர தசா முதலியவைகளில் ஆரம்பகால இறுதிகால கணனம் ஆகிய இவை முதலியனவும்,

பிரகீரண அத்தியாயத்தில்.—பலவகை சுபாசுப பலங்கள்-அஷ்டவர்க்க பலங்கள்-கிரக ரசுமிகளின் ராஜயோக பலம்-தசாகால அரிஷ்டம்-அரிஷ்ட பங்கம்-அரிஷ்ட பயாதிகாலம்-அரிஷ்டபய நிவர்த்தி-ஸ்திரீஜாதக பலம்- கிரியாண பல விஷயம்-இக்கணித சாஸ்திரத்தின் ஆராய்ச்சிக்கு வேண்டிய சில விஷயங்கள் ஆகிய இவைகளே. சுபம். சுபம் சுபம்.

அச்சில்

இந்நூற் பிரதி 1-க்குக் கிரயம் ரூபா [redacted]. வி. பி. செலவு பிரத்தியேகம்.

## சித்தாந்த திருக்கணிதம்

### முற்றும்.

சகலகலாவல்லவன் திருவடி வாழ்க.

---

மனோரஞ்சினி பிரஸ், சௌகார்பேட்டை, சென்னை.